REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மார்ச் 13 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN தිනකරන්
1932 - 2022
வரு. 91 இல. 61 | Monday 13, March, 2023 | 20பக்கங்கள் | 50/-

## ஜூன் மாதத்தில் பஸ் கட்டணம் குறையும்?



அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதையடுத்து, எரிபொருள் விலை குறைக்கப்பட்டால், ஜூன் மாத பஸ் கட்டண திருத்தத்தில், கட்டணக் குறைப்பு செய்யப்படக்கூடுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. 06

## லண்டன், பொதுநலவாய தலைமையகத்தில் வெளிநாட்டு அமைச்சர்கள் கூட்டம்

### அமைச்சர் அலி சப்ரி இன்று பங்கேற்பு




லண்டனிலுள்ள மார்ல்பரோ மாளிகையிலமைந்துள்ள பொதுநலவாய தலைமையகத்தில் நடைபெறவுள்ள 22ஆவது பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில், வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி பங்கேற்கவுள்ளார். பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்துக்கு முன்னதாக, பொதுநலவாய உறுப்பு நாடுகளை ஒன்றிணைக்கும் 06

### நிதி நெருக்கடியால் காலதாமதமான

## 36,000 புதிய மின் இணைப்புகள் 06 வாரங்களுக்குள் வழங்கப்படும்



இலங்கை மின்சார சபையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக காலதாமதமான 36,000 புதிய மின்சார இணைப்புக்களையும் 06 வாரங்களுக்குள் பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

தற்போதுள்ள நிதிப்பிரச்சினை காரணமாக புதிய இணைப்புகளை வழங்குவதற்கு உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக மின்சாரக் கட்டணத்தை அதிகரித்திருப்பதால் மின்சார சபையின் 06

## தொல்பொருள் ஆலோசனை குழுவில் புதிய உறுப்பினர்கள்

### அமைச்சர் விதுரவினால் வர்த்தமானி வெளியீடு



தொல்பொருள் ஆலோசனைக் குழுவுக்காக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் இது தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு வருட காலப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவின் மூலம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. 19 உறுப்பினர்கள் அடங்கிய 06

## விமர்சனங்களை ஏற்க நாம் தயார் சேறு பூசல்களை ஏற்க முடியாது

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச



லோரன்ஸ் செல்வநாயகம், ஊவா வெல்லஸ்ஸ விசேட நிருபர்

கட்சி என்ற ரீதியில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம். எனினும் சேறு பூசும் செயற்பாடுகளுக்கு நாம் எதிரானவர்களென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நிரூபிக்க முடியாதவற்றை வெளியிட்டு மக்களை ஏமாற்றுவதற்கு எதிர்க்கட்சியினர் செயற்பட்டு வருகின்றனரென குறிப்பிட்டுள்ள அவர், கிராமப்புற மக்கள் எப்போதுமே எம்முடனுள்ளனர் என்றும் எதிர்வரும் தேர்தலிலும் அனைத்து மக்களும் பொதுஜன பெரமுன வின் வெற்றியை உறுதி செய்வரென்றும் அவர் தெரிவித்துள்ளார். மொனராகலை மாவட்ட பொது ஜன பெரமுன கட்சியின் கூட்டத்தில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார். 06

## கோட்டாபய அரசின் வரிக் குறைப்பால்

# 12 இலட்சம் வருமான வரி கோவைகள் செயலிழப்பு



### புதியவற்றை தேடாமல் அவற்றை மீள செயல்படுத்தினால் வரிச் சுமைக்கு தீர்வு காணலாம்

### பொருளாதார ஆய்வாளர் பேராசிரியர் நிஹால் ஹென்னாயக்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட வரிக் குறைப்பினால் நாட்டில் 1.6 மில்லியனாக இருந்த வரிக் கோவைகள் நான்கு இலட்சமாக குறைவடைந்ததாக கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் 06

### கோப் 28 மாநாடு 2023 -

## U.A.E, எகிப்து தூதுவர்களுடன் அமைச்சர் நஸீர் அஹமட் சந்திப்பு



இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் எகிப்து தூதுவர்களுடன் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கோப் 28 மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.இம்மாநாடு, இவ்வருடம் (2023) ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது. தற்போது கோப் 27 மாநாட்டின் தலைமைப்பதவி 06

### ரயில், பஸ் உள்ளிட்ட

## பொதுப் போக்குவரத்து துறை வேலை நிறுத்தத்தில் இல்லை

### அத்தியாவசிய சேவையாகவும் அறிவிப்பு



நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமையிலுள்ள இச் சந்தர்ப்பத்தில் பொதுப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தால் நாட்டில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் 06



விசேட அழைப்பின் பேரில் தமிழ்நாடு சென்றிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு அவரை சந்தித்து வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்.



26 வயதுடைய இளைஞனின் வயிற்றில் வொட்கா போத்தல்
மருத்துவர்கள் அதிர்ச்சி : நேபாளத்தில் சம்பவம் 03



யாழ். கடற்பரப்புக்குள் அத்துமீறிய 16 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது
காரைநகர், பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் 03



சீனத் தலைநகர் பீஜிங்கில் மழையுடன் ‘புழு மழை’
போலிச் செய்தியென சீன பத்திரிகையாளர் மறுப்பு 03



தமிழ்நாடு நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் சென்னை, எலாஷா நட்சத்திர ஹோட்டலில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின பெண்கள் விருது விழாவில் நிகழ்வுக்கு முன்னிலை வகித்த இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், திருமதி. மரியம் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து வசந்தம் தொலைக்காட்சி செய்தி பிரிவைச் சேர்ந்த கவிதா பாரதிக்கு விருது வழங்கி கௌரவமளிப்பதையும், நிறுவனத்தின் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன், செயலாளர் எம்.சாதிக் பாட்ஷா ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம். இன்பாஸ் சலாஹுதீன்)

### விவசாயத்துக்கு எரிபொருள் வழங்கல்

## மானியம் கிடைக்காத பகுதிகள் குறித்து விசாரணை ஆரம்பம்



விவசாயத்துக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் கிடைக்காத பகுதிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு விவசாயிக்கும் எரிபொருள் மானியத்தை வழங்குமாறு அரசாங்கம் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அங்குனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் 06

### தபால்மூல வாக்கெடுப்புக்கு தேவையான

## வாக்குச்சீட்டுக்களை அச்சிட்டு ஒப்படைப்பது தாமதமாகலாம்



வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி தாமதமாக கிடைக்கப் பெற்றால் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பது தாமதமடையலாமென அரச அச்சகதிணைக்கள தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் நடவடிக்கைகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு 06

## வயலுக்குள் உழவு இயந்திரம் கவிழ்ந்து இளைஞர் மரணம்

### மட்டு. ஆயித்தியமலையில் சம்பவம்




வெல்லாவெளி தினகரன் நிருபர்

மட்டக்களப்பில் வயல் உழுதுகொண்டிருந்த நபர் ஒருவர் உழவு இயந்திரம் வயலுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வயலில் உழுது கொண்டிருந்த போதே 06

## ரயிலில் குழந்தையை கைவிட்டு தப்பிச்சென்ற இளம் ஜோடி கைது

### 15 ஆம் திகதி வரை விளக்கமறியல்

### கையடக்க தொலைபேசிகள் பொலிஸார் வசம்




லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மட்டக்களப்புக்கு பயணிக்கவிருந்த ரயிலின் மலசல கூடத்தில் குழந்தையொன்றை போட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ள குழந்தையின் இளம் பெற்றோர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதன் பின்னர் அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். 06

## காட்டுக்குள் கொட்டப்பட்ட ஒரு இலட்சம் முட்டைகள்

### நுகர்வோர் அதிகார சபை கண்டுபிடிப்பு



பழுதடைந்தவையென சந்தேகிக்கப்படும் சுமார் ஒரு இலட்சம் முட்டைகள் கொண்டு வரப்பட்டு மஹகும்புக்கடை வல்பலுவ வனப் பிரதேசத்தில் கொட்டப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலகம் 06

# நகர்வலம்



### தென் மாகாண பாடசாலைகளுக்கு;

## 2022ஆம் ஆண்டிற்கான இறுதியாண்டு பரீட்சை இன்று முதல் ஆரம்பம்

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாண கல்வித் திணைக்களம் 2022 ஆம் ஆண்டிற்கான இறுதியாண்டுப் பரீட்சையை இன்று 13ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தரம் 6 முதல் 11 வரையிலான வகுப்புக்களுக்கே இப்பரீட்சை பொதுப் பரீட்சையாக நடைபெறவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு நேர அட்டவணையும் பாடசாலைகளுக்கு

அனுப்பப்பட்டுள்ளது.

6, 7, 8 தரங்களுக்கு பிற்பகல் வேளையிலும் 9, 10, 11ஆம் தரங்களுக்கு முற்பகல் வேளையிலும் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்ப நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. நேர அட்டவணைக்கு உட்படாத பாடங்கள் இருப்பின் அதனை பாடசாலை மட்டத்தில் வினாக்களை தயாரித்து

பரீட்சை நடத்தப்பட வேண்டுமென தென் மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சை வினாப்பத்திரப் பொதிகள் பரீட்சை நேரத்துக்கு அரை மணித்தியாலங்களுக்கு முன்பே பிரிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது..

### அநுராதபுரம் மாவட்டத்தில்

## சிறுபோக பயிர்ச்செய்கையின் போது பயறு, நிலக்கடலை பயிரிட முடிவு

### விவசாய திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்**

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தின்போது பயறு மற்றும் நிலக்கடலை பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்கள பணிப்பாளர் அலுவலக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக பயறு மற்றும் நிலக்கடலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிர் செய்கையினை மேற்கொள்வதற்காக வேண்டி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களை தெரிவு செய்து அரசாங்கத்தினால்



நிவாரணம் வழங்கி பயிர்செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக பயறு மற்றும் நிலக்கடலை பயிர்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அநுராதபுரம் மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலக உயரதிகாரி மேலும் தெரிவித்தார்.

## 11/2 வயது சிறுமியை தாக்கிய தந்தை கைது

### எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஒன்றரை வயது சிறுமியை கொடூரமாக தாக்கி சித்திரவதை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான தந்தை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பகமூன தர்கல்லேவ கமஎல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய மஹேஷ் ரொஹான் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த (10) ஹிங்குரகொட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுமி பாதுகாப்பிற்காக பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பகமூன பொலிசார் தெரிவித்தனர்.

## மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதி; காலி பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா கலாபீடத்திற்கு விஜயம்

**(பேருவளை விசேட நிருபர்)**

மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கையூம் கடந்த வியாழக்கிழமை (9) காலி கோட்டையில் உள்ள அல் பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் கீழ் இயங்கும் இக் கலாபீடம் இலங்கையில் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த அரபுக் கல்லூரிகளில் ஒன்றாகும்.

கலாபீட முதல்வர் மௌலவி முஹம்மத் ரஸூக் (பஹ்ஜி) தலைமையில் மாலைத்தீவு முன்னாள் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இதன் போது கலாபீட நிர்வாகிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் பங்குபற்றினர்.

இலங்கையில் உள்ள முன்னணி அரபுக் கல்லூரியான பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாவின் பழைய மாணவரான தனக்கு, மாலைத்தீவின்



ஜனாதிபதியாக பதவி வகிக்கக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும் என்றும் அந்த கௌரவம் இக் கலாபீடத்திற்கு கிடைப்பதாகவும் தெரிவித்த அவர்,

கல்லூரியில் படித்த தனது இளமைக் காலத்தையும் இதன் போது ஞாபகமூட்டினார்.

தான் படிக்கும் காலத்தில் மூத்த உலமாக்கள் தியாகத்துடன் தனக்கு ஆன்மீகக் கல்வி புகட்டியதையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.அரபு மொழியையும், இஸ்லாமிய சட்ட திட்டங்களையும்,ஆன்மீகக் கல்வியையும் சிறப்பாக கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிட்டியதாகவும் அவர் மேலும் கூறினார்.

85 வயதுடைய அப்துல் கையூம், 70 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து இக் கலாசாலையில் கல்வி கற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

## துருக்கி நாட்டுக்கு ரூ. 10 மில். உதவி



**(தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)**

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கிய மக்களுக்கு வழங்கவென 'லைட் பொ லைப்ஃ' அமைப்பின் தலைவர் ஸெய்ன் ஹாஜியார் பரிந்துரையில் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையை அமைப்பின் தவிசாளர் ஜெயினுலாப்தீன் இலங்கைக்கான துருக்கியின் தூதுவர் மெடம் டிமெட் செகர்சியோக்லவிடம் கையளித்தார். இந்நிகழ்வு கடந்த 09ஆம் திகதி கொழும்பிலுள்ள துருக்கி தூதுவராலயத்தில் நடைபெற்றது. இதன்போது அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களான தொழிலதிபர் பைசல் புஹாரி, எம் ஐ எம். இம்தியாஸ், உஸ்மான் ஜௌபர், தொழிலதிபர் அஸ்ரின் ஸஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# குவைத் நாட்டின் நிதியுதவியில் கடையாமோட்டை தேசிய பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடம்







**(தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)**

மதுரங்குழி கடையாமோட்டை தேசிய பாடசாலையில் குவைத் அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு இரு மாடிகளைக்கொண்ட 08 வகுப்பறைக் கட்டிடம் (08) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வில் கொழும்பிலுள்ள குவைத் தூதரக பிரதித் தூதுவர் அப்துல் அசீஸ் அல் அத்வானி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இக் கட்டடத்தினை திறந்து வைத்தார். கல்லூரி அதிபர் எம்.எச்.எம் தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏற்பாட்டாளரும் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நூருல்லாஹ் (நளீமி), குவைத் தூதரக அதிகாரி அஷ்ஷெய்க் எம். பிர்தௌஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எச்.எம். றியாஸ், ஆப்டீன் எஹியா மற்றும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள், அபிவிருத்திக்குழு, பிரதேச அரசியல் பிரமுகர்கள் பெற்றோர்கள், மாணவ மாணவிகளும் கலந்து சிறப்பித்தனர். இக் கல்லூரியில் 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர். இக்கல்லூரியின் பௌதீக வளப்பற்றாக்குறையை நிவர்த்திக்க வழிவகுத்த குவைத் அரசாங்கம், குவைத் நன்கொடையாளர் நூறா அல் ஹைசு, மற்றும் திட்டப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் ஆகியோருக்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச். றியாஸ் நன்றி கூறினார்.

## திருடப்பட்ட மோ. சைக்கிளுடன் பொலிஸ் அதிகாரி கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

திருடப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் இராணுவப் படைப்பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் மற்றுமொரு நபரையும் கடந்த (10) கைது செய்துள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்தனர். அநுராதபுரம் சாலியபுர பகுதி இராணுவ முகாமில் பணியாற்றிவரும் 28 வயது முன்னாள் உளவுத்துறை அதிகாரியாக கடமையாற்றி தற்போது இராணுவ பொலிஸ் உத்தியோகத்தராக கைது செய்யப்பட்ட நபர் பணியாற்றி வருகின்றார். கைது செய்யப்பட்டுள்ள மற்றைய நபர் மஹவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவராவர். குறித்த. இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த பெப்ரவரி 27 ம் திகதி அநுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடி அதனை விற்பனை செய்வதற்காக மஹவ பகுதியைச் சேர்ந்த நண்பர் ஒருவரிடம் ஒப்படைத்திருந்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி புதிய அமைப்பாளர் நியமனம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் புத்தளம் தொகுதிக்கான செயற்குழு கூட்டமும், புதிய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (11) பாலாவி ஹுஸைனியாபுரத்திலுள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ஸப்வான் ஸல்மான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் கலந்துகொண்டார். இதன் போது, பாருக் முஹம்மது ராபி ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் புத்தளம் தொகுதி அமைப்பாளராகவும், கல்லடிப் பிச்சை முஹம்மது ரபீக் கற்பிட்டி பிரதேச அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த இருவருக்கும் நியமனக் கடிதங்களும் தலைவரினால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன.

## சமூகத்துக்கு பங்களிப்பு செய்த பெண்கள் கௌரவிப்பு



**ருஸைக் பாரூக்**

சமூகத்தின் பல்வேறு அம்சங்களில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக கொழும்பு வடக்கு இன்டராக்ட் கழகம் ஒழுங்கு செய்த 'She Aspires' விருது வழங்கும் நிகழ்வு கலதாரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. ஹட்டன் நேஷனல் வங்கியின் தலைவி அருணி குணதிலக இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார். இளைஞர் விவகார சேயா உரலகமகே, வர்த்தகம் மற்றும் தொழில்முனைவு ஷப்ரா கரீம், விஞ்ஞானம் ஹேமவருணி பெர்னாண்டோ, கல்வி ஜானகி ரூபசிங்க, விளையாட்டு எச்.பி. இமாஷி ஹிமாயா ஹேரத், கலை மற்றும் பொழுதுபோக்கு பாலன் என்ட்ரியா, ஊடகம் தசுனி அதாவுத, சட்டம் நவுஷல்யா ராஜபக்ஷ, மருத்துவம் கலாநிதி ஷானிகா அர்செகுலரத்ன மற்றும் சமூக சேவைகள் ஜெயந்தி குரு உதும்பலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீனன்கோட்டை பாலர் பாடசாலையின் கலை விழாவும் பரிசளிப்பும்



**(பேருவளை விசேட நிருபர்)**

பேருவளை சீனன்கோட்டை (KIDZ TOUCH MONTESSORI SCHOOL) பாலர் பாடசாலையின் வருடாந்த கலை, கலாசார, விளையாட்டு நிகழ்ச்சியும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

அதிபர் பஸ்மியா ரிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இளைஞர் பாராளுமன்ற பிரதி அமைச்சர் அஹமத் ஸாதிக் பிரதம அதிதியாகவும், பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

சிறார்களின் திறமைகளை அதிதிகள் இதன் போது பெரிதும் பாராட்டினர்.

பெற்றோர்கள், பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

## தவக்கால சிந்தனை



# வாழ்வுப் பயணத்தை பாதிக்கும் மமதை

(லூக்கா 4: 24–30)

தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் பாதம் பதித்துள்ளோம்.

இயேசு தமது வளர்ப்பிட ஊராகிய நாசரேத்து தொழுகைக் கூடத்திற்கு செல்கிறார். அங்கே இறைவாக்கினர் ஏசாயாவின் ஏட்டுச்சுருளைப் பிரித்துப் படிக்கின்றார். அதற்கு விளக்கமும் அளிக்கின்றார்.

ஆனால் அங்கு அவரது சொந்த மக்களால் அவர் ஏற்றுக்கொள்ளப் படாமல் புறக்கணிக்கபடுகின்றார். இதனையே இன்றைய நற்செய்தி படம்பிடித்துக் காண்பிக்கிறது.

அவரே கூறுவது என்னவெனில் இறைவாக்கினர்கள் அவர்களது சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இயேசு அங்கு தமது சொந்த மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்படாமைக்கு இரண்டுகாரணிகள் முன்னிலை பெறுகின்றன.

முதலாவதாக அவர்கள் மத்தியில் காணப்பட்ட ஆணவம். அவர்களது ஆணவம் அவரை மீட்பராக, மெசியாவாக கண்டுகொள்ள முடியாமல் தடுக்கின்றது. இயேசுவை அவரது குடும்ப, கோத்திரப் பின்னணியினைக் கொண்டு மதிப்பீடு செய்கிறார்கள்.

ஆதனால் அவரிலுள்ள நன்மைத் தனத்தினை காணமுடியாமற் போகிறது. இரண்டாவதாக இறைவனின் கொடை தங்களுக்கு மட்டுமே உரித்தானது என்கிற மமதையில் அது எவ்வாறு பிறவினத்தாருக்கு வழங்கப்பட முடியுமென்கிற கேள்வினையும் எழுப்புகின்றார்கள்.

இத்தகைய ஆணவம், மமதை கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தையும் பாதிக்கின்றது. அதனால் அடுத்தவர்களிலுள்ள நல்லவற்றைக்காண மனது மறுக்கிறது. எல்லோரிலும் நல்லது உண்டு என்பதை தவக்காலத்தில் உணர்வோம், ஏற்றுக்கொள்வோம்.

அருட்தந்தை நவாஜி...

# ரயில் பாதைக்கருகில் வசித்த சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கு 150 புதிய வீடுகள்

## வீட்டு உரிமை சான்றிதழ்கள் அமைச்சர் பந்துல வழங்கினார்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி திட்டத்தின் கீழ் கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் செயல்படுத்தப்படும் களனி வெலி ரயில் பாதை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்படும் சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதிய வீடுகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் மாளிகாவத்த 'லக்கி ஹிருசெவன' மற்றும் 'சியபத் செவன' அடுக்கு மாடி வீட்டுத் திட்டத்தின் வீடுகளை பெறும் 150 பேருக்கு உரிமை சான்றிதழ் பத்திரம் வழங்கும் நிகழ்வு அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்றது.



சீவலிபுர தொடக்கம் நாரஹேன பிட்டிய வரையில் வசிப்பவர்களே இந்த வீடுகளுக்கான உரிமை பத்திரம் பெறுவதற்கான தகுதியை பெற்றிருந்தனர். இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நீண்ட காலமாக ரயில்வேக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் சட்ட விரோதமாக வசிக்கும் மக்களுக்கு வீடுகளின் உரிமையை பெற்றுக் கொடுக்கும் இன்றைய தினம் வரலாற்றின் பாதையை மாற்றும் முக்கியமான தினமாகும். சட்டவிரோதமாக ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் மற்றும் வனங்களை பயன்படுத்துபவர்களை எவ்வித 06

### ஊழியருக்கான மேலதிக கொடுப்பனவு

# 20 மில்லியன் ரூபாவை சேமிக்கும் நோக்கிலேயே QR தினம் மாற்றம்



சுமார் 20 மில்லியன் ரூபாவை சேமிக்கும் நோக்கிலேயே QR குறியீட்டின் மூலமான எரிபொருள் ஒதுக்கீட்டை புதுப்பிப்பதற்குரிய தினம் செவ்வாய்க்கிழமையாக மாற்றப்பட்டிருப்பதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பணியாற்றும் எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவான 20 மில்லியன் ரூபாவை சேமிக்கும் நோக்கிலேயே இந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் 06

# 26 வயதுடைய இளைஞனின் வயிற்றில் வொட்கா போத்தல்

## மருத்துவர்கள் அதிர்ச்சி: நேபாளத்தில் சம்பவம்

நேபாளத்தில் 26 வயது இளைஞரின் வயிற்றிலிருந்து வொட்கா போத்தலொன்றை அறுவை சிகிச்சை மூலம் மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

நேபாளம், குஜாரா நகராட்சியை சேர்ந்த நுர்சத் மன்சூரி என்பவருக்கு அண்மையில் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. உடனே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, அவரின் வயிற்றில் போத்தல் இருப்பதைக் கண்டு மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். பின்னர் இரண்டரை மணி நேர அறுவை சிகிச்சைக்கு பிறகு நுர்சத் மன்சூரியின் வயிற்றிலிருந்த 06

# ஜா எல அதிவேக நெடுஞ்சாலை அருகே சொகுசு வாகன விபத்து



## நவீன ரக துப்பாக்கி மீட்பு

சீதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள இரவு விடுதியில் ஏற்பட்ட கைகலப்பின் பின்னர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த ஒருவர் செலுத்திவந்த மோட்டார் வாகனத்தில் ஜா எல பொலிஸ் நிலையத்துக் கருகில் (11) அதிகாலை விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான அந்த வாகனத்திலிருந்து நவீன ரக துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக ஜா எல பொலிஸார் தெரிவித்தனர்.

மெகசின் உடனான தானியங்கி துப்பாக்கிக்கு சமனான துப்பாக்கி 09.எம்.எம் ரக குண்டுகளை பயன்படுத்தக் கூடிய துப்பாக்கியென பொலிஸார் தெரிவிக்கின்றனர். நீர்கொழும்பிலிருந்து கொழும்பு 06

# தினகரன் விளம்பரப்பிரிவு அஸ்ரிஹாவின் தகப்பனார் எம்.கே.எம். அஸ்மி காலமானார்

முன்னாள் வெலிகம பிரதேச சபை உறுப்பினர் எம்.கே.எம். அஸ்மி (வயது 72) வெலிகம கப்புவத்தையிலுள்ள தனது இல்லத்தில் நேற்று (12) காலமானார். அன்னார் லேக்ஹவுஸ் நிறுவன விளம்பரப்பிரிவில் பணியாற்றிய பாத்திமா நுஸ்ரிஹா மற்றும் தினகரன் விளம்பரப்பிரிவில் தற்போது பணியாற்றும் பாத்திமா அஸ்ரிஹா ஆகியோரின் தகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஜனாஸா நேற்று அஸர் தொழுகையின் பின் வெலிகம, பாலத்தடி பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், ஊர் மக்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# யாழ். கடற்பரப்புக்குள் அத்துமீறிய 16 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது

## காரைநகர், பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்



*யாழ். விசேட நிருபர்*

யாழ். கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட 16 இந்திய கடற்தொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்கள் இரண்டு இழுவைப் படகுகளில் எல்லை தாண்டி, கடற்றொழிலில் 06

# சீனத் தலைநகர் பீஜிங்கில் மழையுடன் 'புழு மழை'

## போலிச் செய்தியென சீன தேச பத்திரிகையாளர் மறுப்பு

சீன தலைநகர் பீஜிங்கில் வழக்கத்துக்கு மாறாக மழையுடன் புழுக்களும் சேர்ந்து தரையில் விழுந்ததாக கூறப்படுகிறது. அதிர்ச்சியடைந்த மக்கள் தங்கள் கைகளில் மழைக்கு குடைகளைப் பிடிப்பது போன்று புழுக்களுக்காக குடைகளை பிடித்து வீதியில் நடந்து செல்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக சமூக ஊடகங்களில் காணொளிகளும் வைரலாக பரவியுள்ளன. வீதி ஓரங்களில் 06



# கண்டி அலவத்துகொட பகுதியில் திருமணமான யுவதி மர்ம மரணம்

## வயல்வெளி சேற்றிலிருந்து சடலம் கண்டுபிடிப்பு



கண்டி அலவத்துகொட பிரதேசத்தில் வயல்வெளியில் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் (11) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய திருமணமான பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மனைவி வீட்டில் இல்லையென கணவர் அவரது தாயாருக்கு அறிவித்ததன் பின்னர் அவரை தேடிய போதே சடலம் 06



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 20

### குறள் தரும் சிந்தனை



உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்

பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புக் கொள்பவரும், விலைமகளிரும், கள்வரும் ஆகிய இந்த மூவரும் ஒரே மாதிரியானவர்களே ஆவார்கள்.

## மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள்

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுக்கொண்டிருக்கும் சூழலில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் உள்ளிட்ட சுகாதாரத் துறையினரும் ஏனைய சில துறையினரும் அடையாள வேலைநிறுத்தத் தொழிற்சங்க நடவடிக்கையை இன்று முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பில் அவர்கள் அறிவிப்பையும் விடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே அவர்கள் இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவிருப்பதாகக் கூறியுள்ளனர்.. அதேநேரம் இவ்வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து கடந்த இரண்டொரு வாரங்களாக ஆட்சேபனை ஊர்வலங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் தொழிற்சங்கங்களால் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தான் அரசாங்க மருத்துவர்கள் உள்ளிட்ட சில தரப்பினர் இவ்வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து இன்று இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிட்டிருக்கின்றனர்.

ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க முன்னர் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

இதைவிடுத்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதன் விளைவாக ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் தாக்கங்கள் குறித்து தொழிற்சங்கங்கள் முதலில் கவனம் செலுத்தவும் தவறக்கூடாது. குறிப்பாக தொழிற்சங்க நடவடிக்கையின் விளைவாக யாதுமறியா அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பல்வேறு அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துள்ள மக்களை மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளிவிடவே தொழிற்சங்க நடவடிக்கை வழிவக்கும்.

மேலும் நாடு கடந்த வருடத்தின் ஆரம்பப்பகுதி முதல் முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே இவ்வரிக்கொள்கையை அரசாங்கம் அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

இத்தொழிற்சங்க நடவடிக்கையினால் இவ்வரிக் கொள்கை சீர்குலைந்து செயலிழக்கும் போது நாடு மீண்டும் தீவிர பொருளாதார நெருக்கடிகளுக்குள் தான் தள்ளப்படும். இதனைத் தவிர்க்க முடியாது.

அதனால் தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களில் உண்மையாகவே பற்றுக்கொண்டுள்ள தொழிற்சங்கங்கள் இவ்விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும்.

இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டு மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிக்கும் முகம் கொடுத்தார்கள். ஆனால் இப்பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த காரணிகளில் 2019 ஆண்டின் இறுதிப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மறுசீரமைப்பு கொள்கையும் முக்கிய பங்களித்துள்ளது. இதனை பொருளாதார நிபுணர்களே சுட்டிகாட்டியுள்ளனர். அந்த மறுசீரமைப்பின் ஊடாக நடைமுறையில் இருந்த 10 வரிகள் இரத்து செய்யப்பட்டு 05 வரிகள் திருத்தம் செய்யப்பட்டமை தெரிந்ததே.

இதன் விளைவாகத் தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடி, கடந்த வருடம் ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களின் ஊடாக நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்றுவர வழிவகுத்துள்ளது. இதன் பயனாக பொருளாதார நெருக்கடி தீவிர நிலையில் இருந்த போது காணப்பட்ட நிலைமை தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுப்பதில் ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்தியுள்ளார்.

இப்பின்புலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களில் புதிய வரிக்கொள்கையும் ஒன்றே அன்றி வேறில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடும் மக்களும் மீட்டெடுக்கப்படும் போது தான் மக்களால் வளமான பொருளாதார வாழ்வைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அதனைக் கருத்தில் கொண்டு தான் இவ்வரிக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கொள்கையின் பிரதிபலன்கள் நாட்டுக்கு கிடைக்கப்பெறவும் தொடங்கியுள்ளன. என்றாலும் இவ்வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து அதனை சீர்குலைக்கும் போது நாடு மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாவதைத் தவிரக்க முடியாது போய்வடும்.

அதனால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதில் அதிகூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். இதன் நிமித்தம் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். அதன் ஊடாகவே விரைவாகவும் வேகமாகவும் இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெறக்கூடியதாக இருக்கும்.

அதேநேரம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவது என்பது இலகுவான காரியமும் அல்ல. அதற்கு சகலரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டிய தேவையும் இருக்கவே செய்கிறது.


ஆகவே தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்தாக உள்ளது. அதனால் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயற்பட வேண்டிய பொறுப்பும் தொழிற்சங்கங்களுக்கும் உள்ளது என்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

### அந்தமானில் மற்றொரு நிலநடுக்கம்

# துருக்கி-சிரிய பூகம்பத்திற்கு பின்னர் உலகின் பல நாடுகளில் நிலஅதிர்வுகள்






அந்தமான் தீவின் கடல் பகுதிகளில் நேற்று அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 4.9 ரிச்டர் அளவில் இந்நிலநடுக்கம் பதிவாகியுள்ள போதிலும் ஏற்கனவேயும் இப்பிராந்தியத்தில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்நிலநடுக்கங்கள் சென்னையிலும் இலங்கையின் புத்தள, மொனறாகலை போன்ற பிரதேசங்களிலும் உணரப்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் அந்தமான் தீவின் கடல் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி 7.8 ரிச்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் துருக்கி மற்றும் சிரிய பகுதிகளில் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்த சில மணித்தியாலயங்களுக்குள் மற்றொரு பாரிய நிலநடுக்கம் பதிவானது. இவ்வருடத்தில் பதிவான மிகப்பாரிய நிலநடுக்கங்களாக இவை நோக்கப்படுகின்றன. எதிர்பார்த்ததை விட மிக மோசமான பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ள இந்நிலநடுக்கங்கள், கடந்த 50 வருடங்களில் துருக்கி சந்தித்த மிக மோசமான நிலநடுக்கமாகவும், பேரழிவாகவும் பார்க்கப்படுகிறது. இந்நிலநடுக்கம் காரணமாக துருக்கி, சிரியாவில் 50 ஆயிரம் பேர் பலியானதோடு 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலநடுக்கத்தினால் துருக்கியின் காஜியான்டெப், கஹ்ராமன்மாராஸ், ஹடாய், ஒஸ்மானியே, அதியமான், மாலத்யா, சன்லியுர்ஃபா, அதானா, தியர்பாகிர் மற்றும் கிலிஸ் ஆகிய 10 நகரங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு 100 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு நில அடுக்குகள் பிரிந்து பிளவுபட்டு காணப்படுகிறது. அந்த அளவிற்கு மோசமான நிலநடுக்கமாக இது விளங்குகிறது.

துருக்கி, சிரிய பகுதிகளில் ஏற்பட்ட இந்நிலநடுக்கங்களைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலும் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. குறிப்பாக நியூசிலாந்து, வெலிங்டன் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி 6.1 அளவில் நிலநடுக்கம் பதிவானது. அதனால் பல கட்டிடங்கள், வீடுகள் சேதமடைந்தன. ஆனால் பெரிய உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

அதேபோன்று பெப்ரவரி 16 ஆம் திகதி பிலிப்பைன்ஸில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டது. 6.1 ரிச்டர் அளவில் பதிவான இந்நிலநடுக்கத்தினால் வீடுகள் குலுங்கிய போதிலும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. அதேவேளை பெப்ரவரி 14 ஆம் திகதி ரோமானியாவில் 5.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதேபோன்று கொலம்பியாவில் 5.2 ரிக்டர் அளவிலும் அமெரிக்காவின் ஓசன் வியூ பகுதியில் 4.8 ரிச்டர் அளவிலும் டொங்கோவில் 5.3 ரிக்டர் அளவிலும் என்றபடி கடந்த சில தினங்களுக்குள் நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இவற்றை விடவும் குறைந்த ரிச்டர் அளவுகளிலும் நிலநடுக்கங்கள் பல நாடுகளில் உணரப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இவ்வாறு சிறிதும், பெரிதுமாக நிலநடுக்கங்கள் உலகின் பல நாடுகளிலும் பதிவாகிவரும் சூழலில் மக்கள் மத்தியில் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அந்தமான் தீவின் மாயபண்டர் பகுதியில் இருந்து 67 கிலோ மீற்றர்கள் தொலைவில் கடல் பகுதியில் மற்றொரு நிலநடுக்கம் நேற்று அதிகாலையில் பதிவாகியுள்ளது. இதன் விளைவாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவுமில்லை பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டதாகவும் தகவல் இல்லை.

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு பின்னர் அடிக்கடி நிலநடுக்கங்கள் பதிவாவதன் காரணமாக நிலநடுக்கம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அந்தந்த நாடுகள் முன்னெடுத்து இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

# இந்தியாவில் பரவும் புதுவித காய்ச்சல்; இலங்கை மருத்துவர்கள் விஷேட கவனம்

கொரோனா போன்ற அறிகுறியுடன் இந்தியாவின் சில மாநிலங்களில் புதுவிதக் காய்ச்சலொன்று பரவி வருகிறது. இது H3N2 எனப்படும் வைரஸினால் ஏற்படுத்தப்படும் காய்ச்சல் என இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களான இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும், இந்திய மருத்துவ கூட்டமைப்பும் அடையாளப்படுத்தியுள்ளன.

இக்காய்ச்சல் காரணமாக ஹரியாணாவில் ஒருவரும், கர்நாடகாவில் ஒருவரும் என இதுவரை இருவர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குழந்தைகள், வளர்ந்தவர்கள், வயதானவர்கள் என்று அனைத்து தரப்பினரையும் பாதிக்கக்கூடிய இவ்வைரஸ், நாட்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களுக்கும் முதியர்களுக்கும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

இந்நிலையில் இந்திய மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நாட்டில் ஜனவரி மாதம் முதல் பருவகால காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளது. இற்றை வரையும் 3,038 பேர் H3N2 உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். பருவகால காய்ச்சல் என்பது இன்புளூவென்ஸா வைரஸ்களால் ஏற்படும் கடுமையான சுவாச நோய்த்தொற்று ஆகும். இது உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் பருவ கால காய்ச்சலின் இரண்டு உச்சநிலைகள் காணப்படுகின்றன. ஒன்று ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலம், மற்றொன்று மழைக்காலத்திற்குப் பிந்தைய காலம். பருவகால காய்ச்சலால் ஏற்படும் பாதிப்புகள் மார்ச் மாத இறுதியில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று தெரிவித்துள்ளது.



பலருக்கும் சுவாசப் பிரச்சினைகளை உருவாக்கும் இந்த இன்ப்ளூவென்சா ஏ வகையைச் சேர்ந்த H3N2 வைரஸ் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும், இந்திய மருத்துவ கூட்டமைப்பும் அடையாளப்படுத்தியுள்ளன. H3N2 வைரஸ் என்பது ஒரு பருவ கால காய்ச்சல் ஆகும். தொற்றக்கூடிய தன்மையைக் கொண்டுள்ள இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளான நபர் பேசும் போதோ, இருமும் போதோ வெளியேறும் நீர்த்துளிகள் மூலம் பரவுகிறது. இணை நோய்களைக் கொண்ட சிறு குழந்தைகளும் முதுமை அடைந்துள்ளவர்களும் இவ்வைரஸ் காய்ச்சலினால் அதிகம் பாதிக்கப்படலாம்.

இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு காய்ச்சல், இருமல், குமட்டல், வாந்தி, தொண்டை வலி, உடல் வலி, சோர்வு, வயிற்றுப்போக்கு போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படலாம். இவற்றுடன் சேர்த்து மூச்சுத் திணறல், மூச்சு விடுவதில் சிரமம், தீவிர காய்ச்சல், நெஞ்சுப்பகுதியில் வலி, எதையும் சாப்பிட முடியாத நிலை, தலைசுற்றல், வலிப்பு போன்ற அறிகுறிகளும் கூட ஏற்பட முடியும்.

H3N2 வைரஸ் ஏற்படுத்தும் பாதிப்பு மற்றும் அதில் இருந்து தற்காத்து கொள்வது குறித்து சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் ஒருவர் குறிப்பிடுகையில், 'H3N2 வைரஸ் காய்ச்சல் மிக ஆபத்தானது என்று கூறமுடியாது. இது சாதாரண பருவ கால காய்ச்சல்தான். இவற்றை மூன்று வகையாக பிரித்துகொள்ளலாம். ஏ வகை என்பது வந்ததும் தெரியாது போவதும் தெரியாது. பி வகை என்பது காய்ச்சல் 5 நாட்கள் வரை இருக்கும். அதை தொடர்ந்து உடம்பு வலி இருக்கும்.

சி என்பது இணை நோய் உள்ளவர்கள் H3N2 வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்படும்போது அவர்களின் பிரதான நோயின் பாதிப்பு அதிகரித்து மரணம் ஏற்படக்கூடும்' என்றுள்ளார்.

மேலும், இவ்வைரஸ் நுரையீரலை பாதிக்கும்போது, நிமோனியா வருவதற்கு வாய்ப்பு உள்ளது. அதன் விளைவாக மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படலாம். இது போன்ற சூழ்நிலைகளில் தாமதியாது மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியம் என்று மற்றொரு மருத்துவ நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் தற்போதைய சூழலில் முகக் கவசம் அணிந்து கொள்ளுதல், சன நெரிசலான இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுதல் ஆகியவற்றை பின்பற்றுவது அவசியம் என்றும், குழந்தைகளைப் பொறுத்தவரை இன்புளூவென்சாவில் இருந்து தற்காத்து கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதிக பாதிப்புக்கு உள்ளாகும் நிலையில் உள்ள முதியவர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தத் தவறக்கூடாது.

தற்போதைய சூழலில் காய்ச்சல் ஏற்படும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதன் ஊடாக இக்காய்ச்சல் அதிகம் பரவுவதை தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு பிறருடன் கை குலுக்குதல், பொது இடங்களில் எச்சில் துப்புதல், மருத்துவர்களின் ஆலோசனையின்றி நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளைப் பாவித்தல், மற்றவர்களுடன் சேர்ந்து உணவு அருந்துதல், நெருக்கமாக அமர்தல் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் இந்திய மத்திய சுகாதாரத் துறை வலியுறுத்துகிறது.

இவ்வைரஸ் காய்ச்சலுக்கு ஒருமுறை உள்ளானால் உடலில் அவ்வைரஸுக்கு எதிராக நோய் எதிர்ப்புச்சக்தி உருவாகிவிடும். அதனால் இவ்வைரஸ் மீண்டும் உடலுக்குள் வந்தாலும் அதனால் நோய் நிலையை ஏற்படுத்த நோய் எதிர்ப்பு சக்தி இடமளிக்காது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்வைரஸ் காய்ச்சல் தொடர்பில் இலங்கை மருத்துவர்களும் விஷேட கவனம் செலுத்தியுள்ளனர் என்று சுகாதோர அமைச்சின் மருத்துவர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது சுட்டக்காட்டத்தக்கதாகும்.

# நற்பிட்டிமுனை அல்-அக்ஸா கல்லூரியில் சாதனையாளர் கௌரவிப்பு விழா



கல்முனை வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பு விழா அதிபர் எம். எல். பதியுத்தீன் தலைமையில் வெகு விமரிசையாக அண்மையில் இடம்பெற்றுள்ளது.

2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை கற்பித்த சகல ஆசிரியர்களையும் கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ சஹ்துல் நஜீமும் கௌரவ அதிதியாக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ்வும் முஸ்லிம்பிரிவு கோட்டக்கல்விப் பணிப்பாளரும் இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமான

திருமதி நஸ்மியா சனூஸும் விசேட அழைப்பாளர்களாக தமிழ்ப்பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சரவணமுத்து, தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் படையணி

பயிற்றுவிப்பாளர் மேஜர் கே.எம் தமீம், ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.எல்.எம் ஜஹாங்கீர், முன்னாள் பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளரும், இஸ்லாம் பாட ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ் சிராஜுதீன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே தாஸீம் உட்பட பாடசாலை அபிவிருத்திச்சங்க அமைப்பினர் அனுசரணையாளர்கள் பேண்ட் வாத்தியம் முழங்க விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



பாதையின் இருமருங்கிலும் பெற்றோர்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம் ஜாபீர், திருமதி எச்.எம் றியாஸா கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ சஞ்ஜீவனும் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர் சீ.எம்.ஹலீம் (எல்.எல்.பி) ஆகியோர் இதில் இணைந்து கொண்டனர்.

பிரதம அதிதி, கௌரவ அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி விருதும் வழங்கப்பட்டதோடு விசேட அதிதிகள் விசேட அழைப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

சாதனையாளர்களுக்கான சான்றிதழ், விருது என்பன அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களால் வழங்கப்பட்ட கலை நிகழ்ச்சிகள் சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றன. வெளிநாட்டில் வதியும் பொறியியலாளர் ஐயூப் தம்பியினால் வழங்கப்பட்ட ஒலிபெருக்கித்தொகுதி அன்னாரின் தாயால் வழங்கி வைக்கப்பட்டது. சமுக செயற்பாட்டாளர் வர்த்தகர் வர்த்தகப் பட்டதாரியினால் சாதாரண தரப்பரீட்சையில் தடம்பதித்த மாணவிக்கான பண வவுச்சரும் இங்கு வழங்கி வைக்கப்பட்டது.

அனுசரணையாளர்களின் பண உதவியும் விழாவுக்கான சமூகமளிப்பும் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு கட்டியம் கூறியது.

வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமின் உரையில், 'சகல வளங்களும் அமையப்பெற்று அதிபரின் நிர்வாக செயற்பாட்டினால் பொதுப்பரீட்சை அடைவிலும் இணைப்பாட செயற்பாட்டிலும் பாடசாலை சிறப்புற்று விளங்குகின்றது. ஒழுக்கம் சார்ந்த பண்பு சார்ந்த விடயங்களை மாணவர்களிடம் கட்டியெழுப்ப ஆசிரியர் பங்களிப்பு அவசியம். சமூகம் சார்ந்த பங்களிப்பு பாடசாலைக்கு உள்ள நிலையில் கல்வியை மேம்படுத்த வேறென்ன தேவை. புதிய கல்வி முறைமை அரசினால் அடுத்த தவணையில் அமுல்படுத்தவுள்ள நிலையில் கொத்தணிப் பாடசாலைக்குள் சிறந்த தேசிய பாடசாலையாக வளர வாழ்த்துகிறேன். பிரதேச செயலாளர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் எனப் பல்துறைத் தொழில் வாண்மையாளர்களையும் கொண்டுள்ள இக்கிராமம் விவசாயத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்' என்றார்.

கௌரவ அதிதி கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் வின் உரையில் 'கலை, கலாசாரம், பேச்சாற்றல் போன்ற துறைகளில் திறமை கொண்ட இக்கிராமம் கல்வியிலும் துரித வளர்ச்சி கொண்டு வருவதைப் பாராட்டினார்.

தோப்பூர் எஸ்.சிறாஜுதீன்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்
(sltasclass 1).
நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்
கல்முனை.

# பச்சை சார்த்தி அருள்பாலிக்கும் மாத்தளை அன்னை முத்துமாரியம்மன்





மாசி மகோற்சவத்தை முன்னிட்டு மாத்தளை அன்னை முத்துமாரி சித்திரை ரதத்தில் ஆரோகித்து எழுந்தருளி மாத்தளை நகர் வீதி உலாவந்து ஆணவம், கன்மம், மாயையை அழித்து (சம்ஹாரம் செய்து) அடியார்களுக்கு அருள்பாலித்து தன் இருப்பிடம் நோக்கி வந்தார். அன்னைக்கு சிவ ஸ்ரீ சிவானந்த குருக்கள் வித்தியாகர சர்மா பச்சை சாத்தயபின் ஆனந்தமாய் வாழ அருள்பாலிக்கும் அன்னை முத்துமாரியின் பல்வேறு திருக்கோலங்கள்.

தகவல்ள ச். எச். விக்கிரமசிங்க

## மானுடவியல்

(தொடர்)



### சண்டேசுவர நாயனார் புராணம்

108

விசாரசருமர் பசுக்களை மேய்க்கப் போகும் விஷயத்தை மறையவர்களிடம் சொல்லி அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அனுதினமும் விசாரசருமர் கோலும், கயிறும் ஏந்திக்கொண்டு, ஆவினங்களோடு மண்ணியாற்றின் கரைக்குப் புறப்படுவார். பசுக்களை பசுமையான புற்கள் உள்ள இடத்தில் மேய விட்டு நல்ல நீர் உள்ள இடத்தில் நீர் அருந்தச் செய்வார்.

பெற்றோர்கள் தாம் பெற்ற செல்வங்களைக் காப்பதுபோல் கோகுலங்களைக் காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார் விசாரசருமர். ஐந்தறிவு படைத்த அந்த ஜீவன்கள் இவரது அன்பிற்குக் கட்டுப்பட்டு அச்சம் என்பதே இல்லாமல் இவருடன் பழகின. நல்ல வெயில் வந்துவிட்டால் மட்டும் மரநிழலில் சற்று நேரம் நிம்மதியாகப் படுத்து இளைப்பாற்றுவார் . மாலை நேரம் வந்ததும் வேண்டிய அளவு விறகு, சமிதை சேமித்துக் கட்டாகக் கட்டிக் கொண்டு ஆநிரைகளுடன் வீட்டிற்குப் புறப்படுவார். இவ்வாறு ஆநிரைகளை அன்புடனும், ஆதரவுடனும், பொறுப்புடனும், மகிழ்ச்சியுடனும் மேய்த்து வந்தார். இவரின் பராமரிப்பில் பசுக்கள் முன்னிருந்ததைவிட நல்ல வளத்தோடும், புஷ்டியோடும் முன்னைவிட அதிகமாகப் பாலையும் சுரந்தன. ஆநிரைகள் விசாரசருமரை அடிக்கடி சென்று உராய்வதும் நாவால் நக்கிக் கொடுப்பதுமாக இருந்தன. புல் மேயும் இடத்தில் விசாரசருமர் வெயிலில் நின்றால் இவைகள் கூட்டமாகச் சென்று நின்று அவருக்கு உட்கார நிழலைத் தரும். கன்றைக் கண்ட தாய் பசு, பால் சுரப்பது போல் விசாரசருமரைப் பார்த்ததும் ஆவினங்கள் பால் பொழியும். தனது அருகே வந்து பசுக்கள் பொழியும் அப்பாலை வீணாக்காமல் பரமனின் வழிபாட்டிற்குப் பயன்படுத்தினால் என்ன? என எண்ணினார். அத்தி மரத்தடியில் குளிர்தரும் நிழலைக் கண்டார். ஆண்டவனுக்கு அந்த இடத்தில் கோயில் அமைக்கச் சித்தம் கொண்டார். மண்ணியாற்றங்கரை ஓரத்திலிருந்து நல்ல மணல் எடுத்து வந்து லிங்கம் ஒன்றை வடித்தார்.



மண்ணாலே மதிற்சுவர்ளோடு கூடிய சிறு கோயிலைக் கட்டி கோபுரமும் அமைத்தார். மணமிகுந்த நறுமலர்ச் செடிகளையும், கொடிகளையும் அழகிற்காகக் கொண்டு வந்து வைத்தார். அக்கோயிலையும் சிவலிங்கத்தையும் பார்த்து ஆனந்தக் கூத்தாடினார். அவர் உள்ளத்திலே பக்தி வெள்ளம் பெருக பரமனுக்கு பூசையும், அபிஷேகமும் செய்ய எண்ணினார். அர்ச்சனைக்கு மலர் பறித்து வந்தார். பாலை சேமித்து வேதம் ஓதி அபிஷேகம் செய்தார். மலர்களால் சிவலிங்கத்தை அன்புடன் அர்ச்சனை செய்தார். சேய்ஞலூர் அரனாரை முருகப்பெருமான் வழிபட்டாற்போல் மண்ணியாற்றங்கரையில் சிவலிங்கத்தை இன்று விசாரசருமர் வழிபட்டார். இந்த வழிபாடு நித்தம் தவறாமல் நடந்து வந்தது. **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ வம்மியடி பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம்

**ஆறு, கடல், குளம், வயல், மரச்சோலைகள் போன்ற இயற்கையினால் சூழப்பட்டு படுவான்கரை எழுவான்கரையை இணைக்கும் மத்திய நிலையமாக விளங்கும் களுவாஞ்சியூரில் கடற்கரைவீதியில் பன்நெடுங்காலமாக வீற்றிருந்து வேண்டுவோர்க்கெல்லாம் அருள் பாலிக்கும் ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையாரின் வருடாந்த அலங்கார உற்சவம் 20.03.2023ம் திகதி ஆரம்பித்து, 25.03.2023 ம் திகதி அதிகாலை பங்குனி வளர்பிறை சதுர்த்தி தினத்தில் தீர்த்த உற்சவம் திருப்பொன்னூஞ்சல் இடம் பெற்று இனிதே நிறைவுபெறவிருக்கின்றது.**



சிவத்திரு பஞ்சாச்சரக்குருக்கள் புவனேசராசா குருக்களின் நல்லாசிகளுடன் பிரதம குருவாக சிவஸ்ரீ பு.கு.சடாட்சர சர்மா, சிவஸ்ரீ.உ.மதுசூதனன் சர்மா ஆகியோர் சிறப்பான முறையில் அலங்கார உற்சவத்தை நடாத்தவுள்ளனர்.

***ஆலய வரலாறு –***

அருள்மிகு ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலய தோற்றமானது முதல்முதலில் கணபதி ஐயரால் ஆரம்பித்து வழிபட்ட ஆலயம் ஆகும். இவர் மரப்பொந்து ஒன்றிலிருந்து கல்வடிவத்தில் விநாயகரை கண்டெடுத்திருந்தார். அக்கல்லினை வைத்து வழிபட்டபோது அச்சிலைக்கல்லானது களவாடப்பட்டதினால் கணபதி ஐயர் மிகுந்த கவலை கொண்டு இருந்தார்.

அவ்வேளை விநாயகர் அவரின் கனவில் தோன்றி கவலைப்பட வேண்டாம். மூன்று கல்லை வைத்து என்னை எண்ணி வழிபடு நான் உன்னுடன்தான் இருப்பேன். எனக்கூறியதற்கு அமையவே கணபதி ஐயர் வம்மிமரப்பொந்தில் வைத்து வழிபட்டு வந்ததாக பழம்பெரும் கதைகள் சித்தரிக்கின்றன. வம்மிமரப் பொந்தில் வைத்து வழிபட்டதனாலே இவருக்கு வம்மியடிப்பிள்ளையார் எனப் பெருநாமம் ஏற்பட்டது.

கோயில் அமைந்திருந்த இடமானது மூதுரைச் சேர்ந்த வா வா மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான காணியாகும். எனவே இவருடைய வளவிற்குள்ளேயே கணபதி ஐயர் விநாயகரின் வழிபாடு மேற்கொண்டிருந்தார். கணபதி ஐயர் சமாதிநிலையை அடைந்ததும் அவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே அவரின் சாமாதி உடலானது கோவில் அமைந்திருந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது. அச்சமாதியானது தற்போதும் ஆலயத்தில் காணப்படுவதும் பூசை நடைபெறுகின்ற போது அச்சமாதிக்கும் பூசைசெய்து வழிபடுவதும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் தொன்மைமிக்க வரலாற்றை செப்பிநிற்கின்றன.

கணபதி ஐயரின் மறைவிற்குப்பின்னர் அக்கோவிலின் மூலஸ்தான மண்டபமானது சாமித்தம்பியால் அமைக்கப்பட்டிருந்தது டன் வெளிமண்டபமானது வைரவர் கோயில்கள் யாவும் முருகுப்பிள்ளையால் அமைக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு சூறாவளி அனர்த்தம் காரணமாக சிறு சேதத்திற்கு உட்பட்ட போது கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டது. இக்கோயிலை பெரிதாக புனரமைக்கும் நோக்கில் தா. நமசிவாயத்தினால் நிதியொதுக்கப்பட்டதுடன் 2006ஆம் ஆண்டில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அங்கு இரண்டு ஆலயங்கள் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன. அதாவது ஆதிமூலப் பிள்ளையார் கோயில் மற்றயது புதிதாக அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் ஆகும். இதன் பின்னர் வைரவர் கோயில் அமைக்கப்பட்டதுடன் தற்போது இவ்வாண்டு (2022) மேலதிகமாக வசந்த மண்டபமும் மற்றும் நாகலிங்கேஸ்வரர் ஆலயம், நவக்கிரக கோயில், சிவன், உமை போன்றோருக்கும் கோவிலமைக்கப்பட்டது.

இக்கோயிலின் ஆரம்பகாலத்தில் இருந்து தற்போது வரைக்குமான பூசகர்களை நோக்குகின்றபோது முதலில் கண்பதிஐயர், பஞ்சாட்சரக்குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள், மு. பத்மநாதன்குருக்கள் (சின்னவன் குருக்கள்) , முருகுப்பிள்ளைக் குருக்கள், ஜெகதீஸ்வரன் குருக்கள் அதன் பின் சபாநாயகம் குருக்கள் என கடமையாற்றி தற்போது பஞ்சாச்சரக்குருக்களின் பேரனும் புவனேசராசாக் குருக்களின் மகனாகிய சடாச்சரசர்மா சேவையாற்றி வருகின்றனர்.

**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
ஓய்வுநிலை அதிபர்
களுவாஞ்சிகுடி





## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19531) இந்த பிரபஞ்சம் எதனால் இயங்குகிறது?**
*பஞ்ச பூதங்களால்*

**19532) பஞ்ச பூதங்களில் முதலில் தோன்றியது எது?**
*ஆகாயம்*

**19533) அந்த வகையில் பஞ்சபூதத் தலங்களில் முதல் தலமாக உள்ளது எது?**
*சிதம்பரம்*

**19533) . பஞ்சபூத தலங்கள் மற்றும் பாடல் பெற்ற தலங்களை வழிபட விரும்புபவர்கள் எதில் இருந்து தொடங்குவது நல்லது என்பது ஐதீகமாக உள்ளது?**
*சிதம்பரத்தில்*

**19534) வைணவத்தில் கோவில் என்றால் எதை குறிக்கும்?**
*ஸ்ரீரங்கத்தை*

**19535) வைணவத்தில் ஸ்ரீரங்கத்தை குறிப்பது போல சைவத்தில் கோவில் என்றால் எதனை குறிக்கும்?**
*சிதம்பரம் நடராஜரையே*

**19536) சிதம்பரம் நடராஜர் ஆலயம் எவ்வளவு பரப்பளவைக் கொண்டது?**
*சுமார் 40 ஏக்கர்.*

**19537) சிதம்பரத்தின் சிறப்பு என்ன?**
*மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய 3 பெருமைகளையும் கொண்டுள்ளது.*

**19538) சிதம்பரம் நடராஜரை பற்றி கூறுவதாக இருந்தால்?**
*எல்லா கடவுள்களும் வந்து வழிபட்டு பேறு பெற்றனர்.*

**19539) இதை உணர்த்தும் வகையில் நடராஜர் ஆலயம் முழுவதும் என்ன மைந்துள்ளன?**
*ஏராளமான சன்னதிகள் உள்ளன.*

**19540) நடராஜர் ஆலயத்துக்குள் தினமும் எத்தனை லிங்கங்களுக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்படுகின்றன?**
*27 லிங்கங்களுக்கு*

**19541) சிவாலயங்களில் கர்ப்பக்கிரக கோஷ்டத்தை சுற்றி என்ன இருக்கும்?**
*தெய்வ உருவங்கள்*

**19542) திருவண்ணாமலை போன்றே எமன், சித்ரகுப்தன் இருவரும் வழிபட்ட தலம் எது?**
*சிதம்பரம்*

**19543) இதை உறுதிப்படுத்தும் வகையில் சிதம்பரத்தில் என்ன செய்யப்பட்டுள்ளது?**
*பிரகாரத்தில் எமனுக்கும், சிவகாமி அம்மன் சன்னதி பகுதியில் சித்ரகுப்தனுக்கும் சிலை உள்ளது.*

**19544) சிதம்பரத்தில் எத்தனை கோபுரங்கள் உள்ளன?**
*4*

**19545) இங்குள்ள 4 கோபுரங்களும் என்னவாக உள்ளன?**
*சிறப்பு களஞ்சியங்களாக உள்ளன.*

**19546) கிழக்கு கோபுரம் என்ன அம்சங்களைக் கொண்டுள்ளது?**
*கலையின் அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளது.*

**19547) மற்றொரு கோபுரத்தில் என்ன உள்ளன?**
*இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி, பராசக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு, தன்வந்திரி, இந்திரன், அக்னி, வாயு, குபேரன், புதன், நிருதி, காமன், பத்ரகாளி, துர்க்கை, கங்காதேவி, யமுனா தேவி, ராகு, கேது, நாரதர், விசுவகர்மா, நாகதேவன், சுக்கிரன், லட்சுமி, வியாக்ர பாதர், அகத்தியர், திருமூலர், பதஞ்சலி ஆகியோர் சிலைகள் உள்ளன.*

**19548) புத்த மதத்தை தழுவிய மன்னன் யார்?**
*அசோகன்*

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 29



துன்பம் வந்தும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான். நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது.

# ஆடற்கலைப் போட்டியில் கொழும்பு மாவட்டத்தில் முதலாமிடம் பெற்ற முகத்துவாரம் ஸ்ரீ பத்மாவதி அறநெறி பாடசாலை





அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நாடளாவிய ரீதியில் நடத்திய ஆடற்கலைப் போட்டியில் மொத்தமாக 175 அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றின. இதில் கொழும்பு மாவட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் கொழும்பு, முகாத்துவார ஸ்ரீ பத்மாவதி அறநெறி பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதனையொட்டி நேற்று இப்பாடசாலையில் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவிகள் பெற்றோருடனும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுடனும் காணப்படுகின்றனர்.

## பொதுப் போக்குவரத்து...

முடக்கப்பட்டுவிடும். அதனால் இந்த நெருக்கடியான தருணத்தில் மக்களை மேலும் சிரமத்துக்குள்ளாக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாதென சிரேஷ்ட போக்குவரத்துத்துறை பேச்சாளர் ஒருவர் தினகரனுக்குத் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயலவே திணைக்களம், தனியார் பஸ்கள் எவ்வித வேலை நிறுத்த நடவடிக்கைகளிலும் பங்குபற்ற மாட்டதென போக்குவரத்து அமைச்சுக்கு அவை தெரிவித்துள்ளதாக அந்த பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ரயில் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து தற்போது அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை செயல்படுத்துபவர்களின் வலையில் சிக்காமலிருக்குமாறும் தமது அங்கத்தவர்களுக்கு பொது போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது

## ரயிலில் குழந்தையை...

அவர்கள் நேற்று பண்டாரவளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து பண்டாரவளை பதில் மஜிஸ்ட்திரேட் நீதவான் கெனட் சில்வா சந்தேக நபர்களை இம்மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அன்றைய தினத்தில் கொழும்பு கோட்டை மஜிஸ்ட்திரேட் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களை ஆஜர் செய்யுமாறு பண்டாரவளை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேற்படி இளம் பெற்றோர் கொஸ்லாந்தை மீரிய பெத்த மற்றும் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர். குழந்தையின் பெற்றோரான இருவரும்

கொழும்பில் சந்தித்து காதலைத் தொடர்ந்துள்ளதுடன் அவர்கள் இருவருக்கும் கடந்த 25 ஆம் திகதி குழந்தையொன்று பிறந்துள்ளது.

அதனையடுத்து மேற்படி தம்பதியினர் கடந்த 10ஆம் திகதி இரவு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு ரயிலில் பிளாஸ்டிக் கூடை ஒன்றில் குழந்தையை வைத்து மலசல கூடத்தில் விட்டுச் சென்றுள்ளார்கள். அதனையடுத்து அவர்கள் இருவரும் அவர்களது சொந்த ஊருக்கு திரும்பியுள்ளனர்.

அவர்களை வாடகைக்கு அமர்த்தியிருந்த பிலியந்தலை பகுதி வீட்டின் உரிமையாளர் வழங்கிய தகவல்களையடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதைவேளை கைது செய்யப்பட்ட மேற்படி பெண் பண்டாரவளை தலைமையக பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்படும் காணொளி பதிவு செய்யப்பட்டு சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

சந்தேக நபர் ஒருவரை விசாரணை செய்யும் போது அவரது தனி உரிமை மீறப்பட்டு சங்கடத்துக்கு உள்ளாக்கப்பட்டு பெண்கள் பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட வேண்டிய முறைமை மீறப்பட்டுள்ளமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொலிஸ் பரிசோதகரிடம் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## வாக்குச்சீட்டுக்களை...

தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை. அச்சிடல் பணிகளுக்கான திறைசேரி 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஆனால், அச்சிடல் பணிகளுக்காக இதுவரை 152 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதுடன், சேவையாளர் மட்ட கொடுப்பனவு 52 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும்.

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்கு தேவையான நிதியை விரைவாக வழங்காவிடின் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தபால்மூல வாக்குச்சீட்டுக்களை ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பது சிக்கலானதாக அமையும்.

தேவையான நிதியை வழங்கினால் 05 நாட்களுக்குள் தபால்மூல வாக்குச்சீட்டுக்களை ஒப்படைக்க முடியுமென்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்தவும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்தவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக அரச அச்சக திணைக்களம் கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி வாக்குச்சீட்டுக்கள் அச்சிடல் பணிகளை இடைநிறுத்தியது.

இதனை தொடர்ந்து நிதி விடுப்பு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

அதன்போது உயர் நீதிமன்றம், 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கும் செயற்பாட்டுக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தது.

இதனை தொடர்ந்து தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு அமைச்சர்கள்...

மதிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை சுட்டிக் காட்டும் பொதுநலவாய சாசனம் கைச்சாத்திடப்பட்ட 10ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பொதுநலவாய தினக் கொண்டாட்டங்களில் வெளிநாட்டஅமைச்சர் இன்று 13ஆம் திகதி பங்கேற்பார்.

இதன்போது, இந்த விழுமியங்களை அடையாளப்படுத்தும் 'பொதுநலவாய நாடுகளின் சமாதானக் கொடி' முன்முயற்சியை உறுப்பு நாடுகள் ஆதரிக்கவுள்ள அதேவேளை, வருகை தரும் வெளிவிவகார அமைச்சர்களுக்கு மூன்றாவது மன்னர் சார்லஸ் வழங்கும் வரவேற்புடன் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

இந்த ஆண்டுக்கான பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம், அமைதியான மற்றும் நிலையான சமூகங்களுக்கு பின்னடைவைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான காலநிலை நிதியுதவி மற்றும் பொருளாதார மீட்சி, உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்புக்காக பொதுநலவாய வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்துதல் போன்ற பகிரப்பட்ட சவால்களுக்கு கூட்டுப் பிரதிபலிப்புக்களை கலந்துரையாடும் வகையில் வெளிவிவகார அமைச்சர்களை ஈடுபடுத்தவுள்ளது.

இந்த நிகழ்வுகளின் பக்க அம்சமாக, அமைச்சர் சப்ரி வெளிவிவகார, பொதுநலவாய அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் கிலெர்வலியை சந்திக்கவுள்ளதுடன், பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லண்ட் கே.சி, இந்தோ பசுபிக் வெளியுறவு, பொதுநலவாய அபிவிருத்தி விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஆன் மேரி ட்ரெவல்யன் மற்றும் இலங்கைக்கான பிரதமரின் வர்த்தகத் தூதுவரான அபர்சோக் பிரபு மெர்வின் டேவிஸ் ஆகியோருடன் இருதரப்பு சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

பொதுச் சபையில் நேஸ்பி பிரபுவினால் வழங்கப்படவுள்ள பிற்பகல் தேநீர் விருந்திலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பங்கேற்வுள்ள அதேவேளை, லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், பிரிட்டனுடனான இலங்கையின் உறவுகள் தொடர்பான கருத்துக்களையும் வழங்குவார்.

வெளிநாட்டமைச்சர் சப்ரியின் லண்டன் விஜயத்தின் போது, ருவாண்டா (அலுவலகத்தில் பொதுநலவாயத் தலைவர்), கென்யா, பாகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

## விமர்சனங்களை...

பொது ஜன பெரமுன கட்சியின் கூட்டத்தில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றியுள்ள அவர்,

எமது அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் அபிவிருத்திகள் இடம்பெற்றன. நெடுஞ்சாலைகள் மட்டுமன்றி கிராமிய வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு காபர்ட் போடப்பட்டன. அப்போது எதிர்க்கட்சிகள் காபர்ட் வீதியை சாப்பிடுவதா? என கேட்டார்கள். எனினும் தற்போது கிராமிய மக்கள் அவர்களின் விவசாய உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கு அந்த வீதிகள் பெரும் உபயோகமாக காணப்படுகின்றன.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் மொனராகலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மின்சாரம் காணப்படவில்லை. எனினும் அந்த மாவட்டத்திற்கு 96 வீதமான மின்சாரத்தை எமது காலத்திலேயே நாம் வழங்கினோம்.

கிராமிய பாடசாலைகளுக்கான வசதிகளையும் மனித வளங்களையும் நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம் மொனராகலை வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்த்தி அனைத்து வசதிகளையும் நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். முதல் தடவையாக மொனராகலை மாவட்டத்திற்கு நீச்சல் தடாகத்தையும் நாமே பெற்றுக் கொடுத்தோம்.

தற்போது கிராமிய மட்ட விவசாயத் துறையில் சற்று பின்னடைவு காணப்படுகிறது. அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. படிப்படியாக விவசாய நடவடிக்கைகளுக்கு நிவாரணங்களை வழங்கி விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மக்கள் விடுதலை முன்னணியினர் கிராமம் கிராமமாக சென்று நாட்டைக் கட்டி எழுப்புவோம் என தெரிவித்து வருகின்றனர். எனினும் 1971, 88 மற்றும் 89 காலங்களில் நாட்டின் வளங்களை அழித்தது அவர்களே. அவ்வாறான கட்சிக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கும் அளவுக்கு மக்கள் மடையர்கள் அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 12 இலட்சம் வருமான...

பொருளாதார விஞ்ஞான ஆய்வுப் பிரிவு பேராசிரியர் நிஹால் ஹென்னாயக்க தெரிவித்தார். அந்த வகையில் இழக்கப்பட்ட வரியை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து சுமைகளையும் நான்கு இலட்சம் வரி செலுத்துவோர் உள்ளிட்ட தரப்பினரே சுமக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் மத்தியில் பெரும் கஷ்டங்களை இந்த நிலை ஏற்படுத்தியுள்ளது. அதனால் அரசாங்கத்தால் அவர்களாலும் மேற்கொள்ள கூடிய சில விடயங்களை குறிப்பிட முடியும்.

அந்த வகையில் செயலிழந்துள்ள12 இலட்சம் வரி வருமானக் கோவைகள் காணப்படும் நிலையில் அவற்றை மீள செயற்படுத்த முடிந்தால் வரிச்சுமைகளை குறைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு செயல்படுத்தப்படுமானால் அரசாங்கத்திற்கும் வரி செலுத்துவோருக்குமிடையிலான பிரச்சினைகளுக்கு சுலபமாக தீர்வு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரசாங்கமும் நாட்டு மக்களும் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பை செய்தால் மாத்திரமே தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க முடியுமென கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் பொருளாதார விஞ்ஞான ஆய்வுப் பிரிவு பேராசிரியர் நிஹால் ஹென்னாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டின் ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதிக்கான செலவுக்கும் இடைப்பட்ட இடைவெளி சமன்படுத்தப்படுவது மிக முக்கியமெனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தவிர்க்க முடியாததென தெரிவித்த அவர், தற்போதைய நாட்டின் முழுமையான நெருக்கடிகளுக்கு அதன் மூலம் நிவர்த்தி காணப்படாவிட்டாலும் சர்வதேச ரீதியில் இலங்கைக்கான பெரும் சான்றாக அது அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

அந்தச் சான்று உலக வங்கி, இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் நம்பிக்கையைப் பலப்படுத்துமென்றும் அவர் தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.இந்த செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாடு தற்போது பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதை நாம் அறிவோம்.

கடந்த 2022 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு மிகவும் பாதிப்படைந்து செல்லும் திசை தெரியாமல் குழம்பி நின்றது.

நாடு பெற்றுக் கொண்டுள்ள கடன்களை மீளச்செலுத்த முடியாத அந்த நிலையில் அதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பையும் அரசாங்கம் வெளியிட்டது. அப்போது மத்திய வங்கியில் கையிருப்பு 05 பில்லியனே காணப்பட்டது. இந்த வருடத்தில் மார்ச் மாதமாகையில் அந்த நிலை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டு ஓரளவு நிலையான பொருளாதார நிலையை எட்ட முடிந்துள்ளது. இதனை புயலுக்குப் பின் வரும் அமைதி என்று கூற முடியும்.

இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கமும் நாட்டு மக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் நாடு எதிர்நோக்கவுள்ள கடுமையான பொருளாதார நிலைமையை ஓரளவு தவிர்த்துக் கொள்ள முடியும்.

நாட்டின் தற்போதைய சூழலில் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களுக்கு நாம் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாதது.

சர்வதேசம் எமக்கு கடன் வழங்க முடியாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலமான சான்று எமக்கு அவசியமாகிறது.

1965 ஆம் ஆண்டில் தான் முதலாவதாக சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கடன் பெற்றுக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 16 தடவைகள் கடன் பெறப்பட்டு இம்முறை 17ஆவது தடவையாக அந்த நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக பெற்றுக்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தக் கடனுதவி கிடைக்குமென்ற நம்பிக்கை உறுதியாகியுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள இத்தகைய நெருக்கடி நிலையில் பிரச்சினைகளை சரி செய்வதற்கு எந்த வகையிலும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. ஆனாலும் அதன் மூலம் எமது கடன் வழங்கும் நாடுகளுடனான நம்பிக்கையை கட்டியெழுப்ப வாய்ப்பு ஏற்படும்.

அதேவேளை, சர்வதேச சந்தைக்கு மீண்டும் எம்மால் பிரவேசிக்க முடியும் கடன்களுக்கான உத்தரவாதமும் கிட்டும்.அதன் மூலமாக எமது நிதி மறு சீரமைப்பு சிறப்பாக அமையும். கடந்த 2022 ஏப்ரலின் பின்னரான காலத்தில் எமக்கு ஒரு பில்லியன் டொலர் வருமானமாக கிடைத்து வருகிறது.

சுற்றுலாத்துறை, ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆகியவற்றினூடாக இந்த வருமானம் கிடைக்கின்றது. எமது ஏற்றுமதி வருமானம் மாதாந்தம் 900 மில்லியனாக காணப்படுகிறது. தற்போதுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டால் அதனை மேலும் அதிகரிக்க முடியும். எமது நாட்டின் சுற்றுலாத்துறையானது கடந்த நான்கு ஐந்து தசாப்தங்களாக அதற்கான உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

மாலைதீவுடன் எமது நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு நாளில் மாலைதீவுக்கு எத்தனை விமானங்கள் வந்து செல்கின்றன? மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு எத்தனை விமானங்கள் வந்து செல்கின்றன? மாலைதீவினால் வழங்க முடிந்ததை எம்மால் ஏன் வழங்க முடியாமலுள்ளது என்பதைப் பார்க்க வேண்டும்.

மாலைதீவு சிறிய நாடு என்றாலும் அங்கு சுற்றுலாப் பிரதேசங்கள் அதிகமாக காணப்படுகின்றன. எமது நாட்டிலும் சுற்றுலாத் தளங்களை அமைக்கும் புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவது அவசியம்.

உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல்கள், உணவு உரிய சேவைகள் தொடர்பில் முழுமையான கவனம் செலுத்தப்பட்டால் மட்டுமே இந்த துறையை முன்னேற்ற முடியும். சுற்றுலாத்துறை வர்த்தகம் பல கைத்தொழில்துறைகளோடு சம்பந்தப்பட்டுள்ளதால் அந்த துறைகள் அத்தனையும் மறுசீரமைக்கப்பட வேண்டும் அவ்வாறானால் அடுத்த சில வருடங்களில் அதன் மூலம் சிறந்த வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் நாம் இதைவிட மோசமான பொருளாதாரத்தை எதிர்கொள்ள நேரலாம்.இப்போதே எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் எதிர்காலம் மேலும் மோசமாகலாம். எமது ஏற்றுமதி வருமானம் மாதாந்தம் 900 மில்லியன் டொலராகக் காணப்படும் போது கடந்த மாதத்தில் அது 1.4 பில்லியனாக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் எமது இறக்குமதிக்கான செலவு 2 பில்லியன் டொலராக காணப்படும் நிலையில் 600 மில்லியன் டொலருக்கான பற்றாக்குறை ஒவ்வொரு மாதமும் ஏற்படுகிறது. இதனை சமப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறானால் எமது ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டு வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும். இத்தகைய அடித்தளங்கள் இடப்படாவிட்டால் நாடு பெரும் மோசமான நிலையை எதிர்கொள்வதை தவிர்க்க முடியாமல் போகும்.

பெற்றுக்கொள்ளப்படும் கடன் மூலம் நாம் 'ரிலாக்ஸ் ஆவதா' அல்லது இதுபோன்று திட்டங்களை முன்னெடுப்பதா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சகல துறைகளிலும் உள்ள சட்டங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு நிதியை உச்சளவில் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

## 36,000 புதிய மின்...

நிதிப் பிரிவைப் பலப்படுத்தியதன் மூலம் புதிய இணைப்புகளை வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் (09) நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். புதிய மின்சார இணைப்புகளைப் பெறுவதற்கு பெருமளவிலானவர்கள் பதிவுசெய்துள்ள போதிலும் இணைப்புகளை வழங்குவதில் பாரிய காலதாமதம் ஏற்படுவதாக உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் செலவீனங்களை முடியுமானளவு கட்டுப்படுத்துவதற்கு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் செலவீனங்களை முடியுமானளவு கட்டுப்படுத்துவதற்கு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தொல்பொருள்...

இந்த குழுவில் அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்க வெண்டருவே உபாலி தேரர், கலாநிதி பஹமூனே சுமங்கல தேரர், எல்லாவெல மேதானந்த தேரர் மற்றும் பேராசிரியர் இந்துராகரே தம்மரத்ன தேரர் உள்ளிட்டோர் குழுவில் அடங்குகின்றனர். யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் பி.புஷ்பரத்னம், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் பாலசுப்ரமணியம் பிள்ளை, கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபர் ஏ.ஆர்.மரிக்கார் மொஹம்மட் ரிஸ்வி ஆகியோரும் இந்த குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

## U.A.E, எகிப்து...

எகிப்திடம் உள்ளதையடுத்து, புதிய தலைமைத்துவத்தை ஐக்கிய அரபு இராச்சியம் பொறுப்பேற்கவுள்ளது. எகிப்தில்,2022 இல் நடந்த கோப்27 மாநாட்டில், இலங்கை முன்வைத்த முன்மொழிவுகள் பற்றி கோப் 28 மாநாட்டிலும் கவனம் செலுத்தப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## மானியம் கிடைக்காத...

கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் போகத்துக்கு தேவையான உரத்தை விவசாயிகளுக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென மஹிந்த அமரவீர அங்கு தெரிவித்தார்.

இதேவேளை, நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததால் தாம் விளைவித்த பயிர்களை விற்பனை செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் நெல் கொள்வனவு வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக உள்ளதாக இலங்கை சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.யு.கே.சேமசிங்க தெரிவித்தார்.

## வயலுக்குள் உழவு...

உழவு இயந்திரம் சேற்றில் புதையுண்டு விபத்துக்குள்ளானது.

வவுணதீவு மகிழவட்டவான் கிராமத்தைச் சேர்ந்த தர்மராசா சதீஸ்வரராஜா (வயது 34) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.இச்சம்பவம் (11) தனது உழவு இயந்திரத்தில் ஆயித்தியமலை பகுதியில் சிறுபோக விதைப்புக்காக வயல் நிலம் பண்படுத்திக் கொண்டிருக்கும்போது சேற்றில் உழவு இயந்திரம் புதையுண்டது. அதனை வெளியே எடுக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட விபத்தில் இவ் இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றது.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் திருமணமாகி ஐந்து மாதங்கள் கடந்துள்ளதுள்ளதாகவும் பிரதேசத்தில் பெரும் கவலையை தோற்றுவித்துள்ளதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

நெல்லூர் எனும் கிராமத்தில் வாழ்ந்துவருவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக ஆயித்தியமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜுன் மாதத்தில்...

இது குறித்து கருத்து வெளியிட்ட அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலேயே, தேசிய பஸ் கட்டண சூத்திரம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். டொலரின் பெறுமதி மற்றும் பணவீக்கத்தின் அடிப்படையில், இந்த நிலைமை அவதானிக்கப்படுகிறது. இதற்கமைய, பணவீக்கம் குறைவடையுமாயின், பஸ் கட்டணமும் நிச்சயமாக குறைவடையும் என்ற எண்ணக்கரு உள்ளது.

விலை தளம்பல் குறித்து, நாளாந்தம் ஆய்வு செய்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## காட்டுக்குள் கொட்டப்பட்ட ....

தெரிவித்துள்ளது. பிரதேசிவாசி ஒருவர் தமது அலுவலகத்துக்கு இது தொடர்பில் அறிவித்ததையடுத்து இதனைக் கண்டுபிடித்ததாக நுகர்வோர் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## ரயில் பாதைக்கருகில் வசித்த... (03ஆம் பக்கத் தொடர்)

பொறுப்புமின்றி அகற்றலாம்.ஆனால் நாம் மனிதாபிமான ரீதியில் செயல்பட்டு புகையிரத அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளில் சட்டவிரோதமாக வசிக்கும் உங்களை நவீன வசதிகளுடன் சொகுசான வீடுகளின் உரிமையாளராக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசங்களில் அநேகமானோர் தங்களுடைய வசிக்கும் இடங்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் இந்த வீடுகளின் உரிமைகளுடன் எதிர்கால பரம்பரை மிகவும் கௌரவமாக தங்களுடைய வீடுகளில் வசிக்கக்கூடிய பாக்கியம் ஏற்பட்டுள்ளது. அபிவிருத்தி நடவடிக்கைக்காக நகர பிரதேசங்களில் காணிகளை பயன்படுத்தும் போது பலவித பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டாலும் எவ்வித பிரச்சினையும் இன்றி வன்முறையின்றி எதிர்காலத்தை எண்ணி மேற்கொள்ளப்படும் இந்த அபிவிருத்தி திட்டத்திற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது கௌரவத்தை தெரிவிக்கின்றேன்.

அதற்காக பங்களிப்புச் செய்த அரசு அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

## 20 மில்லியன் ரூபாவை... (03ஆம் பக்கத் தொடர்)

மேலும் தெரிவித்தார். அத்துடன், இந்த நிறுவனங்களுக்கு புதிதாக பணியாளர்கள் நியமிக்கப்பட மாட்டாதெனவும், தற்போது பணிபுரியும் ஊழியர்களின் நிர்வாகத்தினூடாக செலவுகள் முடிந்தவரை குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 26 வயதுடைய... (03ஆம் பக்கத் தொடர்)

வொட்கா போத்தலை மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர்.

போத்தல் அவரது குடலைத் துண்டித்து, மலக்கசிவு உள்ளிட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தியதாகவும், இருப்பினும் அவர் தற்போது அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாகவும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

## ஜா எல அதிவேக... (03ஆம் பக்கத் தொடர்)

நோக்கி பயணித்த வாகனம் பாதையை விட்டு விலகி வீதி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான கல்லில் மோதி நின்றுள்ளது. காரில் பயணித்த காயமடைந்த இரு நபர்களை ஜா எல பொலிஸார் ராகம வைத்தியசாலையில்அனுமதித்துள்ளனர்.

வாகனத்தில் இரத்தக்கறைகள் காணப்பட்டதால் வாகனத்தை பரிசோதித்த போது நவீன ரகதுப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனத்தை செலுத்தி வந்த நபர் ராகம மத்துமகல பிரதேசத்தில் வசிக்கும் 39 வயது நபரென அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அந்நபர் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளி எனவும் பேலியகொட மீன் விற்பனை சந்தையில் விற்பனைக்கு மீன் விற்கும் வர்த்தகர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக சந்தேக நபர் ராகம போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## யாழ். கடற்பரப்புக்குள்... (03ஆம் பக்கத் தொடர்)

ஈடுபட்ட போதே நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். காரைநகர் கடற்பரப்பில் நான்கு கடற்தொழிலாளர்களும், பருத்தித்துறை கடற்பரப்பில் 12 கடற்தொழிலார்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரண்டு இழுவைப் படகுகளும் கைப்பற்றப்பட்டன.

## சீனத் தலைநகர்... (03ஆம் பக்கத் தொடர்)

நிறுத்தப்பட்டுள்ள கார்கள் மற்றும் வாகனங்களின் மேலே மழை நீருடன் திரளான புழுக்களும் கிடப்பதை காண முடிகிறது.

ஆனால், இந்த விசித்திர மழை குறித்து சீன அரசு தரப்பில் எந்த விளக்கமும் இதுவரை அளிக்கப்படவில்லை. இதனால் மக்கள் குழப்பமான மன நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் 'புழு மழை' குறித்து விஞ்ஞானிகள் சிலர் கூறுகையில், "திடீரென உருவாகும் சூறாவளியால் இந்தப் புழுக்கள் நகருக்குள் காற்றில் அடித்து வந்திருக்கலாம்" என்று தெரிவித்துள்ளனர்.

## கண்டி அலவத்துகொட... (03ஆம் பக்கத் தொடர்)

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தனுகா மதுவந்தி என்ற 26 வயதுடைய திருமணமான யுவதியே இவ்வாறு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

## இளைஞர்கள் யுவதிகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் மோசடி வர்த்தகம்;

# ஜேவிபி பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை கைது செய்ய நடவடிக்கை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார சபையில் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

கிரெடிட் கார்ட் மோசடி உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுத்துவதற்காக இளைஞர், யுவதிகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் வர்த்தகத்தில் ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் ஈடுபட்டுள்ளதாக தொழிலமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு செயற்பட்டு வருபவர் அம்பலாந் தோட்டை பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவர் என்றும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு பொறுப்பான வரை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

அது தொடர்பான விசாரணைகளை குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும்

அமைச்சர் தெரிவித்தார்.

கணினி அறிவுடன் கூடிய இளைஞர், யுவதிகளே அதிகமாக இந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக சபையில் தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மக்கள் இந்த மோசடிகளில் அகப்படக்கூடாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

இந்த வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட இளைஞர் யுவதிகளுக்குப் பணம் வழங்கி அவர்கள் தாய்லாந்து நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வெவ்வேறு நாடுகளுக்கும் அவர்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

இத்தகைய வர்த்தகத்தை மேற்கொண்டு கோடிக்கணக்கில் பணம் உழைத்து எமது நாட்டின் இளைஞர், யுவதிகளை பாதிப்புக்கு உள்ளாக்கும் மாபியாவில் ஈடுபட்டுள்ள ஜேவிபி பிரதேச சபை உறுப்பினர் தற்போது மறைந்து வாழ்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கட்டுக்கெலியாவ அல் மஹ்மூதியாவில் முதலாவது பட்டமளிப்பு விழா



கெக்கிராவ குறூப் நிருபர்

மிகிந்தல கனதரா கட்டுக்கெலியாவ அல் மஹ்மூதியா அரபுக்கல்லூரியின் முதலாவது அல் ஹாபிழ், அல் ஆலிம் பட்டமளிப்பு விழா நேற்று (12) கல்லூரி முதல்வர் தலைமையில் மத்ரசா முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் பட்டம் பெரும் மாணவர்கள் சிலருக்கு நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

# கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுக்கு பிரதேச செயலகத்தால் காணி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தன்னுடைய குழந்தைகள் இருவருடன் செவனகல பிரதேச செயலகம் முன்பாக வந்த 31 வயதான பெண் ஒருவர் அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

உடவளவ பிரதேசத்தை சேர்ந்த இப் பெண் தனக்கு உயிர் வாழ்வதற்கு வழியில்லை எனவும் தனது கணவர் தன்னை விட்டு வேறு பெண்ணுடன் வாழ்வதாகவும் எனவே தனக்கு வீடு ஒன்றை அமைத்துக் கொள்ள காணி ஒன்றை வழங்குமாறு கோரி இப்பெண் பிரதேச செயலாளரிடமும் அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் காணியைத் தராதுவிடின் தான் குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து அதிகாரிகள் இப்பெண்ணை அழைத்துப்பேசி அவருக்கு காணித்துண்டு ஒன்றை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் இக்காணியில் வீடொன்றை அமைத்துக் கொள்ள உதவி செய்யுமாறு அதிகாரிகள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பால் கறுப்புச் சந்தையில் டொலரின் பெறுமதி 270 ரூபாவாக வீழ்ச்சி

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு புறக்கோட்டை, வெள்ளவத்தை, காலி ,பேருவளை மற்றும் பெந்தோட்டை பகுதிகளில் உள்ள வெளிநாட்டு நாணயம் கொடுக்கல் வாங்கல் செய்யும் இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை கொடுக்கல் வாங்கல்கள் நிறைவு பெறும் தருணத்தில் அமெரிக்கன் டொலரொன்றுக்காக 270 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக நாணய பரிமாற்ற நிலையம் ஒன்றின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக ரூபாவின் பெறுமதி உயர்வடைந்து செல்லும் காரணத்தால் இயல்பாகவே டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அந்த வகையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அதன் பெறுமதி மேற்கண்டவாறு குறைவடைந்து பதிவாகியுள்ளதாகவும் அந்த துறை சார்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


## இலங்கை வங்கி

பின்வரும் வங்கிக் கிளைகளை மீளமைப்பதற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடங்கள் தேவைப்படுகின்றன.

1. திஹகொடை 2. ஊரகஸ்மன்ஹந்திய

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடங்கள் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு 10 வருடங்களுக்கு மேல் பழைமையானதாக இருத்தலாகாது.
- கீழ்த் தளம் 2,500 - 3,000 சதுர அடிகளைக் கொண்டதாகவும், மாடிக் கட்டடமாயின் குறைந்தது 2,000 சதுர அடிகளைக் கொண்ட கீழ்த் தளத்தையும் மீதமுள்ள பகுதி மேல்மாடியிலும் இருத்தல் வேண்டும். (பகுதிகளாக பிரிக்கப்படாது இருத்தல் வேண்டும்.)
- கட்டடத்தின் முகப்பு குறைந்தபட்சம் 30 அடி அகலம் கொண்டதாக பிரதான பாதைக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருக்க வேண்டும்.
- இலகுவில் சென்றடையக் கூடியதாகவும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதியைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு மற்றும் ஆண், பெண் இருபாலாரும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல், மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- தரைக்கு 2’×2’ அளவுடைய தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10’X 10’அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்புக் கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1,000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- பின்புற நுழைவாயில் மற்றும் ஜன்னல்களுக்கு பாதுகாப்பான கிறில் பொருத்தியிருக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம் என்பவற்றுடன் காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “**திஹகொட/ஊரகஸ்மன்ஹந்திய இலங்கை வங்கிக் கிளைக்கான பொருத்தமான கட்டடம்**” எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (தென் மாகாணம்)
இலங்கை வங்கி,
தென் மாகாண அலுவலகம்,
இல: 11, குமாரதுங்க மாவத்த, மாத்தறை.
தொலைபேசி : 041 223 2238 தொலைநகல்: 041 223 4880
மின்னஞ்சல்: bocsp@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 50 மெற்றிக் தொன் சோயா அவரையை வழங்குதல்**

**விலைமனு இல. SLTL/MKT/04/2023**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 50 மெ.தொன் சோயா அவரையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் (கீழ்நிலை) தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வங்காட்டும் தகுதிவாய்ந்த விலைமனுதரர்கள் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களை மு. ப. 9.00 மற்றும் பி. ப. 3.00 இடையேயான வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011 2236588 / 011 2237418
5. மீளளிக்கப்படாத கட்டணமான 6,875.00 இலங்கை ரூபா ரொக்கப்பணமாகச் செலுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 படிவம் சகிதம் எழுத்துருவிலான வேண்டுதலொன்றை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் 2023-03-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு. ப. 9.00 மற்றும் பி. ப. 3.00 மணிக்கிடையே ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த. பெ. 17, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (011-2236588/011-2237418) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023-03-30ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2023-03-30ஆம் திகதி முதல் 2023-06-29ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் 375,000.00 இலங்கை ரூபா தொகைக்கான 2023-03-30ஆம் திகதி முதல் 2023-07-27ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2023-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**



## இலங்கை திரிபோஷ லிமிட்டட்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 100 மெற்றிக் தொன் உள்நாட்டு சோளத்தை வழங்குதல்**

**விலைமனு இல. SLTL/MKT/03/2023**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 100 மெ.தொன் உள்நாட்டு சோளத்தை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் (கீழ்நிலை) தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வங்காட்டும் தகுதிவாய்ந்த விலைமனுதரர்கள் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களை மு. ப. 9.00 மற்றும் பி. ப. 3.00 இடையேயான வேலைநாட்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011 2236588 / 011 2237418
5. மீளளிக்கப்படாத கட்டணமான 5,750.00 இலங்கை ரூபா ரொக்கப் பணமாகச் செலுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 படிவம் சகிதம் எழுத்துருவிலான வேண்டுதலொன்றை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் 2023-03-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு. ப. 9.00 மற்றும் பி. ப. 3.00 மணிக்கிடையே ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த. பெ. 17, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (011-2236588/011-2237418) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2023-03-30ஆம் திகதி முதல் 2023-06-29ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் 300,000.00 இலங்கை ரூபா தொகைக்கான 2023-03-30ஆம் திகதி முதல் 2023-07-27ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2023-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**


### ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**சனிக்கிழமை 2023.03.11**

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5056 | ரூ. 10,083,712.00 | V | 2 5 4 6 3 3 |
| கொவிசெத | 3298 | ரூ. 85,761,654.00 | S | 17 23 35 39 |
| ராசி சுப பலன் (Handahana) | 365 | ரூ. 3,169,809.60 | வெற்றி இலக்கினம்: கடகம்; விசேட இலக்கினம்: கடகம் | 44 53 54 61 |
| ஜாதிக சம்பத | 1511 | ரூ. 10,547,132.00 | வெற்றி இலக்கினம்: மீனம் | 3 6 9 9 4 9 |
| மெகா பவர் | 1404 | ரூ. 306,902,970.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | K; சுப்பர் இலக்கம் 05 | 26 50 58 80 |
| தன நிதானய | 1086 | ரூ. 80,222,645.60 | X | 09 26 41 75 |

**வெள்ளிக்கிழமை 2023.03.10**

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5055 | ரூ. 10,000,000.00 | A | 6 5 6 4 3 9 |
| கொவிசெத | 3297 | ரூ. 85,370,472.80 | B | 19 28 68 72 |
| ராசி சுப பலன் (Handahana) | 364 | ரூ. 3,104,054.60 | வெற்றி இலக்கினம்: மீனம்; விசேட இலக்கினம்: மீனம் | 03 07 34 41 |
| ஜாதிக சம்பத | 1510 | ரூ. 10,480,509.60 | வெற்றி இலக்கினம்: கும்பம் | 3 7 9 1 0 3 |
| மெகா பவர் | 1403 | ரூ. 306,778,194.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | N; சுப்பர் இலக்கம் 03 | 12 15 18 22 |
| தன நிதானய | 1085 | ரூ. 80,000,000.00 | H | 06 48 49 62 |

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## புதுப்பித்தல் வேலைகள் – 2023

## றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை

1. கீழே வழங்கப்பட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவத்தின் கீழ் இலங்கை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு பெற்றுள்ள தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை றுஹுண பல்கலைக்கழக துணை வேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

| இல. | வேலை | ICTAD தரம் (கட்டிடங்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ) | மீளளிக்கப் படும் கேள்விக் கட்டணம்/ விலைமனுப் பிணைமுறி (ரூ) | பொறியிய லாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், மின் பிறப்பாக்கிக்கான உத்தேச கூரை | C 8 அல்லது அதற்கு மேல் | 1,500.00 | 25,000.00 | 2.453 | 60 |
| 2 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், பரீட்சைகள் கிளைக்கான உத்தேச புதுப்பித்தல் வேலைகள் | C 7 அல்லது அதற்கு மேல் | 3,500.00 | 100,000.00 | 9.973 | 120 |
| 3 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், எலியகந்த ஆண்கள் மற்றும் பெண்கள் (புதிய) விடுதியின் உத்தேச புதுப்பித்தல் வேலைகள் | C 7 அல்லது அதற்கு மேல் | 2,750.00 | 77,000.00 | 7.633 | 90 |
| 4 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், எலியகந்த பெண்கள் (பழைய) விடுதியின் உத்தேச புதுப்பித்தல் வேலைகள் | C 7 அல்லது அதற்கு மேல் | 2,500.00 | 56,000.00 | 5.552 | 90 |
| 5 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திலுள்ள கழிவறையின் உத்தேச புதுப்பித்தல் வேலைகள் | C 6 அல்லது அதற்கு மேல் | 4,500.00 | 138,000.00 | 13.781 | 180 |
| 6 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், உத்தேச கட்புல, செவிப்புல ஸ்டுடியோ மற்றும் மருத்துவ நிலையத்திற்கான அலுமினியக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வேலைகள் | C 9 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | 15,000.00 | 1.439 | 30 |
| 7 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், CSL-CER பிரிவிலுள்ள இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கான உத்தேச ஆய்வுகூட மேசை, Work top மற்றும் சுவர் கப்போர்டுகள் | C 9 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | 11,000.00 | 1.050 | 90 |
| 8 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், CSL-CER பிரிவில் தற்போதுள்ள Air Sea Flux கோபுரத்தின் புதுப்பித்தல் வேலைகள் | C 9 அல்லது அதற்கு மேல் | 1,000.00 | 16,500.00 | 1.606 | 60 |
| 9 | மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், CSL-CER இற்கு பைபர் வலையமைப்பை (Fiber Network) வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் | C 8 அல்லது அதற்கு மேல் அல்லது EM4 அல்லது அதற்கு மேல் | 1,500.00 | 24,000.00 | 2.317 | 60 |

3. ஒவ்வொரு கேள்விக்கும் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் 2023 மார்ச் 31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
4. 2023 மார்ச் 23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பிரதான பணிப்பாளர் சபை அறையில் (முன்னைய பேரவை அறை) விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
5. 2023 ஜுலை 03ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. அனைத்து விலைமனுக்களுடனும் மேற்கூறப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழக சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கேள்வி கட்டணத்தைச் செலுத்திய பின் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றும் இணைக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுப் பிணையானது நிபந்தனையற்றதும் மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் பெயரில் வழங்கப்பட்டதாகவும் 2023 ஜுலை 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2023 ஏப்ரல் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணியாகும்.
9. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தல் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தல் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் என்பன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
10. விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகவே மேற்கூறப்பட்ட முகவரியில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து (மூலதன வேலைகள்) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 041-2033260 - நீடிப்பு 12045) மற்றும் மேற்கூறப்பட்ட முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2023 மார்ச் 13ஆம் திகதி**

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

**செயற்றிட்ட இல.: பி163742**

## உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP இன் கீழ் தென் மாகாணத்தில் 30 எண்ணிக்கையான சூரியஔி நீர் பம்பிகள் மற்றும் 100 எண்ணிக்கையான பூச்சிகள் தடுப்பு வலைகள் (3x150 m) ஆகியவற்றின் பெறுகை

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து - உலக வங்கி கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் சார்பாக தென் மாகாண விலைமனுக்களை கீழ் மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொகுதி இல. | பண்டங்களின் விளக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை | விலைமனுபிணை செல்லுபடியாகும் காலம் | திட்டவட்டமான இறுதி சேர்விடம் (செயற்றிட்ட வேலைத்தளம்) |
|---|---|---|---|---|---|
| 1. | 2'' சூரியஔி நீர் பம்பிகளின் வழங்கல் | 30 | 360,000.00 | 2023 ஒகஸ்ட் 14 ஆம் திகதி வரையும் | செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), 3 ஆம் மாடி, மாகம்புர நிருவாக கட்டிடத்தொகுதி, ஹம்பந்தொட்ட. |
| 2. | 100 எண்ணிக்கையான பூச்சி தடுப்பு வலைகள் (3x150m) | 100 | 120,000.00 | 2023 ஜூன் 20 ஆம் திகதி வரையும் | |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் பிரகாரம் நடாத்தப்படும். தொகுதி முறைமையிலான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் (ஒரு விலைமனு அல்லது அனைத்தும்)
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை ஹம்பந்தொட்ட, நிருவாக கட்டிடத்தொகுதி, 3 ஆம் மாடி, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 047-2256304. தொலைநகல் இல.: 047-2256303) 2023 மார்ச் 13 ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
6. 2023 மார்ச் 13 ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் ரொக்கப் பணத்தில் மாத்திரம் 2500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், தலைப்புக் கடித மூலப் பிரதியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை மேலேயுள்ள 4 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2023 மார்ச் 30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வளமுள்ள விலைமனுதாரர் உரித்தான அலுவலர்களின் உதவியுடன் அவர்களின் சொந்த செலவிலேயே சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் பெறுமதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள விதித்துரைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் அமைந்துள்ள நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதத்துடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்படமிட்டு அவரது இலட்ச்சினை பதிக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்ட முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அம்ச இலக்கம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும்.
11. 2023 ஏப்ரல் 03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), 3 ஆம் மாடி, நிருவாக கட்டிடத்தொகுதி, ஹம்பந்தொட்ட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
12. விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் 2023 ஏப்ரல் 3 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் உத்தியோகபூர்வ பிரதநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (தென் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**3 ஆம் மாடி, நிருவாக கட்டிடத்தொகுதி, ஹம்பந்தொட்ட.**

திகதி: 09.03.2023

**காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**

# இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

## விலைக்கோரல் அழைப்பு - தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணைத் தேவைப் படுத்தல்கள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | சேவைகள் | | | | |
| 1. | SLTDA மற்றும் SLTPB தலைமை அலுவலக இடப்பரப்புகளுக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் - 2023 ஒப்பந்த இலக்கம்: SLTDA/HR&PM/S/NCB/Janitorial/2023/03 | 7,500.00 | 180,000.00 | 2023 மார்ச் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு - Zoom | 2023 மார்ச் 31ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |

2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மேற்படி தகைமை மூலப்பிரமாணங்களின் பிரகாரம் இயைபுடைய வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் ஒன்லைன் ஊடாக (Zoom Meeting) நடாத்தப்படுவதுடன் ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் amilam@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, முன்னோடி விலைமனுக் கூட்டத்தில் இணைந்துகொள்வதற்கான வேண்டுகோளை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112426800 (நீடிப்பு 305, 277) எனும் தொலைபேசி இலக்கத்திலும், பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரின் amilam@srilanka.travel / sltdaproc@srilanka.travel மின்னஞ்சல் முகவரிகளில் இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. 2023 மார்ச் 10ஆம் திகதி முதல் 2023 மார்ச் 30ஆம் திகதி வரையில் sltdaproc@srilanka.travel / amilam@srilanka.travel எனும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு மீளளிக்கப்படாத கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டு சகிதம் வேண்டுகோள் கடிதம் (விண்ணப்பதாரின் கடிதத் தலைப்பில்) ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மின்னஞ்சலின் ஊடாக ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று வழங்கப்படும்.
6. மீளளிக்கப்படாத கட்டணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையினால் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7119413 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: வரவுத் துண்டில் வைப்பாளர்களின் விபரம் மற்றும் வைப்பிற்கான காரணம் எனும் இடத்தில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' எனக் குறிப்பிட்டு விலைமனுவுடன் மூலப் பிரதியை இணைக்கவும்) கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, தரை மாடியிலுள்ள முகக்கூட இடப்பரப்பில் (Lobby area) சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (PCA3 படிவம்) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டிருப்பதுடன் விலைமனுவின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி பிரகாரம் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தினொரு ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை வழங்கும் தகுதியை இழந்து விடுவார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு கிரயச் செலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

# கிழக்கின் குரல்



## நள்ளிரவில் 350 நெல்மூடைகளை துவம்சம் செய்த 60 காட்டு யானைகள்!





*காரைதீவு குறுப் நிருபர்*

நள்ளிரவில் வயலுக்குள் இறங்கிய சுமார் 60 காட்டு யானைகள் 350 நெல்மூடைகளை துவம்சம் செய்துள்ளன.

இச்சம்பவம் காரைதீவில் நேற்று முன்தினம் (10) வெள்ளிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேசத்திலமைந்துள்ள வளைந்தவட்டை மேல்கண்டத்திலுள்ள விஷ்ணு கோயிலுக்கு சொந்தமான 09 ஏக்கர் காணி உள்ளிட்ட 13 ஏக்கரில் விளைந்த நெல் அறுவடை செய்யப்பட்டு மூட்டைகளில் வாகனத்தில் ஏற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கமநல உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன் மற்றும் அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் காலையில் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று அங்கு நடந்தவற்றை விசாரித்துள்ளார்.

அறுவடை நடைபெறும் வேளையில் வனவிலங்கு அதிகாரிகள் பாதுகாப்பு வழங்கி விவசாயிகளுக்கு உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 'நிம்மதியாக வீடுகளில் தூங்கி பல மாதங்கள் ஆகின்றன'

## மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம்

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*

நிம்மதியாக வீடுகளில் தூங்கி பல மாதங்கள் ஆகின்றது, வீதிகளில் இறங்கி போராடுவதை தவிர இனி வேறு வழியில்லை என்கின்றனர் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் கண்ணகி கிராமம், கவாடப்பிட்டி, புளியம்பத்தை, மகாசக்தி உள்ளிட்ட கிராமங்களில் வாழும் மக்கள்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குறித்த கிராமங்களில் யானையின் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் அங்கு வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு கூறினர்.

கோளாவில் பிரதேசத்தில் இருந்து பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக விழிப்புணர்வு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்த மக்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக ஒன்று திரண்டு பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அதன் பின்னர் அரச உயர் அதிகாரிகளுக்கும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்டவர்களுக்கும் கையளிக்கும் வகையிலான மகஜர்களை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனிடம் ஒப்படைத்து தங்களுக்குரிய தீர்வினை விரைவில் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

மகஜர்களை பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

## அக்கரைப்பற்று சமுர்த்தி வங்கி இடமாற்றம்

*அட்டாளைச்சேனை குறுப் நிருபர்*

அக்கரைப்பற்று சின்ன மௌலானா வீதி நகர் பிரிவு 2 க்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை கிழக்கு வங்கியின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (10) காலை வைபவரீதியாக இடம்பெற்றது. அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் .அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ். சப்றாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார். சமுர்த்தி சிப்தர புலமைப் பரீட்சையில் தெரிவானோருக்கும் சமுர்த்தி வீடமைப்பு அதிஷ்ட இலாப சீட்டெழுப்பில் வெற்றி பெற்றோருக்குமான காசோலைகளும் அதிதிகளால் கையளிக்கப்பட்டன.

## பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிக்கு ஏழு வருட கடூழிய சிறை

*ரொட்டவெவ குறுப் நிருபர்*

திருகோணமலை மஹதிவுல் வெவ பகுதியில் பெண்ணொருவரை பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிக்கு ஏழு வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்றம் இத்தீர்ப்பினை (10) வழங்கியுள்ளது.

மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹதிவுல்வெவபுதுபுர பகுதியில் வசித்து வந்த 47 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட நிலையில் சந்தேக நபருக்கு ஏழு வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளை குறித்த குற்றவாளிக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டம் செலுத்துமாறும், அப்பணத்தை செலுத்த தவறினால் மூன்று மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனை வழங்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 60 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்குமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதே நேரம் குறித்த பெண் தற்போது உயிரிழந்துள்ளதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த பெண்ணின் பிள்ளைகளுக்கும் சரிசமமாக இந்த பணத்தை பங்கிடுமாறும், அப்பணத்தை செலுத்த தவறினால் ஆறு மாதம் சாதாரண சிறை தண்டனை வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



காத்தான்குடி பள்ளி வாயல்கள் கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தின் சாதனையாளர் கௌரவிப்பும் பரிசளிப்பு வைபவமும் (11) சனிக்கிழமை புதிய காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயலில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல். ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் கணனி தேவையை கருதி நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீனால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் உள்ளிட்ட குழுவினரிடம் கையளித்து வைக்கப்பட்ட போது... படம்: கல்முனை மத்திய தினகரன் நிருபர்

## கிழக்கில் றமழான் நோன்பு மாதத்தை வரவேற்கும் முன்னாயத்தப் பணிகள்

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*

புனித றமழான் நோன்பு மாதத்தை வரவேற்கும் முன்னாயத்தப் பணிகளில் கிழக்கு முஸ்லிம்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். றமழான் தலைப்பிறையைத் தொடர்ந்து நோன்பு ஆரம்பமாகவுள்ளது.

முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பள்ளிவாயல்களின் நம்பிக்கையாளர்கள், நிர்வாகிகள் முக்கிய கூட்டங்கள், அவசர கலந்துரையாடல்களை நடாத்தி இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

றமழான் மாதம் முழுவதும் முஸ்லிம்கள் பகல், இரவு சமயக் கடமைகளில் ஈடுபடுவதற்கேற்றவாறு பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாகாணத்திலுள்ள பள்ளிவாயல்கள் தீந்தை பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் எதிர்கொண்ட இட நெருக்கடியை கருத்திற் கொண்டு சில பிரதேச பள்ளிவாயல்களில் அபிவிருத்தி மற்றும், புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அல்குர்ஆன் முறத்தல், ஆண்கள், பெண்களுக்கான இரவு நேரத் தொழுகை (தராவீஹ்), பள்ளிவாசலில் தரித்திருத்தல், பள்ளிவாசலில் அதிகாலை (சஹர்) உணவு வழங்கி நோன்பு நோற்றல். மாலையில் நோன்பு துறத்தல் (இப்தார்), ஹதீஸ் மஜ்லிஸ் போன்ற நிகழ்வுகளுக்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.வழமைபோன்று, பிரதேச மக்களுக்கு நோன்புக்கஞ்சியை இலவசமாக வினியோகிப்பதற்கும் பள்ளிவாசல்கள் திட்டமிட்டுள்ளன.

## காத்தான்குடியில் பாதணி உற்பத்தி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்



*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

காத்தான்குடியில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாதணி உற்பத்தி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்று கூடலொன்று (10) வெள்ளிக்கிழமை இரவு காத்தான்குடி கடற்கரையிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன் போது வரையறுக்கப்பட்ட காத்தான்குடி பாதணி உற்பத்தி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவுச் சான்றிதலை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தின் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.உசனார் வரையறுக்கப்பட்ட காத்தான்குடி பாதணி உற்பத்தி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் றமழானிடம் உத்தியோக பூர்வமாக கையளித்தார்.

இதன் போது காத்தான்குடி பாதணி உற்பத்தி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதுடன் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகள் தொடர்பாகவும் விளக்கி கூறப்பட்டன.

## ஆற்றங்கரை ஓரங்களில் கொட்டும் கழிவுகளால் சுகாதார சீர்கேடு

*மூதூர் தினகரன் நிருபர்*

மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சிப்பித்துறை ஆற்றங்கரை, கொல்லனாற்றங்கரை பகுதியில் இரவில் கழிவுகள் பெருமளில் கொட்டப்பட்டு வருவதால் இவ்விடங்கள் பெரும் சுகாதார சீர்கேட்டுக்கு உள்ளாகி வருவதுடன் நாய்களும் மற்றும் காகங்களும் இக்கழிவுகளை உண்ண வருவது கண்டு பொது மக்கள் பெரும் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ் ஆற்றங்கரை ஓரங்களில் உரப்பைகளிலும், சொபின் பேக்களிலும் கழிவுகள் கொண்டு வரப்பட்டு இரவில் கொட்டப்படுகின்றன. இதனால் இவ்விடங்களில் குப்பைகள் குவிந்து காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

## கல்முனை பொலிஸ் நிலையத்தில் வியாபார நிலைய பாதுகாப்பு கலந்துரையாடல்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

கல்முனைப் பிரதேச வியாபார நிலையங்களின் பாதுகாப்பு தொடர்பாக விசேட கலந்துரையாடல் கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்முனை இருதயநாதர் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடல் கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக கல்முனை மாநகர வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் தொடர்பில் மிகவும் விரிவாக எடுத்துக் கூறி அதற்கான திட்டங்களையும் அதிலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினார்.








திருகோணமலை என்.சீ.வீதியில் அமைந்துள்ள அல்ஹுதா ஹிப்லுல் குர்ஆன் மத்ரஸாவில் கடந்த 2011ம் ஆண்டு தொடக்கம் 2022 வரை அல் குர்ஆனை மனனம் செய்த 58 மாணவர்களை கௌரவிக்கும் முகமாக இரண்டாவது பட்டமளிப்பு விழா மத்ரஸா மண்டபத்தில் கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் ஏ.ஜே.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற போது... படம்: ரொட்டவெவ குறுப் நிருபர்

# கெப்பிடிய முஸ்லிம் மகாவித்தியாலய

# வைரவிழாவும், கேட்போர்கூட திறப்பு விழாவும்








அதிபர், ஆசிரியர் குழாம்

## பதவி வகித்த அதிபர்கள்

| | |
|---|---|
| எம்.ஹனிபா. | 1958 – 1958 |
| எம்.எல்.ஏ.ஹஸன். | 1959 – 1963 |
| கே. கமால்தீன். | 1964 – 1966 |
| எம்.எஸ்.எம்.இப்ராஹிம். | 1967 – 1970 |
| எம்.ஸாஹிர். | 1970 – 1974 |
| எஸ்.ஏ.கரீம். | 1974 – 1978 |
| எச்.எம்.ஆரித். | 1978 – 1986 |
| திருமதி. எம்.எச்.முஹம்மத். | 1986 – 1988 |
| ஏ.ஆர்.எம்.நிஜான். | 1988 – 1989 |
| என்.பி. நாஸிக். | 1989 – 1990 |
| வை. முத்தலிப். | 1990 – 1992 |
| எம்.ஐ.எம். கபூர். | 1993 – 2000 |
| ஏ. சமர்தீன். | 2000 –2006 |
| அடி.எம். இக்பால். | 2006 –2006 |
| எம்.எம்.எம்.ரிஸ்வான் | 2006–இன்று வரை... |

## அதிபரின் உள்ளத்திலிருந்து..

க/கெப்படிய முஸ்லிம் மகா வித்தியாலய வைர விழா, புதிய கட்டடங்களின் திறப்பு விழா தொடர்பில் வெளியிடப்படும் அனுபந்தத்துக்கு மகிழ்ச்சி அடைவதோடு பாடசாலையின் நிலைத்த அபிவிருத்திக்காக என்றும் பிரார்த்திக்கிறேன்.

சமூகத்திற்கு அவசியமான மனித வளத்தை உருவாக்கும் முன்மாதிரிப் பாடசாலை எனும் நோக்குடன் பயணிக்கும் எமது பாடசாலை மிகக் குறுகிய காலத்திற்குள் பல்துறை அபிவிருத்தியை நோக்கிய செயற்பாட்டில் சாதனைப் பக்கங்களை புரட்டிக் கொண்டு வருகின்றது.

அனேக பாடசாலைகளைப் போன்றே எமது பாடசாலையும் வகுப்பறை பற்றாக்குறையினால் நீண்ட காலமாக பெரும் கஷ்டப்பட்ட சந்தர்ப்பத்தில் பாடசாலையின் SDEC, OBA, பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து வகுப்பறை கட்டடம் ஒன்றை அமைக்க முழு மூச்சாக பாடுபட்டனர். கொரோனா தொற்று இந்த பயணத்தை சற்று பின்னடையச் செய்தாலும், எமது பாடசாலை முன்னாள் மாணவன், பழைய மாணவர் சங்க போஷகர் சகோதரன் ஜுனைதீன் M. இர்பான் இப்பணியின் முழுப் பொறுப்பையும் ஏற்று இன்று கம்பீரமாக காட்சியளிக்கும் கட்டடத்தை எமக்கு அன்பளிப்பு செய்கிறார்.

பாடசாலையின் தேவைக்காக உதவி செய்த சகலருக்கும் அவர்களுடைய தேவைகளை அல்லாஹ் நிறைவேற்றிக் கொடுப்பானாக என்று நன்றியுடன் பிரார்த்திக்கிறேன். அத்தோடு சகோதரன் இர்பான் அவரது பரியார், பெற்றோர், சகோதர, சகோதரர்கள் மற்றும் பாடசாலையின் பாக்கியமாக கிடைத்த SDEC,OBA, ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

## உப அதிபர்

மக்கள் பள்ளிவாசல்கள் மற்றும் மத்ரஸாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, செலவிட்டு வரும் நிலையில் கல்விக்கும், கல்விக்கூடங்களுக்கும் இஸ்லாம் வலியுறுத்திக் கூறியுள்ள முக்கியத்துவத்தினை வழங்குவது போதுமானதாக இல்லை என்று பலரும் அங்கலாய்த்து வருகின்ற நிலையில்; பாடசாலையின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்கப் போஷகருமான சகோதரர் J.M. இர்பான் கல்வித்துறைக்கு ஆற்றி வரும் அளப்பரிய சேவையையிட்டு பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

எமது வித்தியாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு சகோதரர் J.M. இர்பானின் நிதி ஒதுக்கீட்டில் வடிவமைக்கப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகளுடன் கூடிய இவ்விருமாடி கட்டடத்தினை கல்வியுலகிற்கு வழங்கி, அடுத்து வரும் அனைத்து சந்ததிகளுக்கும் சமர்ப்பணம் செய்த அவரது தூய பணியினை அங்கீகரித்து அவருக்கும், அன்னாரின் பெற்றோர் மற்றும் மனைவி, மக்கள் ஆகிய அனைவருக்கும் அல்லாஹ் நாட்கூலி வழங்குவானாக.

**M.B. மஹ்மூத்**
உப அதிபர்




# ஒரு வரலாற்று பார்வை

கலேவெல பிரதேச செயலகப் பிரிவின் ரங்வெடியாவ பிரதேசத்தில் தலை சிறந்து விளங்கும் அறிவாலயமே கெப்பிடிய முஸ்லிம் மகாவித்தியாலயமாகும்.

ஆரம்ப காலத்தில் கல்வி கற்பதற்கென இக்கிராமத்தில் ஓர் சிறிய பாடசாலையேனும் அமைக்கப் பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் ஆர்வமுடைய சிலர் கலேவெல நகரில் அமைந்திருந்த சிங்கள மொழி மூலப் பாடசாலை ஒன்றில் ஆரம்பக் கல்வியைக் கற்று வந்ததுடன் பின்னர் அப் பாடசாலையிலேயே அபூபக்கர் வாத்தியார் என்பவரின் தலைமையில் இப்பாடசாலையில் உருவான தமிழ்ப் பிரிவில் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இங்கு 5 ஆம் வகுப்பு வரையில் மாத்திரம் இருந்ததால் மாணவர்கள் கல்வியைக் தொடர்வதற்கு மாத்தளை போன்ற நகரங்களை நாடிச் செல்ல நேர்ந்தது. இதனால் பெற்றாரும் பிள்ளைகளும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. தொடர்ந்து கிராமத்தின் குடிசனப் பெருக்கமும் காலப் போக்கில் அதிகரிக்கத் தொடங்கவே பாடசாலையொன்றின் தேவையை மக்கள் உணரத் தலைப்பட்டனர்.

உடத்தலவின்னையைச் சேர்ந்த எம்.ஹனீபா ஆசிரியரின் தலைமையில் ஜும்ஆ பள்ளிக் காணியில் ஒரு பாடசாலை உருவாகியது. பின்னர் 1958ஆம் ஆண்டு மர்ஹூம் ஈ.மஸாய்தீன், மர்ஹூம் யூ.எல்.செய்னுலாப்தீன் ஆகியோர் வழங்கிய காணியில் தற்போதைய பாடசாலை ஆரம்பமாகிறது.

1959ஆம் ஆண்டில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது எம்.எல்.ஏ.ஹசன் என்பவர் அதிபராகப் பணி புரிந்தார். பாடசாலையின் பெயர்ப் பதிவேட்டின் பிரகாரம் முதலாவது மாணவனாக மர்ஹூம் எம்.மீரா ஹுசைன் என்பவரின் புதல்வன் எம்.எம்.எம்.சலீம் என்பவரின் பெயரும், முதலாவது மாணவியாக மர்ஹூம் எச்.எம்.ஹனீபா என்பவரின் புதல்வி பௌசியா உம்மாவின் பெயரும் காணப்படுகின்றது.

05 வகுப்புக்களுடனும் 03 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் வகுப்பறைகள் 1967இல் 8ஆம் வகுப்பு வரை விருத்தியடைந்ததுடன் 1980இல் க.பொ.த. சா.தரமும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இட நெருக்கடிக்கு மத்தியில் ஒரேயொரு கட்டடத்தின் கீழ் இயங்கி வந்த இப்பாடசாலைக்கு 1975ஆம் ஆண்டு நமடகஹவத்தயை சேர்ந்த ஆரச்சி அப்பா எனப்படும் மர்ஹூம் அப்துல் ஹமீத் கட்டடமொன்றை அன்பளிப்பாக நிர்மாணித்துதவினார். இதனைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டளவில் அரசாங்கம் கட்டடமொன்றை அமைத்துத் தந்த நிலையில் இப்பாடசாலைக்கான கட்டடங்களின் எண்ணிக்கை 03 ஆக உயர்வடைந்தது.

ஆரம்பத்தில் இங்கு பணியாற்றிய அதிபருடன் இன்று வரை பணியாற்றிய அதிபர்கள் அனைவரும் சிறப்பாக வினைத்திறனுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1974-1978 களில் அதிபராகப் பணிபுரிந்த எஸ்.ஏ. கரீம் சேவைக் காலத்தில் குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வும் பெற்றுக் கொடுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னர் 1978 -1986 ஆம் ஆண்டு காலத்தில் அதிபரான எச் எம் ஆரித் காலத்தில், க. பொ. த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த நிஹ்மதுல்லா என்ற மாணவன் வெளிப் பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்று முதல் மாணவனாக பல்கலைக்கழகப் பிரவேசம் பெற்றதைத் தொடர்ந்து கல்வியில் காணப்பட்ட தேக்க நிலை மாறி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது.

1981-89 களில் அதிபராகப் பணியாற்றிய மர்ஹூமா திருமதி எம். எச். முகம்மத் காலத்தில் 36 மாணவர்கள் சாதாரண தரத்தில் சித்தடைந்து உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். 1990 இல் அதிபர் வை. முத்தலிப் காலத்தில் இப் பாடசாலையின் விளையாட்டுத் துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. 2000-2006 வரை பணிபுரிந்த அதிபர் மர்ஹூம் சமர்தீன் காலத்தில் கல்வியில் சில திருப்திகரமான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. 2006 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான அடித்தளத்தை அன்றைய அதிபர் மர்ஹூம் T.M.இக்பால் மூலம் இடப் படுகிறது. அதனைத் தொடர்ந்து வந்த காலத்தில் அதிபருடன் SDS, பெற்றார்கள் ஆகியோரின் அயராத முயற்சியினாலும் உயர்தர கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 2007 முதல் இன்று வரை பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்ற எம். எம். எம். ரிஸ்வான் காலம் கல்வித்துறையில் ஒரு மறு மலர்ச்சிக் காலமெனக் கூறலாம். இக்காலத்தில் பாடசாலையின் இடப் பற்றாக் குறைக்கு அரசாங்கத்தின் மூலம் இரு மாடிக் கட்டடம் பெற்றுக் கொள்ளப்பட்டது. பாடசாலையின் சாதனைகள் நாளுக்கு நாள் வெளிக் காட்டப்பட 200க்கு குறைவான மாணவர் கொண்ட பாடசாலையாக இருந்த இப்பாடசாலை தற்போது 500 மாணவர்களையும் தாண்டி விட்டது. வகுப்பறைகளுக்கான பற்றாக்குறை காரணமாக தரம் 1 தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் அனுமதி பூரணமாக நிறுத்தப்பட எமது பழைய மாணவர் ஜுனைதீன் M இர்பான் முன்வந்து நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ஒன்றை கட்டித் தந்தார். இது பாடசாலையின் தேவையை ஓரளவு நிவர்த்தி செய்தாலும் இன்னும் தேவை தீர்ந்ததாக இல்லை. ஊர் மக்கள் சகலரும் SDEC, OBA குழுவோடு சேர்ந்து இன்னுமோர் கட்டடத்தை அமைக்க முயற்சி செய்தார்கள். தேவையான மணலை ஆற்றிலிருந்து அள்ளி எடுப்பது முதல் அத்திவாரம் வெட்டுதல் என சகல வேலைகளையும் இவர்களே செய்தார்கள். கூரைக்குத் தேவையான மரங்கள் இலவசமாகக் கிடைத்தன. முடியுமானவர்கள் முடியுமான உதவிகளை செய்தார்கள். இரு வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டன. தனது பாடசாலைக்கு உதவி செய்வதில் பேரார்வம் கொண்ட இர்பான் உடனே முன் வந்து 25×90 அளவுள்ள இன்று தலை நிமிர்ந்து காட்சி தரும் இர்பான் கேட்போர் கூடத்தை முழுமையாக கட்டி முடித்து அதற்கு தேவையான சகல வசதிகளையும் செய்து தந்து இன்று வரலாறு காணாத வைபவத்துடன் திறந்து வைக்கப் படுகிறது. இது பாடசாலை வரலாற்றில் யாராலும் மறக்க முடியாத பொன்னாள் ஆகும். இவரது காலத்தில் க. பொ. த. சா/த. பரீட்சைக்கு தோற்றிய அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் இதுவரை காலமும் உயர்தர கலைப் பிரிவில் வகுப்புகளை நாடி வெளியில் சென்ற மாணவர்களை தடுத்து, இதே பாடசாலையில் அதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்ததின் ஊடாக மாணவர்களும் அவர் தம் பெற்றார்களும் இது நாள்வரை முகம் கொடுத்து வந்த அசௌகரியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டதை ஒரு வரலாற்றுப் பதிவாக கருதலாம்.

2007ஆம் ஆண்டு முதல் கெப்பிடிய முஸ்லிம் வித்தியாலயம், கெப்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டதுடன், உயர்தர வகுப்பிற்கான கலை பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு, முதற்தடவையிலேயே மாணவி M.S.அஸ்ரின் பல்கலைக்கழகப் பிரவேசத்தையும் பெற்றுக் கொண்டார். கடந்த ஐந்து ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 40 ஐ எட்டியுள்ளது. இதில் பல மாணவர்கள் சட்ட பீடம் சென்றுள்ளதுடன். கலைத்துறை தவிர்ந்த ஏனைய துறைகளுக்காக வெளிப் பாடசாலை சென்ற பல மாணவர்கள் மருத்துவ, விஞ்ஞான, தொழில் நுட்ப துறைகளுக்காக பல்கலைக்கழகம் சென்றுள்ளதானது எமது பாடசாலை வரலாற்றின் சாதனையேயாகும். எமது பழைய மாணவன் சட்டத்தரணி சால்தீன் M சப்ரி கிராமத்தில் திறந்துவிட்ட சட்டக்கல்வி வாசல் மூலம் எமது பாடசாலை சட்டத்துறை மாணவர்களை தொடர்ச்சியாக பிரசவித்து வருகிறது. இது மட்டுமன்றி

கற்றலில் மாத்திரமன்றி இணைப் பாட விதான செயல்பாடுகளிலும் இப்பாடசாலையின் சாதனைகள். பொன் ஏட்டில் பதிக்கத் தக்கவையாகும். கிரிக்கெட் விளையாட்டில் அகில இலங்கை வரை சென்றுள்ளது. மீலாதுன் நபி தினப் போட்டி, தமிழ் மொழி தினப் போட்டி மற்றும் கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டி என்பவற்றிலும் தேசிய மட்டத்தில் பங்குபற்றி இப் பாடசாலை மாணவர்கள் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

கலேவெல கல்வி வலயத்தில் ஓர் முன்னணி பாடசாலையாக கெப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம் தன்னகத்தே உயர்ந்து நிற்கின்றது என்றால் அது அதிபர் எம். எம். எம். ரிஸ்வானின் தனித்துவ சிறந்த ஆளுமையினால் ஆகும்.

## கீர்த்தி மிகப் பெரிது

மலையகத்தின் மத்தியிலே
மாத்தளையின் முத்தாம்
கலேவெல நகரினிலே
கொழும்பு தம்புள்ளை
பெருவீதி ஓரத்திலே
பெருமிதமாய் நிமிர்ந்து
காட்சி தந்திடும் கலையகம்
எமதே என்பதை அறிவீரே
மூர்த்தி சிறிது ஆயினும்
கீர்த்தி பெரிதென
பெரியோர் மொழிக்கு
ஒப்பவே எமது நதி மூலம்
அற்பமாய் தோன்றினும் அதன்
ஊட்டமோ மிகவும் பெரிது
எமது வரலாற்று ஏட்டின்
புதிய அத்தியாயம் நாளை
புரட்டப்படுகையில் எம்
சமூகத்தின் முகவரி இதுவென
உலகம் இனம் காணும்
என்பது மாத்திரம் உறுதியடா

**M. நபீல்** (உபஅதிபர்)

## OBA போஷகர் ஜுனைதீன் M. இர்பானின் இதய ஊற்றிலிருந்து...



பாடசாலை வைரவிழா நிகழ்விற்கும், தொடர் விருத்திக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக என்று பிராத்தித்தவனாக...

ஒவ்வொரு ஊரிலும் இரு கண்களாக கருதப்படும் மஸ்ஜித் மற்றும் பாடசாலை ஆகிய இரண்டையும் பாதுகாத்துப் போஷிப்பது எம் அனைவரதும் கடமையாகும் என கருதுகிறேன்.

அல்லாஹ் எம் ஒவ்வொருவருக்கும் என்னென்ன நிஃமத்துக்களை (வளங்களை) வழங்கியுள்ளனோ அவற்றின் மூலம் நாம் எமது கடமையை செய்ய வேண்டும் என்ற வகையில் எனக்கு அல்லாஹ் தந்ததை நான் எனது சமூகத்துக்காக செலவு செய்யும் பாக்கியத்துக்கு நன்றி கூறுகிறேன்.

சமூகத்தின் எல்லா துறைகளையும் விமர்சிக்கும் சமூகமாக நாம் இருக்கக் கூடாது. எனக்கு ஆற்றல் உள்ளதை விமர்சிக்க வேண்டும். அதற்குத்தான் என்னால் பூரணமாக உதவியும் செய்ய முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனது இந்த சமூக சேவை பணிக்கு பக்கபலமாகவும், துணையாகவும் இருக்கும் எனது மனைவி, பெற்றோர், சகோதரி, சகோதரர்கள், அதிபர் M.M.ரிஸ்வான், SDEC செயலாளர் சகோதரர் A.S.M.ரிகாஸ் உட்பட உறுப்பினர்கள், OBA உறுப்பினர்கள், நண்பர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் ஜஸாக்கல்லாஹுகைரா. எமது பாடசாலையின் முன்னேற்றத்துக்காய் எல்லோரும் ஒன்று சேர்வோம். இதுவே எமது வெற்றி எனவும் கூற விரும்புகிறேன்.



பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்

## பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்

வைர விழாவையும் தாண்டி 64 ஆவது அகவையில் தடம் பதித்து தளராது நிமிர்ந்து நிற்கும் கெப்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய கேட்போர் கூடத்துடனான இருமாடிக் கட்டடம் பாடசாலை வளாகத்திற்குப் புதுப் பொழிவையும் வனப்பையும் அள்ளி வீசி பார்ப்போரை பிரமிக்கச் செய்து கொண்டிருக்கிறது

இக் கேட்போர் கூடத்தின் திறப்பு விழாவின் நிமித்தம் ஆசிச் செய்தியொன்றைப் பதிவிடுவதற்கு எனக்குக் கிடைக்கப் பெற்ற வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்

பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகள் மிகுந்த இக் காலகட்டத்தில் தொழிலதிபர் சகோதரர் ஜே.எம். இர்பானின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வகுப்பறைகளுடன் கூடிய இரு மாடிக் கட்டடம் இறையருளால் எமது பாடசாலைக்குக் கிடைக்கப் பெற்ற ஓர் அரிய பொக்கிஷமாகும். இதனை மாணவப் பரம்பரைக்கு நிர்மாணித்துத் தந்துதவிய சகோதரர் ஜே.எம். இர்பான் ஹாஜி அவரது பெற்றோர் மற்றும் மனைவி மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டுமென வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**A.S.M. ரிகாஸ்**
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்.




பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் (OBA)

கணினி ஒழுங்கமைப்பு:
**செல்வி எம்.ஆர்.எப். ஹப்ஸா**



தொகுப்பு:
**பீ.எம். அன்வர்**
(தம்புள்ள தினகரன் நிருபர்)



ஆறு திருமுருகன் எழுதிய திருக்கேதீச்சர இலக்கிய பெட்டகம் நூல் வெளியீடும், அகில இலங்கை இந்துமாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் நினைவுப் பேருரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. நல்லூர் கோவில் வீதியில் உள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய நிலையத்தில் நிகழ்வுகள் இடம்பெற்ற நிகழ்வில் முன்னதாக அகில இலங்கை இந்துமாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டனின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் ஆறு திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# 35 வருட கால அபிவிருத்தி இடைவெளியை இரண்டு வருடத்தில் நிரப்பி விட முடியாது



35வருட கால அபிவிருத்தி இடைவெளியை வெறுமனே இரண்டு வருடத்தில் முழுமையாக நிரப்பி விட முடியாது என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

எமது மாவட்டத்தில் சனத்தொகை வெகுவாக குறைந்து வருகிறது. எமது நாட்டில் வாழ வழியின்றி இளைய சமுதாயம் எம் கண் முன்னே வெளிநாடுகளுக்கு சென்றுகொண்டிருக்கின்றது. அன்று அரசியல் அகதிகளாகவும்இன்று பொருளாதார அகதிகளாகவும் எமது மக்கள் நாட்டை விட்டு சென்றுகொண்டிருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காணாவிட்டால் இங்கு முதியோர் மட்டுமே மீதியாக இருப்பார்கள். அதன் பின்னராக தீர்வைப் பெற்று யாருக்கு கொடுப்பது? 7075 வருடங்களாக தமிழ்த் தேசியம் என்ற கொள்கைக்கு பின்னால் நின்றோம். அந்த கொள்கை எந்தளவிற்கு வெற்றியைத் தந்துள்ளது?,எவ்வளவு தூரத்திற்கு தீர்வு ஒன்று கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. தீர்வைப் பெற்ற பின்பு தான் நாம் வாழ முடியும் என்ற கோட்பாட்டில் எனக்கு உடன்பாடில்லை.

சகல துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் பாதையில் நாம் பயணித்து வருகிறோம்.

எமது மாவட்டத்தை விட ஏனைய மாவட்டங்கள் பாரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளன. எமது மாவட்டத்தை முன்னேற்றுவதற்கான பல நடவடிக்கைகளை கடந்த இரண்டு வருட காலத்திற்குள் முன்னெடுத்துள்ளோம்.

பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்பாக கடந்த 2 வருடத்தில் 6000மில்லியன் ரூபாய்க்கும் 7000 மில்லியன் ரூபாய்க்கும் இடைப்பட்ட நிதியை யாழ் மாவட்டத்திற்கு கொண்டு வந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மக்களுக்காக மேற்கொண்டுள்ளோம். அந்த நிதி மூலமாக சகல கிராமங்களிலும் பல அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இரண்டு வருட காலத்திற்குள் 35வருட கால அபிவிருத்தி இடைவெளியை நிரப்பி விட முடியாது என்பதனை மக்கள் புரிந்துகொள்வார்கள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல்

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணைநாகதம்பிரான்ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 05/04/2023ந் திகதி நடைபெறவுள்ளது.

வருடாந்த பொங்கல் உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்த ஆலோசனைக் கூட்டம் நாகதம்பிரான் ஆலய பூசை வழிபாடுகளை தொடர்ந்து மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆலயத்தில் நடைபெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் எதிர்வரும் பொங்கல் உற்சவத்துக்கு வழமை போன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகைதரவுள்ளதால் அவர்களுக்கான பாதுகாப்பு ஆலயத்தின் பொங்கல் ஏற்பாடுகளை முன்னெடுத்தல், பாரம்பரிய முறைப்படி பண்டமெடுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள், பக்தர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், வீதிப் புனரமைப்பு பணிகள் சுகாதார வசதி மருத்துவ வசதி மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொலிசார் துறைசார்ந்த திணைக்களங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், உற்சவ கால தொண்டர்கள், உபயகாரர்கள் மற்றும் பரிபாலன சபையினர், தர்மகர்த்தாக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பில் கள்ளநோட்டு அச்சிட்டவர் விளக்கமறியலில்!

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

புதுக்குடியிருப்பில் 35 இலட்சம் கள்ள நோட்டு அச்சிட்டவர் இயந்திரத்துடன் சிறப்பு அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். திருகோணமலையினை சேர்ந்த 42 அகவையுடைய குறித்த நபர் திருமணம் செய்து தேவிபுரம் பகுதிக்கு வந்து செல்வது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் இரண்டாவது தடவையாக கள்ளநோட்டு சம்பவத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கடந்த 08.09.2022 அன்று திருகோணமலை குச்சவெளிப்பகுதியில் கள்ளநோட்டுடன் இவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இவர் 09.03.23 அன்று கள்ளநோட்டுக்களை அச்சிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் கள்ளநோட்டு அச்சிடம் இயந்திரம் ஒன்றும் அச்சிடப்பட்ட 5000 ரூபா தாள்கள் 700ம் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை 11.03.23 அன்று புதுக்குடியிருப்பு பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவரை எதிர்வரும் 21.03.23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

# இந்திய - அவுஸ்திரேலிய உறவில் புதிய அத்தியாயம்

## அவுஸ்திரேலிய பிரதமர் பெருமிதம்

இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த 8ம் திகதி புதுடில்லி வந்தடைந்த அவுஸ்திரேலிய பிரதமர் அன்தனி அல்பனீஸ், தன் குஜராத் விஜயத்தின்போது ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற ஹோலி பண்டிகையில் கலந்து கொண்டார். அவரை மாநில முதல்வர் பூபேந்திபட்டேலும் ஆளுநர் ஆச்சார்ய தேவ்ரத்தும் வரவேற்றுஉபசரித்தனர்.

பின்னர் அஹ்மதாபாத்தில் அமைந்திருக்கும் மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமத்துக்கு விஜயம் செய்த அவர், முழு ஆசிரமத்தையும் சுற்றிப் பார்த்தார். அஹ்மதாபாத்தில் தனக்கு பெருவரவேற்பு அளிக்கப்பட்டதாகவும் இந்திய–அவுஸ்திரேலிய உறவில் புதிய அத்தியாயம் மலர்ந்திருப்பதாகவும் தன் ட்விட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆஹ்மதாபாத், புதுடில்லி மற்றும் மும்பைக்கு அவர் விஜயம் செய்த போது அவருடன் வந்திருந்த வர்த்தகர் குழு இந் நகரங்களில் இந்திய வர்த்தகர்களை சந்தித்து இரு தரப்பு முதலீடுகள், புதிய வர்த்தகங்களை ஆரம்பிக்கும் சாத்தியங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. இவ் விஜயத்தின் போது விளையாட்டுத்துறை, புத்தாக்கம், சூரிய மின்சக்தி ஆகிய துறைகளில் உடன்படிக்கைகள் கையெழுத்தாகின. குஜராத்தில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இந்தோ– பசுபிக் பிராந்தியத்தில் சீன செல்வாக்கு குறித்து, இரு தலைவர்களும் பேசியதாகவும் இவ்வாண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் குவாட் நாடுகளின் கடற்படை பயிற்சி பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

ஜி20 உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலிய பிரதமர் செப்டம்பரில் புதுடில்லி வரவுள்ளார்.

# அணுவாயுத குறைப்பு உடன்படிக்கையில் இருந்து ரஷ்யா விலகக் கூடாது

மூலோபாய அணுவாயுத குறைப்பு ஒப்பந்தத்தில் இருந்துவிலகிக் கொள்வதாக ரஷ்யா தெரிவித்திருப்பது பொறுப்பற்ற முடிவு என்று வர்ணித்திருக்கும் அமெரிக்க வெளியுறவு செயலாளர் அந்தனி பிளிங்கன், இந்த உடன்படிக்கையை ரஷ்யா அமுலுக்கு கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

அணுவாயுதங்களைக் குறைக்க உதவும் இம் முக்கிய உடன்படிக்கை 2010ம் ஆண்டு புதிதாக இரு நாடுகளுக்கும் இடையேசெய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை 2026 வரை நடைமுறையில் இருக்கும். ஆனால் கடந்தமாதம் ரஷ்ய அதிபர் விலாடிமிர் புட்டின், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இருந்துதாம் விலகிக் கொள்வதாகஅறிவித்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

டில்லியில் ஜி20 வெளிவிவகாரஅமைச்சர் கலந்து கொண்ட மாநாட்டில் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ரஷ் வெளியுறவுஅமைச்சர் சேர்ஜி லவ்ரோவை சந்தித்துபேசினார். உக்ரேன் யுத்தத்தின் பின்னர் இரு தரப்பினரும் சந்திப்பது இதுவேமுதல் தடவையாகும்.

ரஷ்யவெளியுறவுஅமைச்சரைசந்தித்தபோதுபொறுப்பற்ற இத் தீர்மானத்தைமாற்றிக் கொண்டு இரு நாடுகளுக்கும் பலன் தரக் கூடிய உடன்படிக்கையில் தொடரும்படியும், இரு பிரதான அணுவாயுத நாடுகளை ரஷ்யாவிடமும் அமெரிக்காவிடமிருந்தும் உலக மக்கள் இதைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்று தான் கூறியதாக பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

நம்மிருநாடுகளுக்கு இடையேஎத்தகையபிரச்சினையும் உறவு சீர்கேடும் இருந்து விட்டுப் போகட்டும். நாம் இப்போது இந்த உடன்படிக்கைக்கு திரும்பவேண்டும். ஏனெனில் பனிப்போர் நிகழ்ந்த காலத்திலும் கூட இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது என்றும் பிளிங்கன் சேர்ஜியிடம் தெரிவித்தார்.

# டில்லி அமெரிக்க வர்த்தக மாநாட்டில் அமெரிக்க செயலாளர்

மூன்று வருடகால இடைவெளியின் பின்னர் கடந்த 10ம் திகதி இந்திய அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தை புதுடில்லியில் ஆரம்பமானது. 2019ம் ஆண்டின் பின்னர் இப்போதுதான் ஐந்தாவது வர்த்தக பேச்சுவார்த்தை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தபேச்சுவார்த்தையில் இந்தியத் தரப்பில் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் பியூஷ் கோயலும் அமெரிக்கத் தரப்பில் வர்த்தகத்துக்கான அமெரிக்க செயலாளர் ஜினாரெய்மென்டோவும் கலந்து கொண்டனர்.

விரிவாக இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில் இந்திய அமெரிக்க வர்த்தக உறவுகளை அடுத்த தளத்துக்கு நகர்த்துவது குறித்தும், இரு நாடுகளும் மெசிமண்டக்டர் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஈடுபடுவது தொடர்பாகவும் மற்றும் இரு நாடுகளின் வர்த்தக விரிவாக்கத்தில் இந்தோ–பசுபிக் நாடுகளைஉள்ளடக்குவது பற்றியும் ஆராயப்பட்டது. பொருளாதாரதளமொன்றில் அதிக முதலீடுகளையும் வர்த்தக உறவுகளையும் இரு தரப்பிலும் வளர்ப்பது தொடர்பாக இப்பேச்சுகள் அமைந்ததாக அரசு விடுத்தசெய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றைய தினமே இரு நாடுகளின் தனியார் நிறுவன முதன்மை நிறைவேற்று அதிகாரிகள் கலந்துகொண்டஅமர்வும் இடம்பெற்றது.

அமெரிக்காவின் ஒன்பதாவது பெரிய வர்த்தக பங்காளராக இந்தியா விளங்குகிறது. அதேசமயம் இந்தியாவின் பெரிய வர்த்தக பங்காளராகவும் இந்தியாவிடமிருந்து அதிகளவிலான பொருட்களை இறக்குமதி செய்யும் நாடாக அமெரிக்கா விளங்குகிறது. கடந்த ஆண்டில் இரு தரப்புவர்த்தகம் 131 பில்லியன் டொலர்களைத் தாண்டியது. இந்தியாவில் முதலீடுசெய்யும் முதல் ஐந்து நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று.

# டில்லி ஹோலி பண்டிகையில் கலந்துகொண்ட வெளிநாட்டு தூதுவர்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சி

கடந்த திங்கட்கிழமை புதுடில்லியில் விசேடவிருந்தினர்களுக்காக அமைச்சர்கள் நடத்திய ஹோலி பண்டிகையில் டில்லியில் அமைந்துள்ள பன்னாட்டு தூதுவர்கள் கலந்து கொண்டு ஹோலி பண்டிகையின் சிறப்பையும், ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருப்பதையும் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

டில்லியில் நடைபெற்ற இந்த ஹோலி நிகழ்வுகளில் ஆர்ஜன்டீனிய தூதுவர் ஹியுகோ ஜாவியர் கொபி,கிரேக்கத் தூதுவர் திமித்ரியல் லொனொவ், அயர்லாந்து தூதுவர் பிரெண்டன் வார்ட், லித்துவானிய தூதுவர் டயானாமிகோவிஸின், டென்மார்க் தூதுவர் பிறடி ஸ்வானே,போலந்து தூதுவர் அடம் புரகோவஸ்கி, செக் குடியரசின் தூதுவர் எலிஸ்காஸிகோவா ஆகியோர் கலந்து கொண்டு வண்ணப் பொடிகளைத் தூவி மகிழ்ந்ததோடு புகழ் பெற்ற இந்திப் பாடல்களுக்கு நடனமாடினர்.

இந்திய உலக அரங்கில் என்ற அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதற்கு அதன் ஜி20 தலைமைத்துவமே சான்றாகும் என்றும், உலகின் தெற்கு முகத்தை உலக அரங்கில் முன்வைக்கும் வாய்ப்பு இந்தியாவுக்கு கிட்டியுள்ளதாகவும், இந்தியாவுக்கு தமது முழுமையான ஆதரவு உண்டு என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் மீனாட்சிலேஹி இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போது, உலகின் கடினமான பிரச்சினைகளுக்கு இந்தியா தீர்வுகளைப் பெற்றுத்தரும் என முழு உலகமும் எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வாக இந்தியஞானம் பயன்படும் எனதாம் எதிர்ப்பார்ப்பதாக லித்துவானிய தூதர் டயானா குறிப்பிட்டிருந்தார்.

# அமெரிக்க யூத கமிட்டி பிரதிநிதிகள் இந்திய வெளியுறவு அமைச்சருடன் சந்திப்பு


அமெரிக்காவில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் செல்வாக்கு பெற்ற அமெரிக்க யூத கமிட்டியின் தூதுக்குழு கடந்த வாரம் புதுடில்லி வெளிவிவகார அமைச்சில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.பேச்சுவார்த்தையின் போது 2014 தொடக்கம் இந்திய–அமெரிக்க மற்றும் இந்திய இஸ்ரேலிய உறவுகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய மிகப்பெரிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் ஜெய்சங்கர் தன் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்த யூத கமிட்டி பிரதிநிதிகளுடன் இந்திய யூத பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

உலக விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடிய இக்கமிட்டியுடனான முழுவதுமான பேச்சுவார்தை விவரங்கள் வெளியிடப்படவில்லை.

முப்பது வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலுடனான முழுமையான இராஜதந்திர உறவை இந்தியா ஏற்படுத்திக் கொண்டது. அதன் பின்னர் இரு நாட்டு உறவுகள் பலப்பட்டு வந்துள்ளன.

# மலைச்சாரல்



பூண்டுலோயா –டன்சினன் பிரதான பாதை;

## புனரமைக்குமாறு 12 தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

பூண்டுலோயாவிலிருந்து டன்சினன் வழியாக நுவரெலியா செல்லும் பிரதான பாதையை வெகுவிரைவில் புனரமைத்து தருமாறு வலியுறுத்தி, சுமார் 12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து நேற்று (12) பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

எதிர்ப்பு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறும், கறுப்பு கொடிகளை தாங்கியவாறும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூண்டுலோயா, கிகிலியாமான 3ஆம் கட்டை பகுதியிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி, டன்சினன் காந்திபுரம், டன்சினன் மத்திய பிரிவு, டன்சினன் கீழ்பிரிவு, சீன் கீழ்பிரிவு ஊடாக பூண்டுலோயா பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்தது.

அதன்பின் அங்கு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு, போராட்ட ஏற்பாட்டுக்குழுவால் ஊடக சந்திப்பொன்றும் நடத்தப்பட்டது.

12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள், டன்சினன் பாதையின் விடியலுக்காக முன்னெடுக்கப்பட்ட பேரணிக்கு முழு ஆதரவையும் வழங்கினர். மத குருமார்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்தோடு, பூண்டுலோயா நகரங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.

## மலையக மக்கள் மீதான பாரபட்சம் நீக்கப்பட வேண்டும்

சபையில் இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையக மக்கள் மீதான பாரபட்சத்தை நிவர்த்தி செய்ய ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அவசியம் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஐக்கிய மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் என்ற வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கிறேன். அதற்காக எமது கட்சியின் சார்பில் 19 வேட்பாளர்களுக்கான வேட்பு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோஷம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படாத நிலையில் அதன் ஆட்சிக் காலம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை காணப்படுகிறது. மாகாண சபைகள் கலைக்கப்பட்டு மாகாண சபைத் தேர்தல் இன்னும் நிலுவையிலேயே காணப்படுகிறது. அந்த வகையில் உள்ளூராட்சி சபை தேர்தலன்றி மாகாண சபை தேர்தலுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.



அந்த வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சிச் சபை தேர்தலை நடத்துவதை விட மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்பதிலேயே முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பது எனது கருத்து.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்கள் நடத்தியதை நாம் கவனித்துள்ளோம்.

நாட்டின் சூழ்நிலை தற்போது சுமுகமாக மாறிவரும் நிலையில் ரூபாவின் பெறுமதியும் அதிகரித்து வருகின்றது. பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நிலையை பொறுத்துக் கொள்ள முடியாதவர்களே மக்களை வீதிக்கு இறக்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

மீண்டும் பழைய நிலைக்கு நாட்டைக் கொண்டு வருவதற்கு அவர்கள் முயற்சிப்பதை பார்க்கும் போது கவலையாக உள்ளது.

நாட்டிற்கு வருகை தரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்லும் நிலையில் எமது ரூபாவின் பெறுமதியும் அதிகரித்து வருகிறது.

கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள் அனைத்தும் தற்போது உல்லாசப் பயணிகளால் நிரம்பி வழிகிறது. நாட்டின் ஏனைய சுற்றுலாப் பயண பிரதேசங்களிலும் இதே நிலைமையே காணப்படுகின்றன.

இந்த நிலையை பொறுத்துக் கொள்ள முடியாதவர்களே நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக மக்களை வீதிகளில் இறக்கி போராட்டங்களுக்குத் தூண்டுகின்றனர். இந்த சூழ்ச்சிகளுக்கு மக்கள் அகப்பட்டு விடக்கூடாது. இந்த செயற்பாடுகள் நாட்டின் பொருளாதாரத்தை முடக்கி மேலும் கஷ்ட நிலையையே கொண்டு வரும். அதனால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நெருக்கடியில் இலங்கைக்கு கைகொடுத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிப்பு

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த சந்தர்ப்பத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்கிய தமிழக முதலமைச்சருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்தார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினின் 70ஆவது பிறந்த நாள் விழா 'மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருநாள்' என்று கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மலேஷியா பாராளுமன்ற உறுப்பினர் டடுக் ஸ்ரீ எம்.சரவணன், இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் சிங்கப்பூர்,



சுவிட்சர்லாந்து, மொரிஷியஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் தி.மு.கவிற்கும் இடையில் பல தசாப்தங்களாக உள்ள வலுவான நட்பை நினைவு கூர்ந்தார்.

தமிழ் நாட்டை சிறப்பாக ஆட்சி செய்து,உலக ரீதியில் போற்றப்படும் நலன்திட்டங்களை அறிமுகப் படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, எதிர்காலத்திலும் சிறப்பாக ஆட்சி செய்ய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாகவும், இலங்கை மக்கள் சார்பாகவும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

## இராகலை நகரில் முதன் முறையாக காமன் கூத்து







மெராயா திஸ்பனை தோட்ட காமன் கூத்து குழுவின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற காமன் கூத்து நிகழ்வு இராகலை நகருக்கு வருகை தந்திருந்த அனைவரையும் பரவசப்படுத்தியது.

மேலும் மெராயா திஸ்பனை தோட்டத்தில் இம்மாதம் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள காமன் கூத்து நிகழ்வுக்கு தேவையான பணம் வசூலிக்கும் வகையில் இந்த நிகழ்வு இராகலை நகரில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை ஆமினா மகளிர் தேசியக் கல்லூரியின் பரிசளிப்பு விழா



















மாத்தளை ஆமினா மகளிர் தேசியக் கல்லூரியின் (60 ஆம் ஆண்டு) வைரவிழாவை முன்னிட்டு நடந்த பரிசளிப்பு வைபவம் அண்மையில் கல்லூரி கோட்போர் கூடத்தில் நடைபெற்றது.கல்லூரி அதிபர் எச்.எல்.சிராஜுதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் அஷ்ரப் சம்சுதீன் பிரதம அதிதியாகவும் மாத்தளை வலயக் கல்வி உதவிப் பணிப்பாளர் (தமிழ் பிரிவு) மோனிகா கோமஸ் சிறப்பதிதியாகவும் இப்பாடசாலையின் பழைய மாணவியும் கணக்காளருமான செல்வி இ.எப்.அஸ்மியா விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

படங்கள் மாத்தளை சுழற்சி நிருபர் எம்.சதுர்தீன்

### நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய

## 50 வர்த்தகர்களுக்கு 2 இலட்சத்து 47 ஆயிரம் ரூபா அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 50 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்து 47 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

அம்பாறை, தெஹியத்தக்கண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 69 சுற்றிவளைப்புகளில், 50 வர்த்தகர்களுக்கு 02 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.


நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் அமைதி ஏற்பட்டால் மட்டுமே பொருளாதாரம் முன்னேற்றமடையும்

### வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் அதன் ஆரம்பமாக நாட்டில் அமைதி ஏற்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அராஜக நடவடிக்கைகளால் பொருளாதாரம் மேலும் பாதிப்படையுமே தவிர ஒருபோதும் நாடு முன்னேற்றம் அடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் டொலரின் பெறுமதி குறைந்து வரும் நிலையில் இந்த நிலையை பயன்படுத்தி பெருந்தோட்ட கம்பனிகள் தேயிலை விலை குறைந்துள்ளதாக தெரிவிக்க ஆரம்பித்திருக்கின்றன என குறிப்பிட்ட அவர் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமாக இருந்தால் அந்த நாட்டில் தேர்தல் நடத்தப்படுவது முக்கியமாகும். ஆனால் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அதன் காரணமாக நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன.

போராட்டங்கள் அதிகரித்துள்ளன. இதனை அடக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கொழும்பு மற்றும் களனி பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களை அராஜக முறையில் அடக்குவதற்கு எடுத்த நடவடிக்கையை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் நாட்டில் பொருளாதாரம் அபிவிருத்தி அடையவேண்டுமாக இருந்தால் ஆரம்பமாக நாட்டில் அமைதி ஏற்படவேண்டும்.

மாறாக இவ்வாறான அராஜக நடவடிக்கைகளால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படுகிறது. சர்வஜன வாக்குரிமை நடத்தப்படவேண்டும். ஜனநாயகவாதியான ரணில் விக்ரமசிங்க தேர்தலை பிற்போடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அந்தளவுக்கு அவர் தள்ளப்பட்டுள்ளாரா என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியை பெற்றுக்கொள்ள ஆரம்பமாக இந்தியாவே கடன் மறுசீரமைப்பை எற்றுக்கொண்டது. அதன் பின்னர் ஜப்பான், பரிஸ் கிளப் தற்போது சீனாவும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் இந்த கடன் மறுசீரமைப்புக்கு சீனா எத்தனை வருடங்களுக்கு ஒத்துக்கொண்டுள்ளது என்ற செய்தி இதுவரை வெளிவரவில்லை. அதனால் ஜனாதிபதியும் அரசாங்கமும் இதனை நாட்டுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இராகலையில் பெண்கள் பேரணி



இராகலை நகரில் சென்.லெணாட்ஸ் தோட்ட புலமை பெண்கள் அமைப்பு எதிர்ப்பு பேரணியொன்றை நேற்று நடத்தினர். 'வெட்கம் கொண்டு விலகி செல்லாதே வீரம் கொண்டு வேர்த்து போக வை' எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது.

கண்டி சமூக அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் உலக மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு பேரணி சென் லெணாட்ஸ் தோட்ட கைகாட்டி சந்தியில் 12 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இராகலை நகரின் எரிபொருள் நிரப்பு நிலையம் வரை சென'று அங்கு ஒன்றுக்கூடல் இடம்பெற்றது.

இதன்போது 'வேலைத்தள வன்முறை மற்றும் பாலியல் சீண்டலுக்கு எதிராக சமவாய

190சட்டத்தை தேசிய சட்டமாக அங்கீகரிக்குக' 'நாட்டின் பொருளாதாரத்திற்கு இரண்டு தசாப்த காலமாக உழைக்கும் தோட்ட தொழிலாளர்களின் மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை வழங்குக' 'தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுரிமை,நில உரிமையை வழங்கு','பொருளாதார பின்னடைவால் சிக்கி தவிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை முன் கொண்டு செல்ல சம்பள உயர்வை வழங்கு'

'பொருளாதார நெருக்கடியில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடு'. பொருட்களின் விலையேற்றம் தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைக்காத நிலையில் கல்வி மற்றும் இடைவிலகளில் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன? இவ்வாறான பல கோரிக்கைகள் அடங்கிள பாதாதைகளை ஏந்தியவாறு பெண்கள் பேரணியில் சென்றனர்.

தோட்டத் தொழிலாளர் பெண்களின் அடிப்படை உரிமைகளை வழங்க அரசு திட்டம் வகுக்கும் வரை உலக மகளிர் தினத்தையொட்டிய எதிர்ப்பு நடவடிக்கையை கைவிடப்போவதில்லை என பேரணியில் கலந்து கொண்ட பெண்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்



மட்டக்களப்பு கல்வி வலயத்தில் சாதனை படைத்த 381 மாணவர்களுக்கு ஒரே மேடையில் நேற்று கௌரவம் வழங்கப்பட்டது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந்த் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மாவட்ட சென்ட். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட பணிப்பாளர் ஏ.எல்.மீராசாஹிபு உட்பட பலர் அதிதிகளாக பங்கேற்றனர். படம்: மட்டக்களப்பு குறூப் நிருபர்

# காகிதநகர் கிராம சேவகர் பிரிவில் யானைகள் அட்டகாசம்



**கல்குடா தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் கிராம சேவகர் பிரிவில் யானைகளின் அட்டகாசத்தினால் மிகவும் சிரமப்படுவதாகவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்சம்பந்தப்பட்டஅதிகாரிகளிடம்கேட்டுக்கொள்வதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் கிராம சேவகர்; பிரிவில் உள்ள மஜ்மா கிழக்கு, மஜ்மா மேற்கு, காகிதநகர், காவத்தமுனை போன்ற கிராமங்களுக்குள் இரவு நேரங்களில் உற்புகும் யானைகளின் அட்டகாசத்தினால் தங்களது வீட்டுத்தோட்ட பயிர்கள் சேதமடைவதுடன் தங்களது உயிர்களுக்கும் உத்தரவாதமில்லாமல் அச்சத்திலேயே இரவு பொழுதை கழிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை மஜ்மா கிழக்கு பகுதிக்குள் புகுந்த யானைகள் தென்னை, பலா, முந்திரிகை, கொய்யா போன்ற மரங்களை சேதப்படுத்தி சென்றுள்ளன.

பலவருடமாக சிறமங்களுக்கு மத்தியில் உருவாக்கிய மரங்களை பயன் பெறக்கூடிய நிலையில் தற்பொழுது ஒரு இரவில் புகுந்த யானைகள் அழித்து விட்டு சென்றுள்ளதாகவும் ஒவ்வொரு வருடமும் இதே நிலை காணப்படுவதாகவும் அதிகாரிகள் யானை வேலி போட்டுத்தருவதாக தெரிவித்து சென்றாரகள் என்றால் பின்னர் அவர்களை காணமுடிவதில்லை என்றும் எங்களுக்கு தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானை வேலிகளை அமைத்து யானைகளிடம் இருந்து பாதுகாப்பு பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுகின்றனர்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**2023 மார்ச் 15ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 120,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123F164 | LKA18223I157 | LKA36424C152 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 50,000 | 35,000 | 35,000 | 120,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 மார்ச் 15
தீர்ப்பனவுத் திகதி : 2023 மார்ச் 17
வழங்கப்படும் திகதி : 2023 மார்ச் 17
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 மார்ச் 15, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



## இலங்கை வங்கி

இலங்கை வங்கி மேல் மாகாண (மத்தி) பிரிவினால் நிர்வகிக்கப்படும் CRM அலகொன்றை நிறுவுவதற்கு பின்வரும் இடங்களில் பொருத்தமான கட்டடம் அல்லது வெற்றுக்காணி ஒன்று 10 வருட குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

### மட்டக்குளி

**குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம்/காணி நகரத்தின் மத்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடத்தின் முகப்பு குறைந்தபட்சம் 10′.6″ அடிகளாக பிரதான பாதைக்கு முகப்பாக காணப்படுதல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறத்திற்கு சென்று வருவதற்கான நுழைவாயில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்டடத்தின் அகலம் குறைந்தபட்சம் 12 அடிகளாக இருத்தல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக் கூடிய இடத்தில் இருத்தல் வேண்டும்.
- வெற்றுக் காணியாக இருந்தால், 10′.6″X18′ அடிகளாக இருத்தல் வேண்டும். (189 சதுர அடிகள்)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்/காணி உரிமையாளர் கட்டட வரைபடம்/காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (குத்தகைக் காணியாக இருப்பின்) போன்ற ஆவணங்களின் பிரதிகள் உள்ளிட்ட விபரங்களை இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"CRM இயந்திரத்தை நிறுவுதல்" (இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்)** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம்-மத்தி)
இலங்கை வங்கி,
இல: 41, பிறிஸ்டல் வீதி , கொழும்பு 01.
தொலைபேசி: 011 233 2446
தொலைநகல்: 011 233 0728
மின்னஞ்சல்: bocwpc@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை திரிபோஷ லிமிட்டிற்கு 180,000 எண்ணிக்கையான கிராப்ட் பைகளை (Kraft Paper Bags - 3ply) வழங்குதல்

**விலைமனு இல. SLTL/TB/01/2023**

1. இலங்கை திரிபோஷ லிமிடட்டிற்கு 180,000 எண்ணிக்கையான கிராப்ட் பைகளை (3 ply) வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: +94-0112236588 மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு கிராப்ட் பைகளை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 13,100.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2022-09-23ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2023-03-30ஆம் திகதி முதல் 2023-06-29ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 810,000.00 ரூபா தொகைக்கான 2023-03-30ஆம் திகதி முதல் 2023-07-27ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2023-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

## விலைமனுக்களின் சமர்ப்பிப்பு திகதி மாற்றம் – 2023

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார்**

### மருத்துவ உபகரணங்கள்

1. பிராந்திய பெறுகைக்குழுத் தலைவர் 22.02.2023ஆம் திகதி விளம்பரத்திற்கு அமைவாக கீழ் வரும் மருத்துவ உபகரணங்களின் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் திகதி 23.03.2023 பி.ப 2.00 மணி ஆக மாற்றப்பட்டுள்ளதோடு விலைமனுக்கள் அன்றைய தினமே பி.ப 2.30 மணிக்கு திறக்க முடிவுசெய்துள்ளார்.

RDHS/MN/PSSP/ME/Pack-A/2023/11, RDHS/MN/PSSP/ME/Pack-B/2023/12, RDHS/MN/PSSP/ME/Pack-C/2023/13, RDHS/MN/PSSP/ME/Pack-D/2023/14, RDHS/MN/PSSP/ME/Pack-E/2023/15, RDHS/MN/PSSP/ME/Pack-F/2023/16, RDHS/MN/PSSP/ME/Pack-G/2023/17 and RDHS/MN/PSSP/ME/Pack-H/2023/24

2. மேலும் புதிதாக விலைமனுக்களை பெற விரும்புவோர் 22.03.2023 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை நேரடியாக அல்லது தொலைபேசி இல 023-2223114 ஊடாகவும் விலைக்கேள்விப் பத்திரங்களை பி.சு.சே.ப.பணிமனையில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**பி.சு.சே.ப. பணிமனை, மன்னார்**

## சீன அரசினால் வழங்கப்பட்ட எரிபொருள்

# அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு விநியோகம்

**ஒலுவில் விசேட நிருபர்**



சீன அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட எரிபொருள் அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட வுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கமநல சேவை மத்திய நிலையங்களின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இரண்டு அரை ஏக்கருக்கு உட்பட்ட நெற்செய்கை காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 06 லீட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கமநல சேவை மத்திய நிலைய பெரும்பாக உத்தியோகத்தரினால் தெரிவு செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருளுக்கான பங்கீட்டு அட்டைக்கான எரிபொருளை அதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## இலங்கை துறைமுக அதிகாரசபை

### மருந்து வகைகளுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023 ஆம் ஆண்டு

2023ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையில் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவு சங்கம் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் வேறு நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 31 | மேற்கத்திய மற்றும் ஆயுர்வேத மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேற்கத்திய மருந்து வகைகள் |

**நிபந்தனைகள்**

01. வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்கள் தமது பதிவு சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேல் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்காக பதிவு செய்வதற்காக அலுவலக நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை 2023.04.03ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருட்களுக்காக 1000 ரூபா மற்றும் வெட் வரியை செலுத்திய பின் இல. 45, லேடன் பெஸ்டியன் வீதி, கொழும்பு 01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் தலைமை பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
03. வழங்கலுக்காக பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுவதோடு பதிவு செய்யப்படாத மற்றைய வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலை கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை துறைமுக அதிகாரசபை வசமானது.
04. முறையாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேரத்திற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு தவறுகின்ற மற்றும் துறைமுக அதிகாரசபை மூலம் வெளியிடப்படும் கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் மற்றும் மாதிரிக்கு அமைய சிறந்த தரத்தைக் கொண்ட பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
05. அனைத்து விண்ணப்பங்களும் ''2023 ஆம் ஆண்டுக்காக மருந்து வழங்குநர் பதிவு செய்தல்'' என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைமை பொறியியலாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலக்கம் 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்கு 2023.04.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள தலைமை பொறியியலாளர் அலுவலகத்திற்கும் இந்த விண்ணப்பத்தை ஒப்படைக்க முடியும். இதற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைமை பொறியியலாளர் (வழங்கல்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இலக்கம் 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01.**

**சுகாதார அமைச்சு**

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

### பெறுகை அறிவித்தல்

01. வைத்தியசாலைக்கு தேவையான கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி மாதிரிப் பத்திர இலக்கம் | உருப்படியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 1. | 6000 Nos of 18F FDG Radiation (Item 100mCi) | ரூ. 2000/- |
| 2. | Ultrasound Scanner Machine with Fusion & Navigation Biopsy Applications - High End (Radiology) | ரூ. 2000/- |
| 3. | GE-68 Calibration Phantom Machine | ரூ. 2000/- |

02. இலங்கை சந்தை சார்பாக மேற்படி உருப்படியை வழங்கும் எந்தக் கேள்விதாரர், பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் மாத்திரம் மேற்படி கேள்விக்காக முன்வருவதற்கு தகைமைபெறுவர்

**கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் வேளையில்**

I. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் வேண்டுதல் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
II. சகல கேள்வி மாதிரிப்பத்திரத்திற்கும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத தொகையில் ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
III. வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
IV. 2023.03.13ம் திகதி முதல் 2023.04.03 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் வேளையில்,**

I. இலங்கைக்குள் மேற்படி வழங்களிற்காக செல்லுபடியாகும் பதிவுச்சான்றிதழின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
II. சகல கேள்விக்கும் 2% கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலைகள் ஏற்கப்படமாட்டாது)
III. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென) வேறு வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
IV. சகல கேள்விகளும் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படும் மாதிரிப் பத்திரங்களிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
V. 2023.04.03 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்கு குழு தலைவருக்கு பதிவுத் தபாலில் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பூர்த்தியற்ற, தாமதமாகக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VI. கேள்வி திறக்கப்படும் வேலையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

03. விலைமனுக்களுடான கேள்விப் பத்திரங்களை 2023.04.03 மு.ப. 10.30 இற்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் திறக்கப்படும். மேலதிக விபரங்கள் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
தொ.பே. இலக்கம்: 0112839589/ 0112850252/ 0112850253
பெக்ஸ்: 0112839589

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம.**

## கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டம் மட்டக்குளி, காக்கை தீவிலிருந்து ஆரம்பம்



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் தீயினால் இலங்கையின் கரையோரத்தில் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்புகளை குறைக்கும் வேலைத் திட்டம், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று (12) உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

கடற்கரையோரத்திலுள்ள குப்பைகளை இயந்திரம் மூலம் அகற்றும் இந்தத் திட்டம் கொழும்பு மட்டக்குளி, காக்கைதீவு கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்டது.

கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை பொலிஸ் சுற்றாடல் பிரிவு, இலங்கை கடற்படை மற்றும் துடாவ பிரதர்ஸ் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இதன்போது கருத்துரைத்த சாகல ரத்நாயக்க, இலங்கையின் அழகிய கடற்கரைகள், சூழல், கலாசார பாரம்பரியம் ஆகியன சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. எனவே, அடுத்த தலைமுறைக்கு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதுடன், கடற்கரையையும் பாதுகாப்பதன் மூலம் சுற்றுலாத் துறையை வலுவாகப் பேணுவது அனைவரின் பொறுப்பென்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த கரையோரப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் நிலையான முறையில் அமுல்படுத்தப் போவதாகத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, அதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் ஆதரவைப் பெற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அசேல, *Clean Ocean Force* அமைப்பின் தலைவர் ஜெரோம் பெர்னாண்டோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல் லிமிடெட்

**“திருகோணமலை, சீனக் குடாவில் மேல் தொட்டி பண்ணைக்கு முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளுக்காக 10 எண்ணெய் களஞ்சிய தொட்டிகள் மற்றும் தொடர்புபட்ட வசதிகளை நிறுவ குழாய்களின் புனைவு மற்றும் நிறுவுதல், மறுசீரமைப்புத் திட்டத்திற்கான ஆலோசனை சேவைகள்”**

**TPTL/01/2023**

திருகோணமலை, சீனக் குடாவில் மேல் தொட்டி பண்ணைக்கு முன்மொழியப்பட்ட அபிவிருத்திகளுக்காக 10 எண்ணெய் களஞ்சிய தொட்டிகள் மற்றும் தொடர்புபட்ட வசதிகளை நிறுவ குழாய்களின் புனைவு மற்றும் நிறுவுதல், மறுசீரமைப்புத் திட்டத்திற்கான ஆலோசனை சேவைகளுக்காக ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் Ltd (TPTL) இன் சார்பில் திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 இலங்கை ரூபாவை (ரூபா 4348.00 + 15% VAT) செலுத்தி எழுத்துமூல கோரிக்கை ஒன்றை வழங்கி கொழும்பு 01 மேற்கு கோபுரம், 20ஆவது மாடியில் இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி (LIOC) இடமிருந்து 2023.04.03ஆம் திகதி வரை 0900 மணி மற்றும் 1500 மணிக்கு இடையே விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

விலைமனுக்களை ஏற்பது 2023.04.24ஆம் திகதி 1400 மணிக்கு நிறைவடைவதோடு விலைமனுவின் இறுதித் திகதி மற்றும் நேரம் முடிவுற்ற பின் கொழும்பு 01 மேற்கு கோபுரம், 20ஆவது மாடியில் இலங்கை இந்திய எண்ணெய் கம்பனியின் (LIOC) அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

விலைனுக்கள் ஏற்கும் திகதி மற்றும் நேரம் நிறைவடைவதற்கு முன்னர் விலைமனுக்களை மேல் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு சமர்ப்பிப்பது அல்லது **tptltenders@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

விலைமனுதாரர்கள் 1.2 மில்லியன் இலங்கை ரூபா தொகையின் விலைமனு பிணையுடன் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். மின்னஞ்சல் வழியாக விலைமனு சமர்ப்பிக்கப்பட்டால், விலைமனுவின் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன் LIOC அலுவலகத்திற்கு விலைமனுப் பிணையின் அசலை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்துடன் பொருந்துவதாக இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட வங்கி உத்தரவாதம் ஒன்றாக அல்லது இலங்கை வங்கியின் 0088340369 என்ற கணக்கு இலக்கத்திற்கு ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (Pvt) Ltd நிறுவனத்திற்கு ரொக்கப்பண வைப்பாக மேற்கொள்ளப்படல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியில் இருந்து ஆறு (06) மாதங்களுக்கு விலைமனு பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை 2023.04.06ஆம் திகதி 1500 மணி வரை LIOC, திட்ட முகாமையாளரின் அலுவலகத்தில் பரீட்சிக்கலாம். ஆர்வமுடைய விலைமனுதாரர்களுக்காக விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.lankaioc.com என்ற இணையதளங்களிலும் கிடைக்கப்பெறும். இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்யும் விலைமனுதாரர்களும் மேல் தரப்பட்ட கணக்கு இலக்கத்திற்கு 5000.00 இலங்கை ரூபா ஆவணக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதோடு விலைமனுவுடன் கட்டணம் செலுத்தியதன் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கீழ் தரப்பட்ட முகவரியில் பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் 2023.04.03 ஆம் திகதி 10.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்க கோரப்படுவதோடு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பின் திகதி மற்றும் நேரத்திற்கு குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்னர் பங்கேற்பவர்களின் பட்டியலை TPTL இற்கு தெரிவிக்கவும்.

(ஏதேனும்) தெளிவைப் பெற வேண்டுமாயின் கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி/ தொலைநகல் இலக்கங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு**
**ட்ரிங்கோ பெற்றோலியம் டேர்மினல்ஸ் (Pvt) Ltd,**
**1ஆவது மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09.**
**தொ.: 011 5455369, தொலைநகல்: 011 5455432, மின்னஞ்சல்: projectmanager.tptl@gmail.com**

## பெறுகை அறிவித்தல்

### குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான மொரகஹபிட்டிய பல்நோக்குக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியை குத்தகைக்கு விடுவதற்காக மேற்கொள்ளப்படும் அழைப்பு

குண்டசாலை பிரதேச சபைக்குச் சொந்தமான மொரகஹபிட்டிய பல்நோக்குக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் கொங்கிறீட் செய்யப்பட்டுள்ள கிட்டத்தட்ட 6800 சதுர அடி அளவுடைய தரைப் பிரதேசத்தை குத்தகைக்கு பெறுவதற்கு உத்தேசிக்கும் குத்தகைதாரரின் செலவில் குத்தகை தாரரால் உத்தேசிக்கப்படும் வியாபாரத்திற்காக நிர்மாண விடயங்களை மேற்கொண்டு நடத்திச் செல்வதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு (மதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம்) குண்டசாலை பிரதேச சபையின் மகா சபை தீர்மானித்துள்ளது.

02. அதனடிப்படையில் இக் கொங்கிறீட் இடப்பட்ட தரைப் பிரதேசத்தை பரீட்சித்து பார்த்து நிர்மாண விடயங்களுக்காக பட்டய பொறியியலாளர் ஒருவரின் உறுதி செய்யப்பட்ட வரைபடம் மற்றும் மதிப்பீட்டுக்கு உள்ளடக்கப்பட்ட திட்ட அறிக்கையை, தலைவர், குண்டசாலை பிரதேச சபையின் பெயருக்கு அதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் 2023.03.23ம் திகதிக்கு முன் இச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
03. சமர்ப்பிக்கப்படும் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் மொரகஹபிட்டிய பல் நோக்குக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகளை சமர்ப்பித்தல் என்று குறிப்பிட்டு 2023.03.23 மு.ப. 10.00 இற்கு முன் குண்டசாலை பிரதேச சபைக்கு சமர்ப்பிக்க முடியும் அத்துடன், அந்த சகல ஆலோசனைகளும் 2023.03.23 மு.ப. 10.00 இற்கு சகல கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. அக் கேள்வி சமர்ப்பிக்கும் போது ரூ. 25,000.00 வைப்பை தலைவர், குண்டசாலை பிரதேச சபையின் பெயரில் செலுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் தினம் கேள்விகளை சமர்ப்பிப்போர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அல்லது வேறு ஏதாவது தீர்மானம் எடுக்கும் உரிமை குண்டசாலை பிரதேசசபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**பி.எச்.எஸ். ரஞ்ஜர அக்மீமன.**
**குண்டசாலை பிரதேச சபை, மெனிக்ஹின்ன.**

## காட்டு யானை தாக்கி ஒருவர் காயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கல்கிரியாகம இதிகொல்லாகம பகுதியில் காட்டு யானை ஒன்று தாக்கியதில் நபர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேகம வெறுங்குளம் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய நபர் ஒருவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

அவர் கடந்த வியாழக்கிழமை (09) இதிகொல்லாவ குளத்து பகுதிக்கு அருகாமையில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

அவரது விவசாய நிலத்தில் இரவு நேர காவலில் ஈடுபட்டுவிட்டு மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர் தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சாவகச்சேரி நகரில் அரச பேருந்து மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் இ.போ.ச பேருந்துடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார்சைக்கிள் கடுமையாக சேதமடைந்துள்ள போதிலும் அதில் பயணித்தவர்கள் உயிராபத்துக்கள் எவையும் இன்றி தெய்வாதீனமாக தப்பித்துள்ளனர்.

குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகை அறிவித்தல்

மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் உப பெறுகைக் குழுவின் தலைவரால் ஆரம்ப சுகாதார சேவையை கட்டியெழும்பும் நிதி, மானியத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**மருத்துவ உபகரணங்கள்**

| தொடர் இல. | உபகரணம் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை ரூ. |
|---|---|---|---|
| 1 | Multi - Paramounitors with ECG Printer Fasility | 4 | 5,000.00 |
| 2 | Spirometer | 1 | 4,000.00 |

**அலுவலக உபகரணங்கள்**

| தொடர் இல. | உபகரணம் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை ரூ. |
|---|---|---|---|
| 1 | AC Machine Bru 18000 | 8 | 3,000.00 |
| | AC Machine BTU 24000 | 1 | 3,600.00 |
| 2 | Industrial Washing Machine | 1 | 5,000.00 |
| 3 | 10 KVA Generator | 2 | 4,000.00 |
| 4 | Rack for Drug Stores | 12 | 5,000.00 |

**கேள்வி நிபந்தனைகள்**

01) தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) ஊடாக இக் கேள்வி கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

02) விண்ணப்பதாரி இலங்கை வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனி சட்டத்தின் கீழ் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பற்றிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகார சபையின் (மருத்துவம் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்காக) பதிவு செய்யப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களாக இருப்பதுடன் இயந்திரங்களுக்கான உள்ளூர் விற்பனை நிறுவனத்தின் ஊடாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03) கேள்வி ஆவணங்களை எமது அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் 2023.03.13 முதல் 2023.04.03 வரை வேலை நாட்களில் மேற்கண்டவாறு கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணத்துடன் ஒவ்வொரு உருப்படிக்கும் அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 1% மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை வங்கிப் பிணை முறி மூலம் அல்லது எமது அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச் சீட்டை இணைத்தல் வேண்டும்.

04) பொறியிடப்பட்ட கேள்விகள் 02 பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும். அத்துடன், அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் உருப்படி இலக்கத்துடன் உபகரணத்தின் பெயர் மற்றும் 2023 ஆம் ஆண்டு என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2023.04.03 மு.ப. 10.00 இற்கு முன் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் தலைவர், பெறுகைக் குழு, மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, பரமுல்ல, மாத்தறை என்ற முகவரிக்கு தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

06. கேள்விகளைத் திறத்தல் அன்றே மு.ப. 11.00 இற்கு இடம் பெறும் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் மற்றும் குறித்தவாறு சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

09. இது பற்றிய மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**041-2222154/ 041-2222514**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாத்தறை மாவட்ட சுகாதார, சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**பரமுல்ல, மாத்தறை.**

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# தொம்பே பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (2023/01)

1. தொம்பே பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் மேல் மாகாண சபை செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2023 மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொம்பே பிரதேச சபைக்குரித்தான குருகல ஆயுர்வேத கட்டிடத்தின் மேல் மாடி வேலைகளை நிறைவு செய்யும் செயற்றிட்டத்திற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2.

| செயற்றிட்ட இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்தப் பதிவு | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|
| S238183111002 | தொம்பே பிரதேச சபைக்குரித்தான குருகல ஆயுர்வேத கட்டிடத்தின் மேல் மாடி வேலைகளை நிறைவு செய்தல் | 8.5 மில்லியன் | கட்டிட நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) C7 அல்லது C6 தரப் பதிவு | 75 நாட்கள் |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.

4. விலைமனுக்களை 2023-03-14ஆம் திகதி முதல் அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தொம்பே பிரதேச சபையின் கிரிந்திவெல பிரதான அலுவலகத்தின் கைத்தொழில் பிரிவிற்கு வருகை தந்து பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு 071-0536479 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக இந்தச் சபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

5. 2023-03-14ஆம் திகதி முதல் 2023-03-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் இந்த சபையின் கைத்தொழில் பிரிவிற்கு வருகை தந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூலமான விண்ணப்பமொன்றுடன் தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 5000.00 ரூபா விலைமனு ஆவணக் கட்டணமொன்றையும் செலுத்துதல் வேண்டும்.

7. விலைமனுக்களை ஒப்படைக்கும் போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள வங்கியொன்றில் அல்லது காப்புறுதி நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற 85,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணைமுறியொன்றை ''தலைவர், தொம்பே பிரதேச சபை'' எனும் பெயரில் பெற்று வழங்குதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 75 நாட்களுக்கு அது செல்லுபடியாதல் வேண்டும்.

8. விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தயாரித்து விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா எனக் குறிப்பிட்டு 2023-03-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தொம்பே பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தின் கூட்ட மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.

9. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

10. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து தொம்பே பிரதேச சபையின் தலைமை அலுவலகக் கூட்ட மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

11. ஏதாவதொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பியசேன காரியப்பெரும,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தொம்பே பிரதேச சபை,**
**கிரிந்திவெல.**

**திகதி: 2023-03-13.**

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு

# கட்டிடங்கள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **கட்டிடங்கள் திணைக்களத்தின்** சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| | வேலையின் விளக்கம் | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில்லியன் ரூபாவில்) | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 1. | அவிசாவளை மாவட்ட தொழில் அலுவலகத்தில் சேவை வசதிகள் மற்றும் செயற்பாட்டு வேலைகளின் மேம்படுத்தல் [ஒப்பந்த இல. RPC/CE(WS)-02/23] | 77 | 12.2 | 183,000.00 |
| 2. | நீர்கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் சேவை வசதிகள் மற்றும் செயற்பாட்டு வேலைகளின் மேம்படுத்தல் [ஒப்பந்த இல. RPC/CE(WS)-03/23] | 77 | 12.4 | 186,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகை அம்சங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதியானது 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் *CIDA* தர முன்னுரிமை ஆகியன *04/2016(iv)* மற்றும் *03/2020* ஆகிய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிருணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாணத்துறையில் சி-7, சி-6 அல்லது சி-5 ஆகிய தரங்களில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தலுடன் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

''விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது''.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, டொரிங்டன் அவென்யு, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள மேல் வடக்கு பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2554691. தொலைநகல்: 011-2554690

5. 2023.03.13 ஆம் திகதியிலிருந்து 2023.03.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொன்றுக்கும் நாலாயிரம் ரூபாவை (4,000 ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், **கொழும்பு-07, டொரிங்டன் அவென்யு, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள மேல் வடக்கு பிரதான பொறியியலாளருக்கு** எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. **விலைமனுக்கள் 2023.03.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, (மேல் தெற்கு), பிரதான பொறியியலாளர் (மேல் தெற்கு). கட்டிடங்கள் திணைக்களம், இல.: 213, டொரிங்டன் அவென்யு, கொழும்பு-07 என்ற முகவரியில் ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில்** அனுப்பப்படலாம். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், அதே முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்ட இறுதி திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - **கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதாகவிருத்தல்.**
   - மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்காகவிருத்தல்.
   - 2023 ஜுலை 12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் ITB உட்கூறு 16.2 இல் குறித்துரைக்கப்பட்டவாறான முகவராண்மை ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

**பொறியியலாளர் G.R.S.B. கம்லத்,**
**பணிப்பாளர் நிர்மாணம் ( 2 ஆம் பகுதி),**
**கட்டிடங்கள் திணைக்களம்.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP JN-3209 Ashok Leyland, 2004 கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542958 016175

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP AAH-8690 Bajaj, 2013, WP AAB-4910 Bajaj, 2012, NW AAY-12 9 4 Bajaj , 2015 t h reewhee l கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 016176

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

### கடற்றொழில் அமைச்சு

### இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

NAQDA

# விலைமனுக்கோரல்

## பெறுகை அறிவித்தல்

01. இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மைனர்) பின்வரும் சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் மூடப்படும் திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மூடப்படும் திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2023/NCB/S/03** கலாவெவ தேசிய நன்னீர் மீன்வளம் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (NIFATI) பயிற்சி பெற்றவர்களுக்கு உணவு பானம் வழங்குதல் டெலிவரி 2023-2024 | ரூ. 100,000.00 121 நாட்கள் (2023.08.02) | ரூ. 3,500.00 | 2023.04.03 பி.ப.3.00 | 2023.04.04 பி.ப.2.00 |

02. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை NAQDA உத்தியோகபூர்வ (www.naqda.gov.lk) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு - (மைனர்)**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2023.03.13**

Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/- (Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
BOC Lake House Branch Acc. No. 000000377

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பல்வேறு நோக்கங்களுக்காக உணவு மற்றும் குளிர்பான சேவையினை வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பக்கோரல்.**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பல்வேறு நோக்கங்களுக்காக **இரண்டு வருடங்களுக்கு (2023-2024)** உணவு மற்றும் குளிர்பான சேவையினை வழங்குவதற்கு தகுதியான வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

இந்தப் பணி தொடர்பான விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ இணையதளமான **www.ntc.gov.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களை **011-2503969** எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்காக ஆர்வமுள்ள வழங்குனர்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை **2023.03.28 ஆம் திகதி பி.ப.02.00** முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்முதல் பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும்.

குறிப்பிடப்பட்ட நேரம் முடிவடைந்தவுடன் குறித்த மனுக்கள் உடனடியாக திறக்கப்படும்.

**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 01/11/2022 | 01/12/2022 | 27 /03/2023 & 30/03/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ∴பினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## இலங்கை முதலீட்டுச் சபை

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2023 மார்ச் 13ஆம் திகதிய ''தினமின'' பத்திரிகையிலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**INVITATION FOR BIDS FOR TAILORING OF UNIFORMS TO THE SECURITY STAFFS OF BOI**
**CONTRACT NO: BOI/S&S/Q/002/2023**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''தினமின'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

CSIAP

THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் (வடமத்திய மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| லொட் இல. | ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|
| | | | | பெறுமதி (இல. ரூபா) | செல்லுபடிக் காலம் |
| 01 | LK-MOA-333621-GO-RFB /NCP/ DPDO/ Electric fence (11)/2023/ 14/23/28 | உலக வங்கி - CSIAP திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு 10,000 sqm Weed Mat (60 sqm x 167 rolls), 100 எண்ணிக்கையான மின்சார வேலிகள் (மின்சார சோலைக்கொள்ளை பொம்மை), 20 எண்ணிக்கையான IPM package, 50 எண்ணிக்கையான Poly Mulch (1/4 Ac), 140 எண்ணிக்கையான மின்சார நீர் பம்பிகள், 50 எண்ணிக்கையான நாற்றுமேடை தட்டுகள், 230 எண்ணிக்கையான Inter cultivator களுக்கான பெறுகை | 3,500.00 | | |
| | | லொட் 1 - 10,000 sqm Weed Mat (60 sqm x 167 rolls) | | 50,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 2 - 100 எண்ணிக்கையான மின்சார வேலிகள் (மின்சார சோலைக்கொள்ளை பொம்மை) | | 100,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 3 - 20 எண்ணிக்கையான IPM package (Yellow Bulb , Polygon Virus, Neemgosan, Pheromone traps, Yellow Sticky paper & Trico drama) | | 80,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 4 - 50 எண்ணிக்கையான Poly Mulch (800m roll (400x2) | | 60,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 5 - 140 எண்ணிக்கையான மின்சார நீர் பம்பிகள் | | 200,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 6 - 50 எண்ணிக்கையான நாற்றுமேடை தட்டுகள் | | 1,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 7 - 230 எண்ணிக்கையான Inter cultivators | | 230,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 02 | LK-MOA-333627-GO-RFB/ NCP/ DPDO/ Water Pumps (18)/2023/ 15/23/29 | உலக வங்கி - CSIAP திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு Agronomic Intervention நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 40 எண்ணிக்கையான சூரிய சக்தி நீர்ப் பம்பிகளுக்கான பெறுகை | 12,500.00 | 440,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 03 | LK-MOA-333619-GO-RFB/ NCP/ DPDO/ Sprinkler (22)/2023/ 16/23/30 | உலக வங்கி - CSIAP திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு 120 எண்ணிக்கையான Sprinkler/Rain jet (0.25 Ac's), 120 எண்ணிக்கையான Drip irrigation (0.25 Ac's), 40 எண்ணிக்கையான உயர் அழுத்த மண்ணெண்ணெய் நீர்ப் பம்பிகள், 50 எண்ணிக்கையான மண்ணெண்ணெய் பம்பிகளுக்கான பெறுகை | 5,000.00 | | |
| | | லொட் 1 - 120 எண்ணிக்கையான Sprinkler/Rain jet (0.25 Ac's) | | 160,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 2 - 120 எண்ணிக்கையான Drip irrigation (0.25 Ac's) | | 200,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 3 - 40 எண்ணிக்கையான உயர் அழுத்த மண்ணெண்ணெய் நீர்ப் பம்பிகள் | | 60,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 4 - 50 எண்ணிக்கையான மண்ணெண்ணெய் பம்பிகள் | | 50,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 04 | LK-MOA-333325-GO-RFB/ NCP/DPDO/ Insect proof net (23)/2023/ 17/23/31 | உலக வங்கி - CSIAP திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு Agronomic Intervention நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மழை நீர் தடுப்புகள் (600 சதுர அடிகள்), ஹைலன்ட் ரோலர் விதைக்கும் இயந்திரங்கள், பூச்சிகள் நுழைய முடியாத வலை சுருள்கள் (150 m), பூச்சிகள் நுழைய முடியாத வலை சுருள்கள் (50 m), மற்றும் Poly tunnels (1000 சதுர அடிகள்) என்பவற்றுக்கான பெறுகை | 5000.00 | | |
| | | லொட் 1 - 29 எண்ணிக்கையான மழை நீர் தடுப்புகள் (600 சதுர அடிகள்) | | 150,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 2 - 100 எண்ணிக்கையான பூச்சிகள் நுழைய முடியாத வலை சுருள்கள் (150 m x 3m) | | 150,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 3 - 300 எண்ணிக்கையான பூச்சிகள் நுழைய முடியாத வலை சுருள்கள் (50 m x 3m) | | 50,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 4 - 290 எண்ணிக்கையான ஹைலேண்ட் ரோலர் விதைக்கும் இயந்திரங்கள் | | 150,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| | | லொட் 5 - 29 எண்ணிக்கையான Poly tunnels (1000 சதுர அடிகள்) | | 290,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 05 | LK-MOA-293069-GO-RFB/ NCP/ DPDO/C.Fnce (19)/2022/ 11/23/32 | உலக வங்கி - CSIAP திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பயிர்ச்செய்கை வேலிகளுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 12,500.00 | 415,000.00 | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோருவதற்கும் மற்றும் / அல்லது இயைபுடைய விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே விலைக்கோரலில் ஒரு லொட்டுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு விலைகளைக் கோரலாம். ஆனால் ஒப்பந்தக்காரர்களின் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அனுராதபுரம், இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2054424/34) மற்றும் அதே இடத்தில் 2023 மார்ச் 13ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) வேலை நாட்களில் 2023 மார்ச் 13ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 02ஆம் திகதி வரை மற்றும் 2023 ஏப்ரல் 03ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் மற்றும் 2023 மார்ச் 15ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 5ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்
7. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு மற்றும் VAT பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
8. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதத்தை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாவிட்டால் பதிலளிக்காத விலைக்கோரலாகக் கருதி நிராகரிக்கப்படும்.
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 மார்ச் 22ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு மேற்படி 5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்வதற்கு முன் விலைக்கோரல் ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்புகள், ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகளை நன்கு அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
10. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
11. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் பொருட்களின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு (வடமத்திய மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமத்திய மாகாணம்), இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
14. விலைமனுக்கள் 2023 ஏப்ரல் 03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். மேற்கூறப்பட்ட முடிவுறுத்தல் திகதி அரசாங்க அறிவித்தல் காரணமாக அலுவலகம் மூடப்பட்டால், அதற்கு அடுத்து வரும் வேலை நாளில் அதே நேரத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
15. சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் (வடமத்திய மாகாணம்) தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு தனது சொந்த விருப்பத்தின் பிரகாரம் ஒன்றை அல்லது ஏதேனும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு (வடமத்திய மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வடமத்திய மாகாணம்),**
**இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம்.**
**2023-03-13ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

## பசறை பிரதேச சபை

## பசறை பொதுச் சந்தைக் கட்டிடத்தொகுதியின் மேல் மாடிக்காக கேள்விகள் கோருதல்

பசறை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2023-04-01ஆம் திகதி முதல் 2026-04-01ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

- ➢ கேள்வி மாதிரிப் படிவ விநியோகம் : 2023-03-13ஆம் திகதி முதல் 2023-03-23ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
- ➢ கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் : 2023-03-24ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை
- ➢ கேள்வி திறக்கப்படுதல் : 2023-03-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

02. விலைமனுக் கோரல் மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் விலைக்கோரல் வைப்பு என்பன கீழே தரப்பட்டுள்ளன.

பசறை பொதுச் சந்தை கட்டிடத்தொகுதியின் மேல் மாடிக்காக கேள்வி கோரல்

| தொ. இல. | நிலத்தின் இடப்பரப்பு | தற்போதைய நிலை (வெற்று/ தம்வசம்/மீண்டும் ஒப்படைத்தல்) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புத் தொகை (ரூபா) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | குத்தகைக் காலம் வருடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 587.25$m^2$ | வெற்று | 2000.00 | 10000.00 | 1,620,000.00 | 03 |

கேள்வி நிபந்தனை விபரப் படிவத்தை பசறை பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பசறை பிரதேச சபை தன்னத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை பசறை பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசியின் ஊடாக விசாரித்தறிந்து கொள்ளலாம். (அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்)

தொலைபேசி இலக்கம்: 055 2288274

**ஆர்.எம். ஞானதிலக்க,**
**தலைவர்,**
**பிரதேச சபை, பசறை.**
**2023-03-08.**

---

## மாநகர சபை - குருநாகல்

# பெறுகை அறிவித்தல்

குருநாகல் மாநகர சபையில் கீழ்க்காணும் சேவைகளை நடத்திச் செல்வதற்காக திறந்த போட்டி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | சேவை | படிவக் கட்டணம் (+வெட் 15%) ரூ. | கேள்விப் பிணை வைப்பு/ கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|
| 1. | குருநாகல் மாநகர சபையின் புதிய கடைத் தொகுதியின் சுத்திகரிப்பு சேவையை நடத்திச் செல்லல் - 2023ம் ஆண்டிற்கான கேள்வி கோரல் | 3,450.00 | 20,000.00 |
| 2. | வாகன நிறுத்துமிடத்திற்கான கேள்வி கோரல்<br>1. போதிராஜ மாவத்த வாகன நிறுத்துமிடம்<br>2. பெரகும்பா வீதிஇ வாகன நிறுத்துமிடம் | 3,450.00 | 10,000.00 |
| 3 | சிம் அட்டை விற்பனை நிலையத்திற்கான கேள்வி கோரல்<br>1. மக்கள் சந்தைக்கு அருகில் டிரான்ஸ் போர்மர் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் (15 x 10 அடி)<br>2. நீர்கொழும்பு வீதியில் மயான பூமி அருகில் (15 x 10 அடி)<br>3. புவக்கஸ் சந்தியில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் அருகில், ஓடைக்கு அருகில் (20 x 10 அடி)<br>4. வெஹெர சந்தியில் சதோச நிறுவனத்திற்கு அருகில் (15 x 10 அடி)<br>5. கொழும்பு வீதி, நிஷ்ஷங்க மாவத்த ஆரம்பமாகும் இடத்தில் (15 x 10அடி)<br>6. மல்கடுவாவ மைதானத்திற்கு அருகில் (15 x 10அடி)<br>7. வில்கொட தொழிலாளர் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு அருகில் (15 x 10 அடி)<br>8. தம்புள்ள வீதியில் லொறி நிறுத்துமிடத்திற்கு அருகில் (15 x 10 அடி) | 2,300.00 | 10,000.00 |

மேற்படி சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு ஐந்து வருட அனுபவமுள்ள அரசில் பதிவு செய்துள்ள நிறுவனங்களில் இருந்து திறந்த போட்டி விலைமனுக்களை கோருவதற்கு குருநாகல் மாநகர சபையின் மாநகர ஆணையாளர் தீர்மானித்துள்ளார். மேற்படி கேள்வி கோரலுக்காக கேள்வி ஆவணங்களை 2023.03.10 முதல் 2023.03.29 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் குருநாகல் மாநகர சபையின் கணக்குத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2023.03.30 பி.ப. 2.00 இற்கு மாநகர சபை கமிட்டி கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். ஏனைய விபரங்கள் கேள்வி ஆவணத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

**விபரங்களுக்கு: -**
**தொலைபேசி இல: 037-4941869**
**ஈமெயில் : ginumviyadam@gmail.com**
**பெக்ஸ் : 037-2228136**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**குருநாகல்.**
**2023.03.13**

---

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# இலங்கை புகையிரத சேவைகள்

## கேள்விக் கோரல் (IFB)

## வெல்லவ மற்றும் கனேவத்தைக்கு இடையில் 68M / 72CH புதிய பாலத்தை நிர்மாணித்தல்

**ஒப்பந்த இலக்கம் : SRS/F. 7854**

1. தலைவர், வழங்கல் சபை (மேஜர்) இலங்கை புகையிரத சேவைகள், பொது முகாமையாளர் சார்பில் **வெல்லவ மற்றும் கனேவத்தைக்கு இடையில் 68M / 72CH இரண்டு அப்புட்மன்ட்டுகள் மற்றும் பையரிலான புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கு** தகைமைகளைப் பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை பின்வருமாறு கோருகிறார்.

   வெல்லவா மற்றும் கனேவத்தைக்கு இடையில் (சுமார் 38 மீற்றர் நீளமான) **68M / 72CH** புதிய பாலத்தை நிர்மாணிப்பதில் மைக்ரோ பைல்ஸ் மற்றும் கொங்றீட் வேலைகள், /போம் வேலைகள், வலுவூட்டல் வேலைகள், நீர்ப்புகாத வண்ணம் பேணும் வேலைகள் மற்றும் ரிப்ரொப் பாதுகாப்பு வேலைகளுடன் மேலும் பல பணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

   மேற்குறித்த பணிகளை **270** நாட்களுள் நிறைவுச் செய்ய வேண்டும்.

2. கேள்விக்கோரல் தேசிய போட்டி நடைமுறைக்கேற்ப நடாத்தப்படும்.
3. வெளிநாட்டு பங்குதாரர்களுடனான கூட்டு முயற்சிகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு கேள்விதாரர்கள் இப்பணிக்கு அனுமதிக்கப்படுவதில்லை.
4. CIDA தரப்படுத்தலில் கறுப்புப் பட்டியலிடப்படாதவர்கள் மற்றும் வேறேதேனும் நிறுவனங்களில் கறுப்புப் பட்டியலிடப்படாதவர்கள் இக்கேள்விக்கோரலில் பங்குகொள்ள தகைமைப் பெறுவதோடு அவர்கள் பின்வரும் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:
   - கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) தரம் **C4 அல்லது அதற்கு மேற்பட்ட** தரத்தில் பாலம் நிர்மாணிப்பு தொடர்பில் பதிவினை மேற்கொண்டிருத்தல்.
5. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகைமைகள்:
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட கட்டுமானப் பணிகளின் ஒரு வருடத்திற்குரிய சராசரி வருமானம் ஆகக்குறைந்தது 135 ரூபா மில்லியன் காணப்படல்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரே மாதிரியான பாலம் நிர்மாணங்களை வெற்றிகரமாக மேற்கொண்டிருத்தல் மற்றும் ஒப்பந்ததாரரின் செயற்றிட்ட பெறுமதியானது 90 மில்லியன் ரூபாயாக காணப்படுவதோடு அது 9 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அதிகூடிய மதிப்புடன் குறைந்தளவு கால வரையறையில் செயற்றிட்டத்தை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஆகக்குறைந்த திரவச் சொத்துக்களின் அளவு (ஏனைய ஒப்பந்த பொறுப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட பின்) மற்றும் எந்த முற்பணமும் செலுத்தப்படாது இவ் ஒப்பந்தத்தின் கீழ் 43 மில்லியன் ரூபாவுக்கு குறையாமல் காணப்படல்.
   - குறிப்பிட்டவாறு தகைமையுடைய பணியாளர்களை பணிக்கமர்த்தல்.
   - பொது ஒப்பந்தச் சட்டம் 1987ஆம் ஆண்டு 3ஆம் பிரிவு 8ஆம் பகுதியின் அடிப்படையில் பொது ஒப்பந்த பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழைக் கொண்டிருத்தல்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதம பொறியியலாளர் **(புகையிரத மற்றும் பணிகள்), பிரதம பொறியியலாளர் - புகையிரம் மற்றும் பணிகள் காரியாலயம், இலங்கை புகையிரதச் சேவைகள், இலக்கம் 01, டீ.ஆர் விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10** (தொலைபேசி: 011 268 7318) ஊடாக அறிந்துகொள்ள முடிவதோடு கேள்விப்பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கு வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையில் **09.03.2023** முதல் **18.04.2023** வரை **பிரதி பொது முகாமையாளர் காரியாலயம் (வழங்கல் சபை), இலங்கை புகையிரதச் சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10** இல் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை **பிரதி பொது முகாமையாளர் (வழங்கல் சபை), இலங்கை புகையிரதச் சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இல்** 18.04.2023 வரை முப. 9.00 மணி முதல் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா இருபத்தைந்தாயிரம்** (ரூ.25,000/-) **ஐ** சமர்ப்பிப்பதன் மூலம் முழுமையான கேள்விப்பத்திரங்களை கொள்வனவு செய்திட முடியும். கொடுப்பனவு பணமாகவே செலுத்தப்பட வேண்டும்.
8. முத்திரையிடப்பட்ட கேள்விகளை **பிரதி பொது முகாமையாளர் (வழங்கல் சபை), இலங்கை புகையிரதச் சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10** இல் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிடவும் அல்லது **தலைவர், வழங்கல் சபை (மேஜர்) திணைக்களம், பிரதி பொது முகாமையாளர் (வழங்கல் சபை), இலங்கை புகையிரதச் சேவைகள், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் **19.04.2023 ஆம்** திகதி **பி.ப 14.00 மணிக்கு** முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும். பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விக்கோரல் நிறைவடைந்த பின்னர் கேள்விகள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
9. கேள்விகள் **16.08.2023** வரை செல்லுபடியாக வேண்டும்.
10. அனைத்து கேள்விகளுடனும் பிணைப்பாதுகாப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டியதோடு, கேள்விப்பத்திரத்தின் 11 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு, **பிரதி பொது முகாமையாளர், இலங்கை புகையிரதச் சேவைகள் க்கு சார்பாக பதினைந்து மில்லியன் ரூபா (ரூ.1,500,000.00)** பெறுமதியான **13.09.2023** வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட இலங்கையின் எந்தவொரு கொமர்ஷல் வங்கியிலிருந்து வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
11. கேள்விக்கோரலுக்கு முந்தைய கூட்டமானது மு.ப 10.00 மணிக்கு **03.04.2023 பிரதம பொறியியலாளர் - புகையிரத மற்றும் பணிகள் காரியாலயம், இலங்கை புகையிரதச் சேவைகள், இலக்கம் 01, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10** இல் நடைபெறும்.

**தலைவர்,**
**வழங்கல் சபை (மேஜர்) திணைக்களம்**

---

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண சபை

## தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## (ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுவூட்டும் திட்டம் (PSSP)

காலி தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக 2023.03.13 முதல் 2023.03.31 மு.ப. 10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். 2023.03.31 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண சுகாதாரத் சேவைத் திணைக்களத்தில் கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

| தொடர் இல | விபரம் | தேவைப்படும் பதிவு | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூ. | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு ரூ. | கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 01 | Repairing mf Palent Toilets System, Beams, Windows Replacement of Gutters of Children ward at HB Blapitiya, | C 7 அல்லது அதற்கு மேல் | 63000.00 | 2500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 02 | கட்டுவன பிரதேச வைத்தியசாலையின் இல 01 மற்றும் 02 கூரையை புதுப்பித்தல் | C7 & C6 | 48,000.00 | 2000.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 03 | இஹல பெலிகல்ல மாவட்ட வைத்தியசாலையின் வார்ட் இல. 1, 2 மற்றும் 3 இல் கூரையை பழுதுபார்த்தல் | C7 & C6 | 58,000.00 | 2500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 04 | வீரகெட்டிய வைத்தியசாலையின் வார்ட் இல 03 மற்றும் 04 கூரையை புதுப்பித்தல் | C7 & C6 | 76,000.00 | 2500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 05 | லுனுகம்வெஹெர பிரதேச வைத்தியசாலையின் வெளி சிகிச்சை அலகை பழுதுபார்த்தல் | C8, C7 & C6 | 78,000.00 | 2500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 06 | நாகுலுகமுவ பிரதேச வைத்தியசாலையின் அம்பியுலன்ஸ் கராஜ் மற்றும் சாரதி ஓய்வு அறையை நிர்மாணித்தல் | C7 & C6 | 51,000.00 | 2500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |

02. கேள்விப் பத்திரங்கள் 2023.03.13 முதல் 2023.03.30 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலே தரப்பட்டுள்ள தேவைப்படும் பதிவைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்மாண பயிற்சி மற்றும் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவுடைய மற்றும் தென் மாகாண சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு விண்ணப்பிக்கலாம். அங்கு அரச நிதி சுற்றுநிருப இல. 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதி மற்றும் 03/2021(1) மற்றும் 2021.01.11ம் திகதிய சுற்று நிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் பொருந்தும்.

03. கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளக் கூடிய தொ.பே.இல கீழக்காணுமாறு: 091-2231620/ 091-2224609/ 091-2223839

04. சமர்ப்பிக்கப்படும் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரே உறையில் இட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுந்து அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேலையில் கேள்வி சமர்ப்பிப்போர் அல்லது அவர் சார்பாக அதிகாரம் ஒப்படைக்கப்படும் பிரதி நிதியொருவருக்கு வருகை தருவதற்கு வேண்டப்படுகின்றது. பூர்த்தியற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி பிணைத் தொகையும் அரசுடமையாக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்காத கேள்விதாரர்களின் கேள்விப் பிணைத் தொகையும் அரசுடமையாக்கப்படும்.

05. மேற்படி கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைக் கட்டணம் தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு காசாக செலுத்துதல் அல்லது அரச பெறுகை செயற்பாட்டு கோவையின் 5:3:13 மாதிரியின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட குறித்த பெறுமதியுடைய பிணைமுறியொன்றை தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக சமர்ப்பிப்பதாயின் பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை செல்லுபடி காலம் 2023.03.30 முதல் 2023.07.15 வரையானதாக இருத்தல் வேண்டும்.

06. கேள்விகளின் செல்லுபடி காலம் 2023.06.17 வரையாகும்.

07. சகல விலைமனுக்களும் உள்ளடக்கப்படும் கேள்விப் பத்திரத்தினதும் அலகு ஒன்றின் விலைமனுக்கள் மற்றும் முழுத் தொகையை குறிப்பிடும் நிரல் மற்றும் சுருக்கம் (கழிவைகுறிப்பிடும் நிரலையும் உள்ளடக்கியதாக) வெளிப்படையான (transparent) செலோடேப் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**இல. 15, ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி.**
**2023.03.13**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தென் மாகாண சபை

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – மாத்தறை

01. மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் திறமை வாய்ந்த மற்றும் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் ஒப்பந்தத்திற்காக வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் வழங்கப்படும் காலம் : 2023-03-13ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-04-03ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வதை முடிவுறுத்தல் மற்றும் திறக்கப்படுதல் : 2023-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு

| தொ. இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுத் தொகை (வெட் இன்றி) ரூபா | நிர்மாணக் காலம் (நாட்கள்) | தேவையான CIDA பதிவு (கட்டிடங்கள்) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா | விலைக் கோரல் ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 1 | மிரிஸ்ஸ ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவின் வெளி நோயாளர் பிரிவை நவீனமயப்படுத்துதல் | 3,005,139.35 | 105 | C9, C8 and C7 | 31,000.00 | 5,000.00 |
| 2 | மொரவக மாவட்ட வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவின் திருத்தவேலைகள் | 4,560,116.02 | 105 | C9, C8 and C7 | 46,000.00 | 5,000.00 |
| 3 | தெவிநுவர ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவின் வாட்டு மலசலகூடத்தின் திருத்தவேலைகள் | 83,305.90 | 56 | C9 and C8 | 1,000.00 | 3,000.00 |
| 4 | தெவிநுவர ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவில் காத்திருக்கும் பிரிவை அமைத்தல் | 2,317,182.12 | 105 | C9, C8 and C7 | 25,000.00 | 5,000.00 |
| 5 | திக்வெல்ல பத்கம மாவட்ட வைத்தியசாலையின் சமையலறை திருத்தவேலைகள் | 2,317,807.60 | 105 | C9, C8 and C7 | 25,000.00 | 5,000.00 |
| 6 | மொரவக்க மாவட்ட வைத்தியசாலையில் காத்திருக்கும் பிரிவை நிர்மாணித்தல் | 3,737,830.35 | 105 | C9, C8 and C7 | 40,000.00 | 5,000.00 |
| 7 | மாரம்ப ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவில் காத்திருக்கும் பிரிவை அமைத்தல் | 3,324,207.90 | 105 | C9, C8 and C7 | 35,000.00 | 5,000.00 |
| 8 | கபுகம ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவில் வெளி நோயாளர் பிரிவின் மலசலகூட திருத்தவேலைகள் | 947,927.50 | 70 | C9 and C8 | 10,000.00 | 3,000.00 |
| 9 | தலல்ல மாவட்ட வைத்தியசாலையின் நீர்க்குழாய் முறைமையின் திருத்தவேலைகள் | 329,287.20 | 56 | C9 and C8 | 4,000.00 | 3,000.00 |
| 10 | ஊறுகமுவ மாவட்ட வைத்தியசாலையின் நீர் சேவையை நவீனமயப்படுத்துதல் | 367,196.00 | 56 | C9 and C8 | 4,000.00 | 3,000.00 |
| 11 | அக்குரெஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் ஆய்வுகூடத்தை அமைத்தல். | 645,028.50 | 70 | C9 and C8 | 8,000.00 | 3,000.00 |
| 12 | திக்வெல்ல மாவட்ட வைத்தியசாலையில் வேலியை நிர்மாணித்தல் | 855,059.00 | 70 | C9 and C8 | 10,000.00 | 4,000.00 |
| 13 | திக்வெல்ல மாவட்ட வைத்தியசாலையில் 01ஆம் இலக்க வார்ட்டின் தாழ்வாரத்தை நவீனமயப்படுத்துதல் | 1,365,178.90 | 105 | C9 and C8 | 15,000.00 | 3,000.00 |
| 14 | ஹக்மன ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவின் நீர் மூலாதாரத்திற்கு நீர்த் தொட்டி மற்றும் குழாய் வழியை அமைத்தல். | 36,043.00 | 56 | C9 and C8 | 1,000.00 | 3,000.00 |
| 15 | கம்புறுபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் நீர் மூலாதாரத்திற்காக நீர்த் தொட்டி மற்றும் குழாய் வழியை அமைத்தல். | 511,022.50 | 70 | C9 and C8 | 10,000.00 | 3,000.00 |
| 16 | முலட்டியன சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் திரிபோஷ களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | 621,840.00 | 70 | C9 and C8 | 10,000.00 | 3,000.00 |
| 17 | வெலிபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் திரிபோஷ களஞ்சியசாலையை நிர்மாணித்தல் | 2.730,087.30 | 105 | C9, C8 and C7 | 30,000.00 | 5,000.00 |
| 18 | தெவிநுவர ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவின் களஞ்சியசாலை மற்றும் சிகிச்சை அறையை பிரித்து வேறாக்குதல் | 1,288,844.00 | 105 | C9 and C8 | 15.000.00 | 3,000.00 |
| 19 | தெவிநுவர ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவின் சுவனாரி சிகிச்சைக்கான காத்திருக்கும் இடத்தை நிர்மாணித்தல் | 3,215,360.00 | 105 | C9, C8 and C7 | 35,000.00 | 5,000.00 |
| 20 | கம்புறுபிட்டிய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் சுவனாரி சிகிச்சைக்கான காத்திருக்கும் இடத்தை நிர்மாணித்தல் | 519,341.00 | 70 | C8 and C7 | 6,000.00 | 3,000.00 |
| 21 | திஹகொட சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் சுவனாரி சிகிச்சைக்கான காத்திருக்கும் இடத்தை நிர்மாணித்தல் | 2,500,048.00 | 105 | C9, C8 and C7 | 25,000.00 | 4,000.00 |
| 22 | திக்வெல்ல வைத்தியசாலையில் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணித்தல் | 3,468,609.66 | 105 | C9, C8 and C7 | 35,000.00 | 5,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் இந்த விலைக்கோரல்கள் இடம்பெறும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. இந்தப் பெறுகையின் கீழ் நிறைவேற்றுவதற்குள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக உள்ளதால் (வெட் மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) 2023-02-09ஆம் திகதிய 04/2016(iv) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA முன்னுரிமை உரித்தாகும் வகையில் 2021-01-11ஆம் திகதிய 03/2020ஆம் இலக்க நிதிச் சுற்றுநிருபமும் ஏற்புடையதாகும்.

05. ஆர்வமுள்ள திறமை வாய்ந்த விலைமனுதார்கள் மேலதிகத் தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை 2023-03-13ஆம் திகதி முதல் 2023-04-03ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி, மாத்தறை, பரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்துக் கொடுப்பனவுகளையும் ரொக்கப் பணத்தில் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் 041-2222154 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

06. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மாத்தறை, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் பெற்றுக்கொண்ட 2023-08-02ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

07. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தத்திற்கு இயைபான விலைமனுக்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் மூலப்பிரதியில் மூலப்பிரதி என்றும் நகல் பிரதியில் நகல் பிரதியென்றும் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து, அந்த இரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த உறையை முத்திரைக் குறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விபரங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-04-...... ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, மாத்தறை மாவட்ட சுகாதார பணிப்பாளர் அலுவலகம், பரமுல்ல, மாத்தறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு குறித்த பதிவேட்டில் பதிவிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2023-07-04ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

09. விலைமனுக்கள் 2023-04-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடுத்து மாத்தறை, மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாத்தறை, மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்,**
**பரமுல்ல,**
**மாத்தறை.**

**2023-03-13ஆம் திகதி.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உரு. இல. | ஒப்பந்த இல. | செயற்றிட்டத்தின் பெயர் | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | ஆகக் குறைந்த ICTAD பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | அமைவிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | DSD/DEV/ 03/08/2023 | கல்முனை - சாந்தன்கேணி யுனிட்டியிலுள்ள நீச்சல் தடாகம் மற்றும் நீச்சல் தடாக பார்வையாளர் கூட நிர்மாணத்தில் மிகுதி வேலைகள் | 180 நாட்கள் | C5 மற்றும் SP 02 அல்லது அதற்கு மேல் | 9,000.00 | 350,000.00 வங்கி உத்தரவாதம் | சாந்தன்கேணி யுனிட்டி - கல்முனை |
| 2 | DSD/ DEV/ 02/ DSC/2022/ GAM/IND/ BW | கம்பஹா - மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதியிலுள்ள உள்ளக விளையாட்டரங்கின் மிகுதி வேலைகள் | 180 நாட்கள் | C5 அல்லது அதற்கு மேல் | 14,000.00 | 925,000.00 வங்கி உத்தரவாதம் | மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி - கம்பஹா |

2. மேற்கூறப்பட்ட அமைவிடங்களில் இந்த வேலைத் தளங்கள் உள்ளன.
3. வேலைகளில் பிரதானமாக நீர்க் குழாய் வேலைகள், மின்சாரம் மற்றும் சிவில் வேலைகள் என்பன உள்ளடங்குகின்றன.
4. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இயைபுடைய ICTAD பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களப் (பொறியியல் சேவைகள்) பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் பின்வரும் முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. 2023-03-13ஆம் திகதியிலிருந்து 2023-04-03ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேற்கூறப்பட்ட அட்டவணையிலுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் காசாளருக்குச் செலுத்திய பின்னர், மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. விலைமனுப் பிணை முறியானது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்டதாக அல்லது கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு செலுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாளிலிருந்து 119 நாட்களுக்கு விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2023-04-03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். (விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டாம் மாடியிலுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்). பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி: 0112669884, தொலைநகல்: 0112669884**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## ABC கல் (கலப்புக் கல்) வழங்கப்பெறுதல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பின்வரும் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குத் தேவையான ABC கல் (கலப்புக் கல்) வழங்கப் பெற்றுக்கொள்வதற்கு திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | ABC கலப்புக் கல் $m^3$ | கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி | | கேள்விகள் திறக்கப் படுதல் |
|---|---|---|---|---|---|---|
| | | | | பணமாக ரூபா | வங்கி / காப்புறுதி பிணை மூலம் ரூபா | |
| PRDA/WP/ PRO/2023/ 17 **விலைமனுக்கள் வழங்குதல்** 2023-03-13 - 2023-03-27 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 மணி வரை | **கொழும்பு மாவட்டம் -** கொழும்பு நி.பொ. அலுவலகம், மொரட்டுவ நி.பொ. அலுவலகம் (மடபாத்த முற்றவெளி), அவிசாவளை நி.பொ. அலுவலகம் | 1500<br>1000<br>500 | 1.000.00 + SSCL + VAT | 114,600.00 | 229,200.00 | 2023-03-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |
| PRDA/WP/ PRO/2023/ 18 **விலைமனுக்கள் வழங்குதல்** 2023-03-13 - 2023-03-27 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 மணி வரை | **களுத்துறை மாவட்டம் -** களுத்துறை நி.பொ. அலுவலகம், (தெல்துவ முற்றவெளி) அகலவத்தை நி.பொ. அலுவலகம் ஹொரணை நி.பொ. அலுவலகம் | 1000<br>1000<br>1500 | 1.000.00 + SSCL + VAT | 133,700.00 | 267,400.00 | |
| PRDA/WP/ PRO/2023/ 19 **விலைமனுக்கள் வழங்குதல்** 2023-03-13 - 2023-03-27 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 மணி வரை | **கம்பஹா மாவட்டம் -** நீர்கொழும்பு நி.பொ. அலுவலகம், (பராமரிப்பு வேலை) நீர்கொழும்பு நி.பொ. அலுவலகம் (செயற்றிட்டத்திற்கு) உடுகம்பொல நி.பொ. அலுவலகம் | 300<br>1500<br>500 | 1.000.00 + SSCL + VAT | 88,000.00 | 176,000.00 | |

02. மேற்கூறப்பட்ட கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் திறக்கப்படுதல் மேற்கூறப்பட்ட வகையில் இந்த அலுவலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ. இலக்கம் 011-5676903**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

## கேள்வி அழைப்பு

### பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை

**கேகாலை**

### காதிதாதிகள் மற்றும் பாவணைப் பொருட்களை கொள்வனவு செய்தல்

1. கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் மற்றும் அதன் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் பாவணைக்காக காகிதாதிகள் மற்றும் பாவணைப் பொருட்களை வழங்குதல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2023.04.04 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு கேகாலை சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து 2023.03.13 முதல் 2023.04.03 வரையான வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கு மற்றும் கொள்வனவு செய்வதற்கு முடியும்.

3. பொருட்களை பற்றிய விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை www.rdhskegalle.lk இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**கேகாலை.**
**தொ.பே.இல: 035-2222549/ 035-2222578/ 035-2222571**
**பெக்ஸ்: 035-2221253**

## நானாவித அறிவித்தல்

### நிறுவனத்தை கலைப்பு செய்தல் தொடர்பான அறிவித்தல்

**மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்**

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் கொழும்பு 13, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை, இல. 297/2 எனும் விலாசத்தில் அமைந்துள்ள கம்பனி பதிவு இல. PV 1335 கொண்டுள்ள ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கட்டிங் (பிறைவட்) லிமிடட் எனும் கம்பனியை ஒடுக்குதல் விதிகளின் கீழ் கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

சீ டீ த பொன்சேகா அன்ட் சன்ஸ் (பிறைவட்) லிமிடட்
இல. 37, எலுவில, பாணந்துரை

**மனுதாரர்**

**வழக்கு இலக்கம் : CH/54/2022/CO**
**தன்மை : கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)**

மேல் மாகாணத்தின் வரத்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை ஒடுக்கவதற்காக 2022 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023 ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**
**ஜே.சஜுனி செனவிரத்ன**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**
**இல. 391 -2/2, புதுக்கடை, கொழும்பு 12**

**குறிப்பு:** அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## கொலொன்ன பிரதேச சபை

### பாவனைக்கு உதவாத வாகனங்களை ஏலவிற்பனை செய்தல்

கொலொன்ன பிரதேச சபைக்கு சொந்தமான பாவனைக்கு உதவாத வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்காக கேள்வி கோரல் கீழ்க்காணும் திகதிகளில் குறித்த கொலொன்ன பிரதேச சபை வளாகத்தில் இடம்பெறும்.

**கேள்வி கோரல்.**

I. மாதிரிகள் விநியோகித்தல் - 2023.03.13 முதல் 2023.04.03 பி.ப. 3.00 வரை
II. ஏற்றுக்கொள்ளல் - 2023.04.04 மு.ப. 10.15 வரை
III. திறத்தல் - 2023.04.04 மு.ப. 10.30

- மாதிரிப் பத்திர கட்டணம் மற்றும் கேள்விக்கான பிணைவைப்பு அட்டவணை கீழ்க்காணுமாறு:

| தொடர் இல | வாகன இலக்கம் | வகை | உற்பத்தி ஆண்டு | கேள்விப் பிணை (மீளளிக்கப் படும் ரூ. | மாதிரிப் பத்திர கட்டணம் (மீளளிக்கப் படாத) ரூ. | குறைந்த பட்ச கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| 01 | SG RA XXXX | FARMTRAC -TRACTER | 2006 | 2,000.00 | 1,500.00 | 200,000.00 |
| 02 | SG RV XXXX | LOCALLY BUILT TRAILER | 2007 | 1,750.00 | 1,500.00 | 175,000.00 |
| 03 | SG RC XXXX | STANDARD - TRACTER | 2011 | 15,000.00 | 2,500.00 | 1,500,000.00 |

- வாகனங்களைப் பரீட்சித்தல் 2023.03.13 முதல் 2023.04.03 வரை அலுவலக நேரங்களில் சபை வளாகத்தில் இடம்பெறும்.
- கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் கொலன்ன பிரதேச சபைக்கு உரியது. மேலதிக விபரங்களை கொலொன்ன பிரதேச சபையின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்து அறியலாம்.

  தொலைபேசி இலக்கம் - 045-2260275

**தலைவர்,**
**கொலொன்ன பிரதேச சபை**
**கொலொன்ன.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வைத்திய ஆராய்சி நிலையம், கொழும்பு-08

**(2023/2024) (2022/2023) ஆண்டுகளுக்காக வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் வளிச்சீராக்கல் முறைமைகளை சேர்விஸ் செய்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள் ஆகியவற்றிற்கு கேள்விகளை அழைத்தல்**

கொழும்பு-08, வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் வளிச்சீராக்கல் முறைமைகளின் சேர்விஸ் செய்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வைத்திய ஆராய்ச்சி நிலைய பணிப்பாளரின் சார்பாக, கொழும்பு-08, வைத்திய ஆராய்ச்சி நிலைய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். பூர்த்தி செய்ய வேண்டிய பிரதான வேலைகள் வளிச்சீராக்கல் முறைமைகளின் (Split type) சேர்விஸ் செய்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள் ஆகியனவாகும்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.

**2023.03.13 ஆம் திகதியிலிருந்து 2023.04.11 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவைச்** செலுத்திய பின்னர், கொழும்பு-08, வைத்திய ஆராய்ச்சி நிலைய நிருவாக அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, **2023.04.12** ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் மேலேயுள்ள முகவரியான பணிப்பாளர், வைத்திய ஆராய்ச்சி நிலையம் என அனுப்பப்படலாம் அல்லது வைத்திய ஆராய்ச்சி நிலைய கணக்கிடல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Quotation for Service and Maintenance of Air Conditioning Systems – MRI/EI/ME.REP/2022/02" என குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களும் 40,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருப்பதுடன் செல்லுபடியாகும் காலப்பகுதியானது மூடும் திகதியிலிருந்து 119 நாட்களாகும்.

விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வைத்திய ஆராய்ச்சி நிலையம்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 011 2693532**

**மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் கொழும்பில் நடைபெறுகின்றது)**

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் கொழும்பு 07, கிரெகரி வீதி, இல. 67ஏ எனும் முகவரியில் அமைந்துள்ளதும் கம்பனி பதிவு இல. PV 121730 கொண்டுள்ளதுமான **ஒபோர்டோ டிவலப்மன்ட் (பிறைவட்) லிமிடட்** எனும் நிறுவனத்தை கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்வதற்கான கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் விடயம் தொடர்பானது.

வழக்கு இலக்கம் : CHC/16/2022/CO
தன்மை : கலைப்பு செய்தல்

ஸ்டெசன் எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிடட்,
இல.833, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, த.பெ. 1970, கொழும்பு 14.

மனுதாரர்.

மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை கலைப்பு செய்வதற்கான மனுவொன்று, 2022 மார்ச் மாதம் 30 ஆம் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனுதாரர் சார்பாக சட்டத்தரணி கே. உபேந்த்ர குணசேகர என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு 2023 மே மாதம் 22 ஆம் திகதி நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், குறித்த மனுவின் அடிப்படையில் கட்டளையை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கு அல்லது ஆதரவளிப்பதற்கு குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் இருப்பார்களாயின் அந்த குறித்த நபருக்கு தற்போதைய செயற்பாடுகளுக்காக அவற்றை விசாரணை செய்வதற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம் :- திரு. உபேந்த்ர குணசேகர
மனுதாரரின் சட்டத்தரணி
இல. 135-1/3, குணசிங்கபுர அலுவலக கட்டிடம்,
புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு 12

குறிப்பு:- அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. கே. உபேந்த்ர குணசேகர, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 மே மாதம் 21ஆம் திகதி பிற்பகல் 06.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி**

## நானாவித அறிவித்தல்

### நிறுவனத்தை கலைப்பு செய்தல் தொடர்பான அறிவித்தல்

**மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல்**

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் கொழும்பு 13, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை, இல. 297/2 எனும் விலாசத்தில் அமைந்துள்ள கம்பனி பதிவு இல. PV 1335 கொண்டுள்ள ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கட்டிங் (பிறைவட்) லிமிடட் எனும் கம்பனியை ஒடுக்குதல் விதிகளின் கீழ் கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

சீ.டீ.டீ.ஈ.எப் மெனுவெக்சரர்ஸ் அன்ட் மர்சன்ட்ஸ் (பிறைவட்) லிமிடட்
இல. 37, எலுவில, பாணந்துரை

**மனுதாரர்**

**வழக்கு இலக்கம் : CH/55/2022/CO**
**தன்மை : கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)**

மேல் மாகாணத்தின் வரத்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2022 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல்மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023 ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஒப்பம்:**
**ஜே.சஜுனி செனவிரத்ன**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**
**இல. 391 -2/2, புதுக்கடை, கொழும்பு 12**

**குறிப்பு:** அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை, நுவரெலியா

### கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான அழைப்பு

சுகாதார அமைச்சின் சார்பில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் இலங்கை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023-03-13ஆம் திகதி முதல் 2023-03-31ஆம் திகதி மு.ப. 11.30 மணி வரையில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனடுத்து மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இதில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் 2023-03-13ஆம் திகதி முதல் 2023-03-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரர் தமது தகுதியை நிரூபிப்பதற்கான சாட்சி மற்றும் விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்தியதற்காக வைத்தியசாலை கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | கோவை இலக்கம் | விடயம் | தகுதி | மீளளிக்கப் படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | GH/NE/ AL/01/04/2023/2024 | 2023/2024ஆம் வருடங்களுக்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (300,000.00 ரூபாவுக்கு மேற்படாத பராமரிப்பு ஒப்பந்தங்களுக்கு) | C 09 அல்லது அதற்கு மேல் | ரூபா 3000.00 |
| 02 | GH/NE/ AL/01/05/2023/2024 | 2023/2024ஆம் வருடங்களுக்கான பழைய வைத்தியசாலை சாக்கடை முறைமையை பராமரிப்பதற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (300,000.00 ரூபாவுக்கு மேற்படாத சாக்கடை முறைமை பராமரிப்பு ஒப்பந்தங்களுக்கு) | C 09 அல்லது அதற்கு மேல் | ரூபா 3000.00 |

மேலதிக விபரங்களுக்கு பிரதான அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். விலைமனுவொன்று ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா.**
**தொலைபேசி இல. 052 2222310 (நீடிப்பு 2271 அல்லது 2272)**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**மஹாவலி நீர்ப் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)**
**திட்ட முகாமைத்துவ பணிமனை**
**கடன் இல. 3625 - SRI**

### விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் காலத்தை நீடித்தல்

**(திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)**

| ஒப்பந்தப் பொதியின் பெயர் | ஒப்பந்த இல. | முன்னைய பத்திரிகை விளம்பரம் பிரசுரமான திகதி | விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| மேலதிக சாதனங்கள் சகிதம் GPS யானை வானொலி கொலர்களின் (GPS Elephant Radio Collars ) பெறுகை | MI/MWSIP/ADB/ GDS/ Radio Collars - OCB/2021/072 | 2023-01-30 | 2023-03-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

விலைமனுக்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அவைகள் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்ட பின் உடன் திறக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**இல. 493 1/1, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி இல. : +94 11 2675810**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

# இலங்கை அணியின் வெற்றிக்கு மேலும் 09 விக்கெட்டுகள் தேவை




அஞ்சலோ மத்தியூஸின் 14ஆவது டெஸ்ட் சதத்தின் உதவியோடு நியூசிலாந்து அணிக்கு 285 ஓட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்திருக்கும் இலங்கை அணி இன்று (13) கடைசி நாளில் வெற்றிக்காக ஒன்பது விக்கெட்டுகள் தேவைப்படும் நிலையில் களமிறங்கவுள்ளது.

கிறைஸ்சேர்ச் ஹேக்லி ஓவலில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று ஆட்ட நேரம் முடியும்போது வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்து போராடி வருகிறது.

இதன்படி நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு கடைசி நாளில் 257 ஓட்டங்களை பெற வேண்டி இருப்பதோடு இலங்கை அணி 9 விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும்.

ஆரம்ப வீரர் டெவோன் கொன்வோய் 5 ஓட்டங்களுடன் இருந்தபோது கசுன் ராஜித்த அவரை வெளியேற்றினார். இந்நிலையில் டொம் லதம் 11 ஓட்டங்களுடனும் கேன் வில்லியம்சன் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து அணி இதுவரை நான்காவது இன்னிங்ஸில் துரத்தி வெற்றியீட்டி அதிகூடிய ஓட்டங்கள் 324 ஆகும். அது 1994 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக லங்கஸ்டர் பார்க் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 5 விக்கெட்டுகளை இழந்து எட்டிய இலக்காகும். இந்த மைதானம் 2011 பூகம்பத்தில் சேதமடைந்தது.

இந்நிலையில் நியூசிலாந்து இலங்கை நிர்ணயித்திருக்கும் வெற்றி இலக்கை எட்டினால் அந்த அணி டெஸ்ட் வரலாற்றில் பெற்ற முன்றாவது அதிகூடிய ஓட்ட இலக்காக சாதனை படைக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி நேற்று நான்காவது நாளில் 83 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து நெருக்கடியான சூழலிலே இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் 20 ஓட்டங்களுடன் நேற்றைய தினத்தை ஆரம்பித்த மத்தியூஸ் தனது அனுபவ ஆட்டத்தின் மூலம் கைகொடுத்தார்.

நைட் வொட்சமான வந்த பிரபாத் ஜயசூரிய 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின் மற்றொரு அனுபவ வீரரான தினேஷ் சந்திமாலுடன் இணைந்த அவர் 105 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டதன் மூலம் இலங்கை தனது ஓட்டங்களை 200ஆக அதிகரித்துக் கொண்டது.

சந்திமால் 42 ஓட்டங்களை பெற்ற நிலையில் டிம் சௌதியின் பந்துக்கு போல்டானார். பின்னர் மத்தியூஸ் தனஞ்சய டி சில்வாவுடன் சேர்ந்து மேலும் 60 ஓட்ட இணைப்பாட்டத்தை பெற்றார்.

இதன்போது மத்தியூஸ் 235 பந்துகளுக்கு 11 பௌண்டரிகளுடன் 115 ஓட்டங்களை பெற்ற நிலையில் மட் ஹென்ரியின் பந்துக்கு ஆட்டமிழந்தார். கடைசி நேரத்தில் இலங்கை ஓட்டங்களை அதிகரிக்க வேகமாக ஆடிய தனஞ்சய டி சில்வா 73 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 105.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 302 ஓட்டங்களை பெற்றது. நியூசிலாந்து சார்பில் பந்துவீச்சில் பிளயர் டிக்னர் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு மட் ஹென்ரி 3 விக்கெட்டுகளையும் அணித்தலைவர் டிம் சௌதி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்த டெஸ்டில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 355 ஓட்டங்களை பெற்றதோடு நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸுக்காக 373 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் எதிர்பார்ப்புடனேயே நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதன்படி அந்த வாய்ப்பை பெற இலங்கை இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரை முழுமையாக வெல்வது அவசியமாகும்.

### போட்டியின் சுருக்கம்

**இலங்கை (முதல் இன்னிங்ஸ்) – 355 (92.4)** குசல் மெண்டிஸ் 87, திமுத் கருணாரத்ன 50, அஞ்சலோ மத்தியூஸ் 47, டிம் சௌதி 5/64, மட் ஹென்ரி 4/80

**நியூசிலாந்து (முதல் இன்னிங்ஸ்) – 373 (107.3)** – டரில் மிட்சல் 102, மட் ஹென்ரி 72, டொம் லதம் 67, அசித்த பெர்னாண்டோ 4/85, லஹிரு குமார 3/76

**இலங்கை (இரண்டாவது இன்னிங்ஸ்) – 302 (105.3)** அஞ்சலோ மத்தியூஸ் 115, தனஞ்சய டி சில்வா 47*, பிளயர் டிக்னர் 4/100, மட் ஹென்ரி 3/71

**நியூசிலாந்து (இரண்டாவது இன்னிங்ஸ்) – 28/1** – கசுன் ராஜித்த 1/5

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

## வக்னருக்குப் பதிலாக பிரேஸ்வெல் அழைப்பு



நியூசிலாந்து இடது கை வேகப் பந்து வீச்சாளர் நீல் வக்னர், முதுகு மற்றும் தொடைப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் காயத்தில் இருந்து மீண்டு வர ஆறு வாரங்கள் வரை எடுத்துக் கொள்ளும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிறைஸ்சேர்ச்சில் நடைபெற்றுவரும் டெஸ்ட் மூட்டியின் மூன்றாவது நாளின் கடைசி நேரத்தில் வக்னர் மைதானத்தில் இருந்து வெளியேறினார். இந்நிலையில் நேற்று (12) நான்காவது நாள் ஆட்டத்தில் பங்கேற்பதற்காக உடற்தகுதி சோதனையில் அவர் தோல்வி அடைந்தார். எனினும் தேவையெனில் அவர் துடுப்பாட்டத்தில் ஈடுபடுவார் என கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்து குழாத்திற்கு வேகப்பந்து வீச்சாளர் டப் பிரேஸ்வெல் அழைக்கப்பட்டுள்ளார். 32 வயதான பிரேஸ்வெல் கடைசியாக டெஸ்ட் போட்டியில் ஆடியது 2016 இல் அகும். அவர் ஏற்கனவே நியூசிலாந்து குழாத்தில் இடம்பெற்றிருக்கும் டிம் சௌதி, மட் ஹென்ரி மற்றும் பிளயர் டிக்னர் ஆகிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுடன் மேலதிகமாக இணையவுள்ளார்.

## காயம் குறித்து சமீர ட்விட்டரில் விளக்கம்



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர, தாம் காயமடைந்திருப்பதாக ஊடகங்கள் வெளியிட்ட செய்திக்கு ட்விட்டரில் விளக்கம் அளித்துள்ளார்.

சத்திர சிகிச்சையில் இருந்து கிட்டத்தட்ட தாம் முழுமையாக குணமடைந்திருப்பதாகவும் புதிதாக காயங்களுக்கு உட்படவில்லை என்றும் சமீர தெரிவித்துள்ளார். தாம் பந்துவீச்சில் ஈடுபடும் வீடியோ ஒன்றையும் பகிர்ந்திருக்கும் அவர், தேசிய சுப்பர் லீக் ஒருநாள் தொடருக்காக அடுத்த வாரம் தாம் கண்டி அணியில் இணையவிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

முழங்கால் காயத்திற்காக கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் சத்திரசிகிச்சை செய்துகொண்ட சமீர, காயத்தில் இருந்து முழுமையாக மீண்டு வரும் நிலையில் எதிர்வரும் இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளுக்கான இலங்கை குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சமீரவுக்கு கணுக்காலில் வலி ஏற்பட்டிருப்பதாகவும் அவர் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் பங்கேற்க மாட்டார் என்றும் சில ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் சமீர ட்விட்டரில் கூறியிருப்பதாவது, ‘சத்திரசிகிச்சையில் இருந்து நான் கிட்டத்தட்ட முழுமையாக குணமடைந்துவிட்டேன். மீண்டும் காயத்திற்கு உள்ளாகவில்லை. நான் மீண்டும் பயிற்சிகளை ஆரம்பித்திருப்பதோடு, தேசிய சுப்பர் லீக் தொடரில் கண்டி அணிக்காக அடுத்த வாரம் ஒருநாள் போட்டிகளில் ஆட எதிர்பார்த்துள்ளேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

## சம்பியனானது சாந்தகுரோஸ்



காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்த சனசமூக நிலையமும் இணைந்து “விபுலாநந்த விளையாட்டுக் கழகத்திலிருந்து உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாக” நடாத்திய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சொறிக்கல்முனை சாந்தகுரோஸ் அணி வெற்றிபெற்றது. சனிக்கிழமை (11) மாலை காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் எவர்கிரீன் சம்மான்துறை அணியை சாந்தகுரோஸ் அணி 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

கழகத்தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்றன.

## கோஸ்ரெல் வோரீயஸ் சம்பியன்



ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று ஹம்ரென் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற உள்ளகஅரங்கு கால்பந்தாட்டசுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் மருதமுனை கோஸ்ரெல் வோரீயஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. அக்கரைப்பற்று உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை இரவு (11) நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் கல்முனை யூத் விளையாட்டுக் கழகத்தை 5–2 என்ற கோல் கணக்கில் மருதமுனை கோஸ்ரெல் வோரீயஸ் அணி வீழ்த்தியது.

அரசின் திட்டத்தை எதிர்த்து

## இஸ்ரேலில் வரலாறு காணாத பாரிய மக்கள் ஆர்ப்பாட்டம்



இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவின் அரசு உயிர் நீதிமன்றத்தின் அதிகாரங்களை குறைப்பதற்கு திட்டமிடுவதற்கு எதிராக தொடர்ச்சியாக பத்தாவது வாரமாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கானோர் திரண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் பேரணியில் சாதனை எண்ணிக்கையாக 500,000 மக்கள் திரண்டதாகக் குறிப்பிட்டிருக்கும் ஏற்பாட்டாளர்கள், இஸ்ரேலிய வரலாற்றில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் என்று வர்ணித்துள்ளனர்.

அரசின் இந்த சீர்திருத்தம் ஜனநாயத்தை குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது என்று விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த சீர்திருத்தத்தில் நீதிபதிகளை தேர்வு செய்வதில் அரசு செல்வாக்கு செலுத்த வாய்ப்பு அளிப்பதோடு நிர்வாகத்திற்கு எதிரான தீர்ப்புகளில் அல்லது சட்டத்தை ரத்துச் செய்வதில் உச்ச நீதிமன்றத்தின் திறனை கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த சீர்திருத்தத்தின் மற்றொரு அம்சமாக உச்ச நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை 120 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையான 61 வாக்குகள் மூலம் ரத்துச் செய்யவும் அதிகாரம் அளிப்பதாக உள்ளது.

இந்த விவகாரம் இஸ்ரேலிய சமூகத்தில் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. ஊழல் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்திருக்கும் பிரதமர் நெதன்யாகு, அதில் இருந்து தப்புவதற்கான தனிப்பட்ட முயற்சியாகவே இந்த சீர்திருத்தம் உள்ளது என சிலர் குறிப்பிடுகின்றனர்.

# சர்வதேச செய்திகள்

## ஈரான்–சவூதிக்கு இடையில் மீண்டும் இராஜதந்திர உறவு




மத்திய கிழக்கின் பிராந்திய எதிரிகளான ஈரான் மற்றும் சவூதி அரேபியா ஏழு ஆண்டுகளின் பின் இராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்த இணங்கியுள்ளன.

சீனாவில் இரு தரப்பு அதிகாரிகளும் நான்கு நாட்களாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னரே இந்த எதிர்பாராத அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சவூதி முன்னணி ஷியா மதத் தலைவர் ஒருவர் மீது மரண தண்டனை நிறைவேற்றியதால் ஈரானில் உள்ள சவூதி தூதரகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதை அடுத்தே 2016 ஜனவரியில் சவூதி ஈரானுடனான இராஜதந்திர உறவை துண்டித்தது.

அது தொடக்கம் சுன்னி மற்றும் ஷியா அண்டை நாடுகளுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்திருந்தது.

இரு தரப்பும் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்த முயலும் நிலையில் பரஸ்பரம் அச்சுறுத்தலாக கருதுகின்றன. லெபனாம், சிரியா, ஈராக் மற்றும் யெமனில் வெளிப்படையாக எதிர் எதிர் தரப்புகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றன.


இந்நிலையில் அடுத்த இரு மாதங்களுக்குள் தூதரகங்களை மீண்டும் திறப்பதாக இரு நாடுகளும் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்ததோடு இரு நாடுகளும் வர்த்தக மற்றும் பாதுகாப்பு உறவுகளை நிறுவவுள்ளதாக கூறியுள்ளன.

அமெரிக்கா இந்த அறிவிப்பை அவதானத்துடன் வரவேற்றுள்ளது. பிராந்தியத்தில் பதற்றத்தை தணிப்பதற்காக எந்த ஒரு முயற்சிக்கும் ஆதரவு அளிப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு சபை பேச்சாளர் ஜோன் கிர்பி, ‘ஈரான் தங்களின் கடப்பாடுகளை நிறைவேற்றுமா என்பதை பார்க்க வேண்டி உள்ளது’ என்றார்.

இந்த உடன்பாட்டை எட்டுவதற்கு மத்தியஸ்தம் வகித்த சீனாவுக்கு ஐ.நா தலைவர் அன்டோனியோ குட்டரஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

‘வளைகுடா பிராந்தியத்தில் நீடித்த அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான’ முயற்சிகளுக்கு உதவ தயாராக உள்ளோம் என்று ஐ.நா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## இத்தாலியில் 13000 குடியேறிகள் மீட்பு



இத்தாலியில் 1,300க்கும் அதிகமான குடியேறிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்தாலியக் கடலோரக்காவல் படை 3 படகுகளை மீட்டுத் துறைமுகங்களுக்குக் கொண்டு வந்தது. 2 வாரங்களுக்கு முன் இத்தாலியை நோக்கி வந்த படகு முறிந்ததில் குறைந்தது 74 குடியேறிகள் உயிரிழந்த சம்பவத்தின் பின் இது நிகழ்ந்துள்ளது.

இத்தாலியை நோக்கி இவ்வாண்டு இதுவரை 17,000க்கும் அதிகமான குடியேறிகள் வந்துள்ளனர்.

கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகம்.

குடியேறிகள் பெரும்பாலும் ஆப்கானிஸ்தான், சிரியா, எகிப்து, பங்ளாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றனர்.

ஆட்கடத்துபவர்களுக்குக் கடுமையான சிறைத்தண்டனையை இத்தாலிய அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 13ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.